# அனுபவ வைத்திய திரட்டு

பாரம்பரிய மருத்துவர்களினதும்
மூலிகை மருந்து, குடி மருந்து,
பூச்சு மருந்து வகைகள் உட்பட....


ஆக்கியோன்:

**Dr. சி. சி. வேலும்மயிலும்**

(வைத்திய சிரோண்மணி, வைத்திய கலைமாலை)

அல்வாய் கிழக்கு.

# அனுபவ வைத்திய திரட்டு

நம் ஈழத்திருநாட்டில் தமிழர்தம் தொன்மைக்கும் மாண்புக்கும் சான்று பகரும் ஓர் சிறப்புத்துறையென்றால் அது தமிழ் வைத்தியமாம் சித்த வைத்தியமே. உலகெங்கும் நவீன தொழில்நுட்பமும் விஞ்ஞான வளர்ச்சியும் உச்சநிலையடைந்துள்ள இன்றைய யுகத்தில், ஆரோக்கியம் என்பது மிகுந்த சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் - பாரம்பரிய மருத்துவம் இனக்குழுக்களுக்குரிய மருத்துவம் ஆயுள்வேதம் இவை அகில உலகத்தினது கவனத்தினையும் ஈர்த்துள்ளது என்றால் மிகையாகாது. தமிழ் மருத்துவமும் இதற்கு விதிவிலக்கல்ல.

சமூக, பொருளாதார, அரசியல், சமய செல்வாக்குகளின் காரணமாகவும் எம்மவரின் மனப்பாங்கு காரணமாகவும் 18, 19, 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் வைத்தியம் தன் செழுமையையும், வகிபாகத்தையும் இழந்து நிற்கின்றது. அண்மைக்கால இடம்பெயர்வுகளும், சுனாமி, வெள்ளம் இவைகளும் கொஞ்சநஞ்சமிருந்த பாரம்பரிய அறிவினையும் அறிவுப்பொக்கிசங்களையும் மேலும் நலிவிற்குள்ளாக்கியுள்ள இந்நிலையில் கல்லூரிகளிலும், பல்கலைக்கழக மட்டத்திலும் தமிழ் மருத்துவம், சித்த மருத்துவ கல்வி இடம் பெற்றுள்ள போதிலும், அவை பெரும்பாலும் ஏட்டுக்கல்வி எனும் தரத்திலேயே காணப்படுகின்றது. நம் பாரம்பரிய வைத்தியத்தில் நிபுணத்துவமும் பரீட்சயமும் வாய்ந்தவர்கள் இரண்டாம்தர அந்தஸ்த்திலேயே காணப்படுகின்றதனால் பழைய காலங்களைப் போல் தம் வைத்திய அறிவை தமது வாரிசுகளுக்கு வழங்கிப் பாதுகாப்பதிலும் 18ம், 19ம் நூற்றாண்டிற்குப் பின்பு பலரும் முன்வரவில்லை. ஓர் சிலர் தமிழ் பிரதேசங்களில் அவ்வாறு தமது அனுபவங்களையும் அறிவையும் நூலுருவாக்கிய போதிலும் அவையும் இன்று அழிந்தொழிந்து பாவனைக்கு கிடைப்பதற்கு அருமையான நிலையே காணப்படுகின்றது.

அடுத்தபுறம் மேல்நாட்டு மிசனரிமாரின் வருகை, மேல் நாட்டு மருத்துவ ஆதிக்கம் இவைகள், தமிழர் மருத்துவத்தில் ஏற்படுத்திய தாக்கமும் பின்னடைவும், தமிழ் பாரம்பரிய வைத்திய துறையை முற்றாக அழித்தொழித்து விட முடியாத நிலையையும் மறுப்பதில்லை. அப்படியான பாரம்பரியமாக, பரம்பரை பரம்பரையாக மருத்துவத்தில் ஈடுபடுபவர்கள் இம்மருத்

துவ அறிவை தம் தனிச் சொத்தாகவும் குடும்பச் சொத்தாகவும் பேணிப் பாதுகாக்க முனைந்தமை மட்டுமன்றி, இம் மருத்துவத்துறை அறிவு துஷ்டத் தனமாகவோ, தவறாகவோ பாவிக்கப்படக்கூடாது என்பதனாலோ என்னமோ மறைத்தும் மறைமொழிகளில் கூறியும், எழுதியும் போனமையால், இத்துறை சார் இளைய தலைமுறையினருக்கு கற்றல் கற்பித்தல் யாவும் மிக்க கடினமாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் கொழும்பு சுதேச வைத்தியக் கல்லூரியில் பட்டம் பெற்று, பின்பு தான் கற்றறிந்த அறிவுடன், மக்களுடன் மக்கள் மைந்தனாக இணைந்து செய்த சேவையில் பெற்ற அனுபவத்தின் மூலம் கைகண்ட மருந்துகளை மருத்துவ உலகிற்கும் மானிட சமூகத்திற்கும் நலம்பயக்க வேண்டும் என்ற இவ்வனுபவ வைத்திய தொகுப்பு அதி உன்னத விடயதானமாகும். இதன்பயன், இதனை நாம் பயன்படுத்துவதின் மூலம் தான் பெற்றுக் கொள்ள முடியும். இன்றைய சூழ்நிலையில் சித்த மருத்துவர்கள் என்ற பெயரில் ஆங்கில மருந்துகளையோ ஆயுள்வேத மருந்துகளையோ பாவிக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டீருக்கும் எம் மருத்துவர்களுக்கும் மருத்துவ மாணவர்களுக்கும் இந்நூல் ஓர் வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது. ஏனெனில் முற்று முழுதாக நூலாசிரியர் கைகண்ட மருத்துவ ஞானம் இது. அவரின் அனுபவம் என்ற கலாசாலையில், நோயாளிகளான ஆய்வுகூடங்களில் பரீட்சித்த ஆய்வு அறிக்கை இது.

சிங்களத்தில் "வெதகம ரஜகம" என்பார்கள். ஆனால் வைத்தியர் வேலும்மயிலும் என யாவராலும் அன்பாக அழைக்கப்படும் இவர் ஓர் சமூகத் தொண்டனாக சமூக சேவையாளனாக தொண்டாற்றிக் கொண்டிருப்பவர்.

பொதுவாக பாரம்பரிய மருத்துவர்கள் தம் அறிவை இலகுவில் வெளிப்படையாக கூறுவதில்லை என்ற குற்றச்சாட்டு பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்படுவதுண்டு, ஆனால் வைத்தியர் வேலும்மயிலும் அவர்கள் இன்றைக்கு 30 வருடங்களுக்கு முன்பிருந்தே தான் அறிந்த அறிவை மருத்துவ நுணுக்கங்களை பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்களுக்கும் வழங்கியுள்ளார். அது மட்டுமன்றி அவர் செய்த மக்கள் சுகாதார சேவைக்கு, இந்தியய இராணுவத்தினர் யாழில் வியாபித்திருந்த சமயம் இந்திய இராணுவத்தளபதி இவர் பற்றி கூறிய வசனங்கள் அதாவது "ஓர் வைத்தியருக்கு மக்கள் ஆதரவு இவ்வளவு தூரம் இருக்கும் என்பது இலங்கையில் மட்டும்

தான் முதலில் இவரின் மூலம் காணக்கூடியதாக உள்ளது'' என்று இவர் சம் பந்தபட்ட சந்தர்ப்பம் ஒன்றில் கூறியதே சான்றாகும். சாதாரணமாக எம் நாட்டில்வைத்தியர்கள் தம்மிடம் சேவை நாடி வருபவர்களுக்கு மட்டுமே தமது சேவையை வழங்குவது வழக்கம். ஆனால் வைத்தியர் வேலும்மயி லும் அவர்கள், ஏழைகள், அநாதரவானோர், முதியோர் இவர்களுக்கு அவர் கள் இருப்பிடம் தேடிச்சென்று அவர்களுக்கு மருத்துவம் செய்தது மட்டு மன்றி அதனை தனக்கு ஓர் பெறற்கரிய பேறாகவே கருதி, அவர்கள் அவர் சேவைக்கு கொடுக்க முனையும் ஊதியத்தை கூடி இரு கரங்கள் கூப்பி வணங்கி ஏற்க மறுத்த கனவான். இவ்வாறான சந்தர்ப்பங்களை எனது தந்தை யாரின் தாயாரின் சுகயீன காலத்திலும் நான் கண்டதுண்டு.

இவர் சமகால ஆயுள்வேத வைத்தியர்கள் மத்தியில் மிகவும் வேறு பட்ட குணநலன்களையும், சமூகம், மக்கள், ஆத்மீகம் பற்றிய அதீதமான அக்கறையும் கொண்டவர், பணம் பெற ஏற்ற தொழில் மருத்துவத் தொழில் என்றும், சிகிச்சை நாடிவரும் நோயாளிகளிடம் எவ்வகையாக, எவ்வா றெல்லாம் பணம் பறிக்கலாம் என்று தமது தொழிலை நடத்தும் வைத்தியர் களிடையே தன்னை தனித்துவமாக அடையாளம் காட்டி நிற்கும், சேவைக் காகவே தன்னை அர்ப்பணித்து வாழும் தொண்டர் - வைத்தியர் வேலும் மயிலும் அவர்கள் தன் வாழ்நாளில் பெற்ற அனுபவங்களை தொகுத்து நூலுருவில் இந்நூலை ஆக்கி அளித்தலும் அவரது தனித்தன்மைக்கு ஓர் சான்றாகும். அனுபவ வைத்தியத் தொகுப்பான இந்நூலுக்கு என் கருத்துக் களை தெரிவிக்கக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை வழங்கிய மாண்புமிகு வைத்தியர் வேலும்மயிலும் அவர்களின் சேவைக்கும், அறிவிற்கும் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிப்பதுடன் ''இன்பமே சூழ எல்லோரும் வாழ தமிழ் மருத்துவம் தழைக்க'' எல்லாம் வல்ல சிவமான இறையருளையும், சித்தர்க ளின் ஆசியையும் வேண்டி நிற்கிறேன்.

வணக்கம்

**வைத்திய சிரோண்மணி பண்டித, வைத்திய நிபுணர் விக்னவேனி செல்வநாதன்**

**சுதேச வைத்தியத்துறைக்கான தேசிய நிறுவனம்**
**நாவின்ன,**
**மகரகம.**
**26.11.2013**

**இல. 27 முதலாம் சப்பல் லேன்,**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு 06.**

உ

# முன்னுரை

வைத்திய கைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை வைத்தியர்கள், பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடனும், பரம்பரை பரம்பரையாக கையாளப்பட்டு அவற்றை வெளியிடாது தம்முடனே அற்று போகும் வண்ணம் செயல்பட்டு வந்துள்ள முன்னைய வைத்தியப் பெருமக்களின் குறை நீங்கவும், முன்போல் எமது வைத்திய முறைகள் அழிந்து விடாமல் எம் ஊர் வைத்தியர்களிடம் பெற்ற முறைகளையும் எனது அனுபவங்களையும் தொகுத்து எல்லோருக்கும் தெரிவு படுத்த வேண்டும் என்னும் நோக்குடன் உருவானதே இவ் **"அனுபவ வைத்தியத் திரட்டு"** எனும் இந்நூல்.

இந்நூலை வெளியிட தங்கள் கையாட்சி முறைகள், ஏட்டுச்சுவடிகள் என்பன மனமுவந்து தந்து உதவிய வடமராட்சி வைத்திய சிகாமணிகளுக்கு முதற்கண் என் நன்றியறிதலை சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலைப் பற்றி ஆய்வுரை கொடுத்த வைத்தியகலாநிதி விக்கினவேனி செல்வநாதன் B.S.M.S. (SL) M.D. (India) அவர்களுக்கும், குறுகிய காலத்தில் அச்சிட்டு தந்த நியூ ஜெட் பிரின்ட்ஸ் நிறுவனத்துக்கும், உரிமையாளருக்கும் எனது நன்றிகள்.

**வைத்திய சிரோண்மணி, வைத்திய கலைமாலை Dr. சி.சி.வேலும்மயிலும்**

**அல்வாய் கிழக்கு,**
**அல்வாய்.**

# அனுபவ வைத்திய திரட்டு

கசாயம்

அடைசல்

குடிமருந்து (அடைசலும்)

காயம்

காடி

பூச்சு

தப்பல்

கட்டு மருந்து (பற்று)

ஒற்றடம்

புகை - வேது

நையம்

ஏனாதி

அஞ்சனம்

சர்பத்

குந்தமொடு வல்லயம் சமுசாடுசக்கரம் கூர்வாள் இடக்கையுடனே
கூரிய மழுப்படைச் சூல தண்டாயுதம் கொடுவச்சிரவே லேந்தியே
எந்த வழி செல்லுவோம் எங்கெங்கு போடுவோம் என்ற மரர் மனமஞ்சவே
இரண கோரமாகவே தக்கனார் முடிவெட்டி எரி ஓம மிட்ட சதுரா
வந்தவர் நடுங்கவும் யாக சாலைத் தேவர் மாமுனிவர் தானசையவும்
மாலயனு மஞ்சவே எண்டிசையிலுள்ளோர்கள் வகிதுபகீரென்னவே
சந்தகம் வில்லி வாழ் வாழ்க என்றுல சர்வ அவதார முகிலே
சங்கமன ரெண்டனும் தெண்டனிடு பாதனே சதுரான வீரேசனே.

# அவியல் குடிநீர்

- நெல்லிக்காய், தான்றிக்காய், மாயாக்காய், இருசீர் தேற்றாவிதை அத் திப்பட்டை, ஆவரசம் பட்டை மாதுளம் பிஞ்சு, தேன்

- பிரமி, சிறுகாஞ்சோன்றி வல்லாரை, கற்பூரவள்ளி, பெருத்தகடுக்காய், மிள கு, திப்பிலி, ஈருள்ளி, மருவுகருஞ்சீரகம், ஓமம், மதுரமொரு நிறையாய் வைத்தவித்துக் கொடுத்துவரில் அக்கரம், வெப்பு, இருமல், கிரந்தி தீரும்.

  (காஞ்சோன்றிவேர், மற்றவை இலை இருசீர் ஏலம் செவ்வள்ளியும் சேர்க்கலாம்)

- கொடி மல்லிகையிலைபூ, கற்பூரவள்ளி, கோதில் சிறுகாஞ்சோன்றி மிளகிருசீரகமும் படிமேவு வல்லாரை வீர உள்ளி திப்பில் பஞ்சவர்கள் முல்லை இலை கூட்டி ஒன்றாயவித்த குடிநீரை அந்திசந்தி அக்கரம் அவியல் கழிச்சல் தீரும். இவற்றுடன் அரத்தை சுக்கு ஓமம் அக்கறா மாயாக்காய் பாடம் இலை, பூ பொன்னிற வறுப்பு.

### அக்கர வீக்கக்குடிநீர்

- கராம்பு, நற்சீரகம், நெல்லிக்காய், திப்பிலி, அக்கறா, கடுக்காய், மாயாக் காய், செஞ்சந்தனம், மல்லி வகை கள. 1, தூது வட்டு லாமிச்சு கண்டக் கத்திரிவேர் நாயுருவிசமூலம் 8:1 ஆக்கி கசாயம் அக்கரத்திற் சொன்ன வீக்கம் வெப்பு குறையும்.

- முத்தற்காசு, கவிள்தும்பை வேர், அறுகுவேர், சிறுகாஞ்சோன்றித்துளிர், திரிகடுகு, கடுக்காய், உள்ளி வகை ஒரு பிடி அல்லது (சரக்கு 1 கள. உள்ளி 1 பிடி) தூய்க்கவருமக்கரத்தில் வீக்கமாறும்.

- திப்பிலி, சுக்கு, மல்லி, அசமதாகம், இருசீர், மதுரம், அக்கரா, கிராம்பு, ஏலம், அரத்தை, வல்லாரல் இலையை வறுத்துச் சரக்குடன் சேர்த்து ஆக் கவும் 8:1 கசாயம்.

- சாத்திரபேதி, கல்நார், கெருட பச்சை, சாதிக்காய், மாயாக்காய் அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும்.

- நற்சீர், ஏலம், மதுரம், திரிபலை, திற்பிலி, கோட்டம், கண்டங்கத்தரி, தூதுவளை, குறுந்தொட்டி பொன்னாங்காணி, சீந்திற்றண்டு, பற்பாடாகம், முத்தற்காசு, லாமிச்சை, கராம்பு, குமரிச்சருகு களை.1 8:1 ஆக்கி திப்பிலி தேன் மேற்படி கலந்து குடிக்கவும்.

- சந்தனம், மல்லி, கடுக்காய், செவ்வள்ளி, நாயுருவி, தூதுவளை, வட்டுவேர், மாதுளம்பிஞ்சு, அத்திப்பட்டை, கொட்டைப்பாக்கு, இலந்தை இலை, வல்லாரை இவை குடிநீர்.

- கற்பூரவள்ளி, மொசுமொசுக்கை, கறுத்தப்பூ, மதுரம், ஈர்உள்ளி, சுக்கு 4:1 ஆக்கி வேப்பெண்ணெய் சேர்த்து ஈயவும்.

## மாந்தக் குடிநீர்

நிம்ப நுணாச்சூதம் இனத்தி(புளி)னோடு நிர்க்குண்டி கொடுவேலி உத்தமாணி கொம்புற்ற இவையெல்லாம் ஈர்க்குக் கூட்டிக் கொண்டுள்ளி வசம்பு பொடுதலையும் ஓமம், கருஞ்சீரகம், நாகவல்லி சம எடை 8:1 ஆக்கி காலை, மாலை கொடுக்கவும்.

துன்பமறுமிருசீரம் நாகவல்லி சுகமாகச் சமனிடை நற்கசாயம் வைத்து
கும்ப நிகருந்தனத்து மட நல்லாரே குடிப்பாட்ட மாந்தமது குறைந்து போகுமே.

உத்தமாணி பொடுதலையும் உவந்த வசம்பு நாயுருவி
சித்தமாவின் துளிர் நாவற் சேர்ந்த துளிரும் இவையல்லாற்
சுத்தச் சுக்கு மோதகமும் சொல்லும் வெள்ளை உள்ளியுடன்
நித்தம் குடிநீர் குடிப்பீரால் நேர்போர் மாந்தம் வேறுமே.

## கருக்குக் குடிநீர்

- உப்பு வேப்பிலை வசம் போடுள்ளியுங் கருக்கி ஒன்றாய்
அப்புவிட்ட வித்த நீரையளவதாயுட்பு கட்ட
தப்பிலா மாந்த மெல்லாம் தறு இடா தகலும் உள்ளி
மெய்ப்படி சுட்டுக் கொள்ளில் விட்டிடும் மாந்தமன்றே.

- ஓமம், உள்ளி, மிளகு, திற்பலி கசாயம் 8:1

- பொடுதலை ஈளிக்குகள் வேம்பு மா் புளி நுணா நொச்சி 8:1

- இயங்கம் வேர் ஆடாதோடைவேர் புங்கம்பட்டை கொடிவேலிவேர் கொன்றைவேர் இந்துப்பு சமனெடை 8:1

- இஞ்சி உள்ளி சாறணை மாங்கொட்டைப்பருப்பு வெந்தயம் அரைத்து வில்லை தட்டி எலுமிச்சை இலையில் வைத்துச் சட்டியில் சுட்டு தேன் சீலையால் முடிச் சுற்றித் தண்ணீர் விட்டவித்துக் கொடுக்கவும்.

- புங்கமிலை ஈர்க்கு புளியிலை ஈர்க்கு நொச்சி ஈர்க்கு மாவிலை ஈர்க்கு வேப்பிலை ஈர்க்கு கறிவேப்பிலை ஈர்க்கு நாரத்தை இலை ஈர்க்கு இயங் இலை ஈர்க்கு அவுரி இலை ஈர்க்கு பொன்னாவரை இலை ஈர்க்கு பொடுதலை வேலி பருத்தி இலை வகை ஒரு பிடி ஓமம் கடுகு ரோகணி இந்துப்பு வகை 1/2 ரூபா எடை 4:1 சரக்கு 3 ஐயும் கிளிகட்டி அவித்து வடித்தபின் அரைத்துக் கூட்டவும்.

- நொச்சி நுணா முருங்கை இவை ஈர்க்கு பொடுதலை வேலிப்பருத்தி இலை தைவேளை வேர் வகை ஒரு பிடி (இளவறுப்பு ஆக வறுத்து) ஓமம் சுக்கு திப்பிலி மிளகு வசம்பு வகை 1/4 ரூபா எடை 4:1 கசாயம் சரக்குகள் கிளிகட்டி அவித்தரைத்து கூட்டலாம். முதியோர் கூந்தலும் கூட்டலாம். தேனும் கூட்டலாம். பொருமல் புளிப்பு கழிச்சல் மாந்தம்.

- வசம்பு, மாஞ்சில் உள்ளி, ஓமம், சுக்கு, மிளகு, திற்பலி, கருஞ்சீர், ஆமை யோடு சமனெடை 8:1 ஆக்கவும்.

- வேப்பங்காம்பு, கறிமுருங்கைக்காம்பு, கறிவேப்பிலைகாம்பு, தோல் சீவிய இஞ்சி, மிளகு இவை வகை கள 1 சிறுக நறுக்கி வாசனை உண்டா கும்படி வறுத்து 1/4 படி நீர் விட்டு 4:1 ஆக வற்றிய பின் 6 பங்கு செய்து 1 பங்கில் 1/2 தேக்கரண்டி தேன் கூட்டி 4 மணித்தியாலயத்திற்கு ஒருமு றை கழிச்சலின்றேல் தேன் நீக்கி கறியுப்புக் கூட்டிக் கொடுக்கவும்.

  6 மாதம் - 1 வருட பாலருக்கு 6 பங்காக்கி ஈயவும்.

  1 வருட - 3 வருட பாலருக்கு 4 பங்காக்கி ஈயவும்.

- 6 மா உட்பட்டவர்களுக்கும் தேவையைக் கண்டு கூட்டலாம்.

- அன்றேல் ஓமம் உள்ளி வறுத்து

- இஞ்சி மிளகு வசம்பு கறிவேப்பங்காம்பு வறுத்து அவித்து ஈயவும்.

**அஜீரண பேதிக்கசாயம் வெற்றிலை கருக்குக் குடிநீர்**

- 25 - 30 வெற்றிலை, சுண்ணாம்பு தடவி, மிளகு 1/2 பலம் செய்முறை விபரம் patharthakanavilakkan I 175 ல் பார்த்து அதே போல் செய்து குடிக்க எத்தகைய அஜீரண பேதியும் குணமாகும்.

- தோல் சீவிய இஞ்சி, வெந்தயம், மிளகு வகை கள 1 எடுத்து வறுத்து மிளகு வெடிக்கும் பதத்தில் எடுக்கவும். இஞ்சி பொன்னிறமாகும் பதத்தில் ஓமம் நற்சீரகம், வகை கள 2 போட்டுக் கருகாமல் வறுத்து வாசனை யுண்டாகும் சமயத்தில் ஒரு அவுன்சு தேனை விட அது பொங்கி எழும் பும் உடனே அதனுள் 1 படி நீர் விட்டவித்து 1/4 படியாக்கி இறக்கி வடித்து ஒரு போத்தலில் அடைத்து வைத்திருக்கவும். இதை 4 பங்காகப் பிரித்து 1 நாளைக்கு 4 மணித்தியாலயத்துக்கு ஒருமுறை 3 நாட் தொடர்ந்து ஈய அதிசார சுரம், மாந்தத சுரம், மாந்தம் தீரும்.

**வீக்கக் குடிநீர்**

- பஞ்சபாண்டவர் முல்லை, வீழி, வெளவிலொட்டி, பூசனித்தண்டு சுரைத் தண்டு, வல்லாரை, சுக்கு, மல்லி, கடுக்காய், திற்பலி, மிளகு, மண்டூரம் இவை 8:1 கசாயமாக்கி ஆண்பனைப் பாளை சுட்ட சாம்பர் மேற்பொடி தூவி குடித்தல்.

- ஆணங்காய், நீர்முள்ளி, நாயுருவி இவை சாம்பர். சவற்காரம், வெண் காரம், நவச்சாரம், சீனக்காரம், பெருங்காயம், இந்துப்பு வாழைச்சரை சுட்ட சாம்பர் வகை கள 2 மூன்றுபடி நீரை 8:1 கசாயம்.

- சீனக்காரம், பொரிகாரம், இந்துப்பு, கற்பூரம், சாத்திரபேதி, இளநீரில்

- அத்திப்பட்டை, தென்னங்குரும்பை, பருத்திப்பஞ்சு, ஆடாதோடை வேர், பூ, மொட்டு, கற்பூரவள்ளி, பஞ்சபாண்டவர் முல்லை, வல்லா ரல் இருசீர் நெல்லிக்காய், கடுக்காய், கைப்பு, களிப்பாக்கு கோட்டம் ஈர உள்ளி, 4 படி நீரை 8:1

## வீக்கம் சுரம்

- உள்ளி வசம்பு பெருங்காயம் உகந்தகடுக்காய் மோதகமும்
கொள்ளிந் துப்பு மிளகு சுக்கு கோட்டம் இருசீர் குமட்டிக்காய்
நள்ளுந்தான்றி வகைகளஞ்சு தானே இவைகளவித்திடுநீர்
உள்ளே கொள்ள வீக்கமெல்லாம் ஓடி ஒழிக்கும் கண்டீரே.

## சுரத்தில் மலசலம் கட்டிய வீக்கக்குடிநீர்

- பொன்மேனியாய் வறுத்த கருஞ்சீர், மிளகு, கரிசாலை, வகை 1/4 பலம் சுக்கு சிற்றரத்தை கடுக்காய்த்தோல் வகை 1/2 பலம் இடித்து அரை படியாக்கி 1/4 படி நீராக்கி 1 வரகன் இலவங்கப்பட்டைத் தூள் 2 சிட்டிகை பொரித்த வெங்காரம் போட்டு 6 மணிக்கொரு முறை.

## பாண்டு வீக்க கசாயம்

- திரிபுர மெரித்தான்சமூலம் முக்கரைச் சாறணைவேர் நெருஞ்சிமூலம் நீர்முள்ளி இலை வீழி இலை முசுட்டை இலை வகைப்படி 3 விரை போக்கிய கடுக்காய் 21, களிப்பாக்கு 20 கிட்டம் உள்ளி வகை 1 பலம் சிவதை கடுரோகிணி இந்துப்பு இஞ்சி வகை 3 பலம் 8:1 ஆக்கி 3 நாள் 6 வேளை கொள்க. பாண்டு விஷ பாண்டு எவ்வகை வீக்கமும்

- சங்கு நெரிஞ்சி சத்திச் சாறணைக்கோவை நீர்முள்ளி திரிபலை வேப்பந் தோல் கிட்டம் அரபொடி மணலி பரமி சுரைக்கொடி ஈருள்ளிபங்காம்ப ாளை செங்கத்தாரி சிறு குறிஞ்சா வனநெத்து மயிர்மாலை வகைப்பலம் 6. 4 படி கோசலம் 4 படி காடி விட்டு 1 படியாக்கிய கசாயம் 1/4 படி வீதம் 3 நாள் 6 வேளை. பாண்டு முதலான எவ்வகை வீக்கமும்

- நீர்முள்ளி கீழ்க்காய் நெல்லி வீளி வேர், கோவைத்தண்டு, பூவரசம்பட்டை கரிப்பான செந்தொட்டி வேர் சிறுபிளைவேர் நாவற்றுளிர் நெரிஞ்சிவேர் சிறுகீரை வேர் நிலவாகை உசிலம்பட்டை வகை பலம் 6, கடுக்காய் கடுகுரோணி, கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், திற்பலி வகை வராக எடை 6, 8:1 ஆக்கிய கசாயம் 1/4 படி வீதம் 3 நாள் 6 வேளை எவ்வகை வீக்கமும் பொருமலும் தீரும். உப்புப்புளி நீக்கிய பத்தியம்.

- காமாலையால் வீங்கி மலங் கட்டியிருந்தால் சீயாக்காயைத்தூள் பண்ணி நீரிற் போட்டு 3 சாமம் வெயிலில் வைத்து ஊறவிட்டு வெல்லம் சேர்த் துக் குடித்திடக் கழியுமன்றே.

### வீக்கக்குடிநீர்

- சுரையிலை, வீளி இலை, கஞ்சாங்கோரைசமூலம், நீர்முள்ளி, நாயுருவி, இவைகள் சமூலம் வகை ஒரு பிடி நிழலில் உலர்த்தவும். ஆணங்காய், சுட்டசாம்பல், மதுரம், கருஞ்சீர் சதகுப்பை சுக்கு, திப்பிலி, ஓமம், திரிப லை, வெங்காயம், வகை கன 3 அசம்.கோ. சிறுபீளை சலங்கள் வகை 1/4 படி இளநீர் 3/4 படி சாம்பலை பொட்டளி கட்டிப்போட்டு இந்த நீர்களிலேயே அவித்து (நறுக்கி இடித்து) 4:1 ஆக்கி நேரம் 1 பலம் 1 நாள் 3 முறை எந்த வீக்கமும் 8 நாளில் வற்றும். புளி, காரம் நீக்கி உண வருந்த வேண்டும்.

### கோசலக் குடிநீர்

- சிந்தில் சிற்றமட்டி வெள்ளைச் சாறணைவேர் வகை கன 1 கடுக்காய் 8 கோசலம் 2 படி விட்டு காச்சி அந்தி சந்தி 7 நேரம் குடிக்கவும்.

### கரப்பன் வீக்கக்குடிநீர்

- திப்பிலி, சுக்கு, கடுக்காய், உலுவா மிளகு வவ்விலொட்டி வீழி சங்குப்பி எருமை முல்லை கருவேம்பு இலையும் வேரும் இடித்து சமனெடை முத்தற் காசு கூட்டி ஊறி 2 நாழி நீரை உழக்காக்கிய கசாயம் குடிக்க கரப் பன் வீக்கம் தீரும்.

### கெற்பணி வீக்கக் குடிநீர்

- சாறணை 5 கள பச்சை இஞ்சி 10 கள நீர்முள்ளிவேர் 12 கள கடுக்காய் 6 கள இவையெல்லாம் தட்டி 4 படி நீரை 4:1 ஆக்கி 8 நேரமும் குடிக்கவும்.

- சாறனை 8 கன பச்சை இஞ்சி 12 கள தட்டி 1/2 படி பசுப்பால் 1/2 படி நீர் விட்டு 4:1 ஆக்கி 5 நேரம் குடிக்க கெற்பணி மேல் வீக்கம் தீரும்.

### பெற்றவள் வீக்கக் குடிநீர்

- பற்படாகம் நீர்முள்ளி கொடிக்கழற்சித்துளிர் நொச்சித்துளிர் துளசி இயங்கு தென்னங்குருத்து தூதுவளை வேர் வகை 1 பிடி திப்பிலி சுக்கு உள்ளி இவை வகை கள 2 மிளகு கள 1 நாழி நீரை உரியாக்கிய கசாயம் கரும்புக்கட்டியுடன் குடிக்கலாம். பெற்றவள் வீக்கம் தீரும்.

### பெற்றவள் வயிறு வீங்கினால் குடிநீர்

- எருக்கு, முருங்கை, கண்டங்கத்தரி, திறிகடுகு, உள்ளி, ஓமம் குடிநீர் காச்சி குடிக்க வயிற்று வீக்கம் வற்றும்.

### வீக்கக் குடிநீர்

- பிரமி வல்லாரல் நீர்முள்ளி கையாந்தகரை வல்லூட்டி முல்லை சுரை இவை இலை கற்றாளஞ்சருகு வகை 1 படி பீச்சுவினாத்திவேர் இயங்கம் வேர் கடுக்காய் கடுகு ரோசணி உள்ளி சுக்கு வாய் விளங்கம் திற்பலி மது ரம் அமுக்கிராய் வகை கள 3 சுத்தித்த கிட்டம் நெல் உமி வகை 4 கள பொட்டனி கட்டி 2 ஐயும் போடவும். 8:1 ஆக்கி நேரம் மேசைக்கரண்டி 2 முறையாக 7 நாளில் குணமடையும். பின் ஏற்ற மருந்துண்ணவும்.

### கெற்பனி வீக்கக் குடிநீர்

- வீளிவெளவிலொட்டி சிறுகாஞ்சோன்றி பேய்ப்புடல் எருமை முல்லை இவை வேர் பிரமி கையாந்தகரை நிலபாவல் நீர்முள்ளி இவைகள் மூலம் சுரை இலை, பிறங்கை நாறி இலை இவை ஒரு பிடி மல்லி, சுக்கு, திற்பலி, கள 4 கடுக்காய், கராம்பு கள 2 பொடி பண்ணி 8:1 ஆக்கிய கசாயம் 3 கள பொரி காரம் மேற்பொடி 3 நாள் 6 நேரம் குடிக்கவும். குளிப்பு (ஆலஞ் சருகு, நீர்முள்ளி, காக்கணங்கொவ்வை வீளிவெளவிலொட்டி)
- சுரைத்தண்டு, நீர்முள்ளி, கையாந்தகரை, நீற்றுப்பூசனித்தண்டு நாயுருவி பிரமி முத்தற்காசு வகை 5 ரூபா எடை சுக்கு 1 1/2 எடை. 48 அவு நீரை 8:1 ஆக்கி 2 அவுன்ஸ் வீதம் காலை, மாலை குடிக்க கர்ப்பவதி வீக்கம் மாறும்.

## வெப்புப்பாவை வீக்கம்

- நீர்முள்ளி வல்லாரல் அறக்கீரை சுரை பூசனி வீளிவெளவிலொட்டி பஞ் சபாண்டவர்முல்லை பீச்சு விளாத்தி இவை இலை. இருசீர் திரிகடுகு திரிபலை மதுரம் ஈரவெங்காயம் சிற்றரத்தை கடுகு ரோசனை இவை யெல்லாம் 8:1 ஆக்கிய கசாயம் வீக்கம் வடியும். பொரிகாரம் பொரித்து மேற்பொடி போடவும்.

- தினந்தாளி சங்கு, சுரை, சிறுநெருஞ்சில், தூது, மனத்தாலல், நீர்முள்ளி மாமாலைகனந்துவரில் வெண்காரம் மேற்பொடியாம் மேவு குடிநீரிலி டில் கண் காணா வீக்கம் போகும் காண்.

- காரம் எவாச்சாரம் கனத்த இந்துமேற் பொடியாய் ஈர உள்ளி இஞ்சிச் சாறு தனிலிடில் பாரமுள்ள வீக்கம் வற்றித்தூக்கமுண்டாம் மேலும் பூ சில் நிகழ்ந்து வாய்க்கவே சாய்க்கும் மலம்.

## காமாலைக் கசாயம்

- கீழ்க்காய் நெல்லி கரிசனாங்கண்ணி பேய்ப்புடல் வெண்மிளகு சோம்பு வில்வை வேர் வகை 2 1/2 வராகனெடை 1/2 படி ஜலத்தை 4:1

## பாண்டுக் கசாயம்

- வெள்ளைச் சாரணைசமூலம், வேப்பம்பட்டை, பேய்ப்புடல், சுக்கு, கடுகு ரோகணி, சீத்தில் கொடி, மரமஞ்சள், கடுக்காய்த்தோல் வகைபலம் 1/4. 1/2 படி ஜலத்தில் 2 மணித்தியாலம் ஊற வைத்து 1/2 ஆழாக்காக எரித்து பிசைந்து வடிகட்டி குடிக்கவும். தினம் ஒரு வேளை 5 நாள்.

## செங்கமாரிக் கசாயங்கள்

- நெற்பொரி, சந்தனம், கண்டதிற்பலி, சீரகம், மல்லி, நெல்லிக்காய், மது ரம், வெங்காயம், சிற்றாமுட்டி, பேராமுட்டி தாமரைவளையம், வில்வை இலை, வேப்பங்கூர் சிறுபயறு இலாமிச்சு வகை கள 3 இவைகளை நறுக்கி பொடித்து 4 படி நீரை 8:1 ஆக்கி நாளொன்றுக்கு 3 முறையாக இப்படியே 8 நாட்கள் குடிக்கவும்.

- சிற்றமட்டி, வில்வை, சிறுநெருஞ்சில், செந்தாமரை, மல்லி, சுக்கு, நெற பொரி வகை கள 1 ஒரு படி செவ்விளநீரில் போட்டுக் காய்ச்சி அரை வாசி வற்றியபின் ஆற்றிக் குடிக்க செங்கமாரி தீரும்.

## சிவாதக் குடிநீர்

- ஆடாதோடை, தூதுவளை, வட்டு, இயங்கு நன்னாரி, முத்தற்காசு, கண டங்கத்தரி ஓமம் இருசீர் மதுரம் கோட்டம் அரத்தை திரிகடுகு சதகுப்பை 4:1 ஆக்குக.

- சதகுப்பை நீக்கி அக்கறா, பற்படாகம், சிறுகாஞ்சோன்றியும் கூறுகிறார்.

கொடிய தாம் சிவாதக்குத்து குடிநீர் கேளு கூவிளை
கூவிளைவேர் ஈரரத்தை இருமட்டி ஓமம் அத்திப்பட்டை தேவதாரு
நெற்பொரி விடயம் மாம்பழப்பருப்பு தேற்றாவிதை இலவங்கப்பட்டை
சமனெடை இளவறுப்பின் பின் கசாயம் தேன் கோரோசனை மேற்பொடி.

## காயா சிவாதக் குடிநீர்

- முத்தற்காசு ஆடாதோடை தூதுவளை வட்டு இவை வேர் சுக்கு வல்லா ரல் பிரமி மிளகு நிலவேர் 8:1 கசாயம்.

- கண்டங்காலி தூதுவளை கடிய வட்டினுடன் வாசை
  கொண்ட கீழ்காய் நெல்லியின் வேர் கொத்தமல்லி திரிகடுகு
  மிண்டுங் கராம்பு முத்த மிவை வேண்டுங் களஞ்சோரொன்றாக
  தண்டாத வித்துக் குடித்துவரில் தாகம் தொய்வு சுரம் போமே.

- தென்னங்குருத்து கழற்சிக் கொழுந்து இயங்கம் சீதுளாயிலை நொச்சித் துளிர் பற்படாகம் திரிகடுகு உள்ளி 8:1

- வேர் தூதுவளை வட்டு பேய்ப்புடல் ஆடாதோடை திற்பலி கோட்டம் சிறுதேக்கு மஞ்சள் மிளகு சுக்கு 4:1

## வாதக் குடிநீர்

- இருசீர் கடுக்காய், கடுகுரோகணி, சாதிக்காய், கராம்பு, வசுவாசி, செவ்வள்ளி, சுக்கு, அரத்தை, வாய் விளங்கம் மிளகு, திற்பலி வகைகள 1. சீனக் கிழங்கு, அசுவகெந்தி இயங்கு பிரப்பங் கிழங்கு வகை பலம் 1. சாறணை கண்டங்கத்தரி கொடிவேலி, தூதுவளை வட்டு நன்னாரி முத் தற்காசு வகை பலம் 1 1/2 8:1 கசாயம். உளைவு முடக்கம் பிடிப்பு வீக் கம் வாதம் பிடிசோறு.

- சாதிக்காய் வசுவாசி கராம்பு அரத்தை செண்பகப்பூ திறிபலை கண்ட திற்பலி வகை கள. க. புங்கு வேம்பு வெள்ளறுகு சாறணை வகை பலம் 2. 8:1 ஆக்கி ஒரு சிறங்கை சீனப்பாத்தூள் போட்டருந்தவும். 7 நேரம் கரப்பன் கிரந்தி உளைவு எரிவு பிடிப்பு வாதம் கிரந்தி வாதம் தீரும்.

- பறங்கிக் கிழங்கு க. பலம் அமுக்கிறாய் வாதமடக்கி பிரப்பங்கிழங்கு முட் காவிளாய் வேர் இயங்கம் வேர் திறிகடுகு 2 கா. 4:1 ஆக்கிய கசாயம்.

- தூத்துமக் கொத்தான் முட்காவிகளாய் சுக்கு நற்சீரகம் சீனக்கிழங்கு 8:1 ஆக்கி ஈய உட்டணவாதம் பிடிப்பு அகலும்.

- இலாமிச்சு, நன்னாரி, கடுகு ரோகணி, நெல்லி வற்றல், காஞ்சோன்றி வேர், சீந்தில், கோரைக்கிழங்கு, இஞ்சி, அரசந்துளிர், இந்துப்பு கயாம், வகை 2 கள (அரசந்துளிர் ஒரு பிடி) இந்துப்பும் காயமும் வறுத்துப் பொடித்து மாவாக்கி மற்றவையை 2 படி நீரை 1/4 படியாயவித்து வடி கட்டிக் கலந்து 4 நாள் காலையில் மட்டும் குடிக்கவும். இந்த அளவில் 1 முறை அவித்தால் அதை 4 ஆக பிரித்து 4 நாளும் குடிக்கலாம். நாள் வீதம் 3:4 முறை பேதி காணும். வாதம் தீரும்.

- இஞ்சி கடுக்காய் வகை கள 3 நெல்லி வற்றல் கொன்றைவேர்ப்பட்டை வகை கள 6 சிந்தில் கள 18 2 படி நீர் விட்டவித்து கசாயம் செய்து குடிக்க வாதம் உண்டன வாதம் தீரும்.

### அண்டவாதக் குடிநீர்

- கனலியே குறிஞ்சாகந்தான் கான்றை சாறணையின் வேரும் புன்முருங்கையும் கொற்றானும் புங்குசங்குப்பியோடு வனமி ரண்டுழக் காய்காய்ச்சி வற்றிட அண்டந்தன்னில் அனலுறுவலிகள் வீக்கம் அடசலும் அகலுந்தானே.

- காணும் புனல் முருங்கை கழற்சிக் கொடிப்பருப்பு பூணும் கொத்தானு டனே போந்த சுக்கு வேணுமென பன்னீர் இயாழம் பருநீர் பருகியபின் விண்ணில் விரைவாதம் போம் விட்டு. சில பிரதிகளில் சாறணை பாடம், முருங்கைவேர் நீக்கி.

- உள்ளி, சுக்கு, நாவற்பட்டை வகை பலம் க. இடித்து 1 படி நீரில் போட்டு அரைவாசியாக்கி 3 கழற்பருப்பைப் பொடித்துப் போட்டு 3 நாள் கொ டுத்து முருங்கை இலை வதக்கிக் கட்ட விரை ஏறி இறங்குவதும் தீரும்.

### பாலர் அண்ட வீக்கக் கசாயம்

- கழற்சிப் பருப்பு, சுக்கு, சாறணை வேர், முடக்கொத்தான் வேர் இவை வகைக்கு 1 அவுன்ஸ் இவற்றை பொடித்து 12 அவு சலத்தில் போட்டு 6 அவு கசாயமாக்கி எரித்து வடிகட்டி ஒரு பாலாடை வீதம் தினம் 2 தடவை ஈய குணமாகும்.

### சன்னிக்கு கசாயம்

- கண்டங்கத்தரி, தூதுவளை, நன்னாரி, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சே ான்றி, பேய்ப்புடல், திரிகடுகு, திரிபலை, சன்னலவங்கம், கோட்டம், செவ்வியம், மல்லி 8:1 ஆக்கி திற்பலி மேற்பொடி.

- வெற்றிலை, நொச்சி, நுணாகாண்டை, கறிவேம்பு, முருங்கை, ஆடா தோடை, முருக்கு இலை இவை திறிபலை இருசீர் திரிகடுகு கராம்பு சா திக்காய் வசுவாசி 8:1 ஆக்கி தவனம், உழலை, எரிவு, வலி.

- வேர்க்கொம்பினுடன் நிலவேர் அரிசி கூட்டிப் பொட்டுக் கட்டிக் கசாயம் மாந்தசன்னி இருமல் சேடம், கார்க்கரிசி வறுத்து தெளிவாய் கொள்ளவும்.

### வேப்பம்பட்டை குடிநீர்

- வேப்பம்பட்டை ஈர்க்குடனே வேலிப்பருத்தி உவாய் சீந்தில் பூப்பம்ப ழமும் புடோல் நொச்சி அசுவகெந்தி கொன்றை காக்கம் பிளிக் கொட் டான் பீர்க்கு கஞ்சாங்கோரை நாரத்தை காப்பாய் நாரி கூவிளை வேர் வகை 1 பிடி கடுக்காய் சன்னிநாயன் உள்ளிக் கடுகு கார்கோல் வசம்பு ஓமம் அரத்தை திரிகடுகு மல்லி பூதவிருக்கம் திப்பிலி மூலம் பறங்கி சிவதை ரோகணி வகை 1/4 பலம் 8:1 கசாயம் கபாலசன்னி வெடி சன்னி சன்னி தீரும்.

### வாய் நோய்க்கு கொப்பளிக்க கசாயம்

- பெரு மருந்து வேரும் கல்லுப்பும் சமனெடை எருக்கம் பாலால் அரைத் துப் பல்லடியிற் தேய்த்து, பனைவேர், தென்னைவேர், நாயுருவி வேர் சமனிடித்து 4 நாழி நீர் விட்டு 4:1 ஆக்கி கொப்பளிக்கவும்.

- கொவ்வை இலை, தென்னங்குரும்பை, நறுந்தாளி இலை சமனிடை அரைத்து பசு வெண்ணெயில் மத்தித்து பல்லடியிலும், நாக்கிலும் பூசி எருக்கலம் வேரும் அமுக்கிறாய் வேரும் அவித்து கொப்பளிக்கவும். வீக்கம் உபாதிகள் தணியும்.

### பட்டைக்கசாயம்

- கருவேலம்பட்டை, மருதம்பட்டை, கட்டாமணக்கம்பட்டை, கிழுவம் பட்டை, கருங்காலி வைரம், கடுக்காய், மாயாக்காய் வகை கள 2 இவை இடித்தவித்த நீரில் துத்தம், துரிசு காசுக்கட்டி வகை கள 2 இந்துப்பு சீனக் காரம் விளைவு கற்பூரம் வகை கள 4 மேற்பொடி போட்டு கொப்பளிக் கவும். வாய் உள்ளவியல், வாய்ப்புற்று, பல்ரோகம், டயரியா, வாய் வெக்கை தீரும்.

- கரிசலாங்கண்ணி ஒரு பிடி, பிரமி இலை ஒரு பிடி, சூரத்துக் கடுக்காய் 1 பலம், உள்ளி 1/2 பலம், சுக்கு 1/2 பலம், மதுரம் 1/2 பலம், துணுக்கு 1 1/2 படி நீரை 6:1 ஆக்கி 1 2 3 நிமிடம் வாயுள் விட்டிருந்து கொப் பளித்து உமிழ்க. மருந்து வேகமாயினும் தேக வெக்கையாயினும் சரி வாயில் ரணம் ஆறும்.

- புங்கு ஆயில் சீதுளாய் இலை வேர் தேவதாரு அகில் திப்பிலி அத்தித் திற்பிலி சிறுபயறு அவித்து கொப்பளிக்கவும். வாய்ப்புண், உதட்டுப் புண், கடைத்துப்புண் தீரும்.

## பல்லடியில் கட்டிப் புண்ணாயிருந்தால் கொப்பளிக்க கசாயம்

- தென்னம்வேர், தென்னங்குரும்பை, பனை வேர், பாளை, நன்னாரி வேர், அமுக் வேர் இவை இடித்து 2 படி நீரை 1 படியாக்கி கொப்பளிக் கவும்.

## பல் இறுகக் கசாயம்

- மருக்காரை வெள்வேல் மருதந்தோல் சுக்கும் அருக்காவரையின் வேரா தும் நறுக்கியே நாலொன்றாய் காய்ச்சி 4 நாட்கள் கொப்பளிக்க பாலன் பல் லாம் கிழவன் பல்.
- வெள்வேல், நீர்ப்பூலாவும் மேவுமருக்காரை வேர், கள்ளவிழும் ஆவி ரைவேர், காற்றோட்டி வெள்ளை மருதோடிலுப்பை மருந்திவை எட் டொன்றாய் பருகாது கொப்பளித்துப்பார்.

## பல்வலி தீர கொப்பளிக்க கசாயம்

- முள்முருக்கம் இலைச்சாறும், நல்லெண்ணையும் சமனிடை கலந்து அவற்றுடன் சிறு துண்டு கற்பூரமும் பொடித்துப் போட்டு வாயிலிட்டு 15 நிமிடங்கள் வரை அடக்கி வைத்திருந்து கொப்பளிக்கவும். இப்படி 1 நாள் 3 முறை செய்க. பல்லை அரித்து வரும் கிருமிகள் நாசமாகும் வலி தீரும்.

## நாக்குச் சிலந்திக் கசாயம்

- செவ்விளநீர் மட்டைச்சாறு 1/2 படி விட்டுணு கிராந்திச்சாறு 1/2 படி வசம்பு கருஞ்சீர் அக்கரா வகை கள 1/2 கூட்டிக் காய்ச்சி வடிகட்டி 7 நாள் உள்ளும் குடித்து வாயும் கொப்பளிக்கவும்.

### புற்றுநோய்க்கு கொப்பளிக்க

- பாக்களவு கிழிஞ்சல் சுண்ணாம்பு (சிப்பிச் சுண்ணாம்பு) ஒரு போத்தல் நீரில் கரைத்து தெளிந்த நீரை வடிகட்டி 2 களஞ்சு நவச்சாரம், 1 களஞ்சு சுக்குத்தூள் போட்டு 12 மணித்தியாலம் ஊறவிட்டபின் ஒரு நாள் 4 தடவை வாய் கொப்பளிக்கவும்.

### கண்டத்துட்புண்ணுக்கு கொப்பளிக்க கசாயம்

- புங்கம்வேர் ஆயில் வேர் சீதுளாய் வேர் தேவதாரு அகில் திப்பிலி ஆனைத்திப்பிலி சிறுபயறு அவித்த கசாயம்.

### எருத்துக் குடிநீர்

- அரமுறிசுக்குநத்தை யானசூர் கொடு வேல் கொற்றான்
உரைகழலுள்ளி புங்கொன் றோரள வாயிடித்து
விரவி நீரிரண்டு நாழி வெந்துளக் காயிறுத்துப்
பருகும் ஏரண்டத் தெண்ணெய் கூட்டிடப்பறக்குமென்றே
புனமுறு முருங்கை வேரும் புதிய மாவிலங்கைத் தோலும்
இனியசாறணையின் வேரும் இது கழலுள்ளி இங்கு
வினவியே இடித்துக் காய்ச்சி வியன்பெறக் குடிப்பீராகில்
மனமுறச் சூலை சூன்மம் மாறிடு மெகுந்துந்தானே.

### குதிரை வலிக் குடிநீர்

- பாவவிலை வெள்பாவட்டை வெள்ளை உள்ளி மிளகு வசம்பு 4:1

### உதரரோகக் கசாயம்

- சீமை இந்துப்பு 4 விராகனெடை வெடியுப்பு, பொரித்த வெண்காரம், வகை 20 குன்றி றோசாப்பூக்கியாழம் 4 அவுன்ஸில் கலந்து குலுக்கிட 4 மணித்தியாலத்திற்கு ஒருமுறை 1 அவுன்ஸ் வீதம் கொடுத்து வர பேதி காணும். 2, 3 நாள் கொடுக்கலாம். (வயிறு சுபாவமாகும் வரை 2 அல்லது 3 நாட்கள்) மகோதரம் பெருவயிறு தீரும்.

### கெற்ப சுரோணித கசாயம்

- கருக்குவாய் வேரும் சுக்குக் கரியகாக் கொவ்வை வேரும்
  பருத்த சாறடையின் வேரும் பரியதோன் கான்றை வேரும் இடித்து 8:1
- கரிய சூரை முன்னைவேர் கழற்பருப்பு வேருமே
  பரிய சாறடைய துள்ளி பதித்த இஞ்சின் வேருடன் இவை 8:1

### கெற்பவாயிலில் சலம் இரத்தமாய் போனால் குடிநீர்

- வில்வவேரில் வயிரம், சந்தனம், முத்தற்காசு, இலாமிச்சு வகை 3 கள 4:1 ஆக காய்ச்சி 8 நேரம் குடிக்கவும்.

### தீட்டுடைக்க கசாயம்

- ஓமம் சதகுப்பை மூங்கிலிலை, மாவிலங்கப்பட்டை, பறங்கிப்பட்டை, சுக்கு, திப்பிலி கொடிவேலிவேர், கொடிவேலி வேர்ப்பட்டை கருஞ்சீரகம் வகை வராக எடை 1 1/2 படி ஜலத்தை 4:1 ஆக்கி தினமொரு வேளை 3 நாள் சாயிடுவதற்குள் மாதவிலக்கு ஒழுங்காகி வரும். பிரசவித்த மாதர் அழுக்கு வெளியாக்கும்.
- மின்னே சூதக மறிந்தால் வெறியா மரக்கு வெங்காரம்
  உன்னீர் மிளகு பெருங்காயம் உயருங் கவிரினுறு மலரும்
  நன்னீர் மருந்து நிறை ஒன்றால் நன்றாயரைத்து அனலூதி
  வென்னீர் கலக்கி அருந்துவிரேல் விடையா மென்றார் விடையிரே.

### தீட்டுப்பட கசாயம்

- இருசீர் திரிகடுகு, வசம்பு, உலுவா இந்துப்பு, காயம் வெளுத்தல் மஞ்சள் சாறனை வகை கள 2 காண்டை கருநொச்சி வேம்பு இவை துளிர் வகை 1 பிடி 1 படி நீரை 1/4 படியாயவித்து 1 நாள் 3 முறை குடிக்க தீட்டுப்படும்.

## பெற்றவள் துவாலை சிக்கினால் குடிநீர்

சீர் மேவு சிறு மகவை ஈன்றெடுத்த சேயினையார் துவாலையது சிக்கி நின்றால்
கார் மேவு சீரகமும் கொத்தமல்லி கறுவா நற்சதகுப்பை கராம்பரத்தை
ஊர் மேவு திற்பலியுமுடனே ஓமம் ஒரு சரியாய் குடிநீர் வைத்து வந்து கொள்ளிடல்
ஏர் மேவு மீசுரனார் அரனார் இருபையாலே இயம்பிய நோய்கலுமென இசைத்தாரன்றே.

- சீலமுறு மகவுதனைப் பெற்ற வட்குத் தீட்டு மறிபட்டு மெத்த வருத்த மானால் கோலமுறுமுதரம் நெஞ்சுகபால மொன்றில் குத்துவரும் தாங் கொணாநோவுமாகும் ஏலமற இதற்கு மருந்தெடுக்கிற் காயம் இயல் பெரிய வாலேந்திரபேளம் ஓமம் சீலமுறு மாஞ்சில் சுக்கு முத்தற்காசு சரிநிறையாய் கருஞ்சீரும் களஞ்சு கூட்டி கூட்டியேயே நாலொன்றாய் காய்ந்த நீரில் குங்குமப்பூ 5 குன்றி கூட்டியுண்ணு மாட்டியே நின்றதொரு அளுக்கு தீரும் மண்டைஇடி நெஞ்சுவலி மாறிப் போகும். நீட்டியே கொடுத்துவிடு குருவை நம்பி திட்சயமாய்ந் நோய்கள் அகன்று போம். மு.கு. சரக்கு வகை கள 1 குங்குமப்பூவை கள எடை.

## கெற்பனி நீர் மறிப்புக் குடிநீர்

- கெற்பனியில் நீர் மறிப்பு கெடுங் கருமைக்காலியின் தூள், அற்புதஞ் சேர் சுக்கு மதுரம் கடுக்காய் திற்பலியும் நாலொன்றாய் காச்சி வடி நற் பொரி கார் மேற்பொடியாய் சேலொன்று நீள் விழியே சேர்.

## பெற்றவள் நீர் மறிப்புக் குடிநீர்

- நொச்சி இலை, பாகலிலை, வேப்பிலை, மிளகு வகை க.பிடி வறுத்து 8:1 ஆக்கி பொரிகாரம் தூள் மேற்பொடி.
- மாதுளம்பழத்து விதையை பசுப்பால் விட்டரைத்து கரைத்து அரை அவுன்சு வீதம் கொடுத்துவர கெற்பனி கல்லடைப்பு தீரும்.

## நஞ்சு விழக் கசாயம்

- வட்டத்துத்திவேர், சீரகம், பழப்புளி சமனெடை 4:1 இலகுவானது உண்க.

## பெருப்பாட்டுக்கு கசாயம்

- வேலம்பட்டை பலமொன்று வேர்க்கொம் புள்ளி களிப்பாக்கு
  சாலக்கைப் பொடிவை நாலும் சரியாயவித்துக் கொள்வீரேல்
  கோலத்துவாலை பெரும்பாடு குடலில் வலிப்போடுட்குத்து
  நீல வெள்ளை சியல் மாறி சுகத்தில் வருந்தானே.

- நாவல் புல்லாந்தி அமுக்கிறாய் இலாமிச்சு சிற்றமட்டி கடலிறாஞ்சி ஆலம்முகை விழுது சுக்கு கைப்பு களிப்பாக்கு இவை அவித்து தேன் குங்குமப்பூ கூட்டிக் குடிக்க.

- கருவாழைக் கிழங்கத்தி ஆத்தி நாவல் கருதுபட்டையுடன் தெங்கின் பாளை தானும்
  சரியாகப் பலம் கூட்டி இடித்துத் தெள்ளித்தானதிலே 12 கழஞ்செடுத்து இரு நாழி ஈருழக்காய்க் காய்ச்சி ஞாழல் இனிமையுறு தேனதிலே கலந்து கொள்ளத் திருவாரைக் குகற்பமழிப்பதுவும் தீரும் தீராத பெரும்பாடு தீருமன்றே.
  இரா அடுப்பிலூற வைத்துக் குடிக்குக.

- நாவற்பட்டையை மோர் அல்லது நீர் விட்டிடித்து பிழிந்த ரசம் 1/8 படியும் பொரித்த படிகாரம் கடுக்காய் தூள் வகை 1/4 கள அரைத்த சந்தனம் கள 1 சேர்த்து காலையில் மட்டும் தேகத்திடத்திற்கேற்ப கூட்டிக் குறைத்து ஈயபெரும்பாடு தீரும்.

- திரிபலை, பொரித்த படிகாரம், காசுக்கட்டி, கத்தக்காம்பு, மாசிக்காய், பூங் காவி கடுகுரோகணி மருதோன்றிவித்து சமனிடை இடித்தரித்து வெருகடி வெண்ணெயில் இருவேளை 10, 20 நாள் சாப்பிட பெரும்பாடு மாறும். தூளித்தூவாலையும் தீரும்.

## கெற்பப் புழுவுக்கு கசாயம்

- மாதவிடாய் காலத்தில் அடிவயிற்றிற் சுருக்கென்று வலித்து சூதகம் இறைச்சி கழுவிய நீர் போலக் காணும். புருசனுடன் கூடும் காலத்திலும் அதுபோலவே யோனி வழி பொசிந்து சீலையிற் கறைபடும். சொறி விருந்தால் அனுபவ சித்தாந்தம்.

- சீந்தில் நானாங்கள்ளி, இலைக்கள்ளி இவைவேர் கியாளம் வடித்து ஆனெய்விட்டருந்தவும். (விலக்கு வந்து முழுகிய முதல் 3 நாளு முண்க.) பத்தியம் : பாலுஞ்சோறும் இலைக்கள்ளி முயற்செவிக்கள்ளி மான்செவிக்கள்ளி

## கெற்பனி சல அடைப்பு மகப்பிறப்புக் குடிநீர்

மாதாக்கள் வயிற்றுநோவாய் வரும்போது சலமடைக்கில்
ஆதாவான் சீந்திலரிசி வெள்ளுள்ளியோடு
தீதில் சாரடைக்கிழங்கு சமனதாய்ச் சேர்த்தவித்து
பேதமில்லாதே யூட்டிற் பிறந்திடும் பிள்ளை தானே.
தானே தீ வெடியுப்பில் கறுத்தச் சூறணம் தயவாகக் கொடுத்திடுகில் சேயுதிக்கும்
மானே நேர்விளியாட்டுத்துவாலை சீக்கில் மாவிலங்குமிலை உள்ளி வறுத்த வித்து
ஈனுமடவாருக்கு கறுத்தச்சூர்ணம் இசைவுடனே கொடுத்திடுகில் சிக்கில்லாமல்
ஏனென்று சொல்லமுன்னம் பிறக்கும் பல இதுவறிந்து வயித்தியரே இயற்றுவீரே.

## பெரிய மாதவன் குடிநீர்

- பறங்கிக்கிழங்கு, பிரப்பங்கிழங்கு, செங்காத்தாரிவேர், சாயவேர், இய ங்கம் வேர், வகை பலம் 9 கடுக்காய் அரத்தை ஏலம் இலவங்கம் மர மஞ்சள் கஸ்தூரி மஞ்சள் செவ்வள்ளி வலம்புரி கச்சோலம் இருசீர் மா யாக்காய் இருசந்தனம் வகை கள 2 4 படி நீரை 1 படியாக்கி குடிக்க 8 நேரம் கடுப்பு பிடிப்பு புண்புரை மாறும்.

## பாற்குடிநீர்

- கொற்றானிலை கற்றாழைமடல் கொடியின் கழற்சி இலையுடனே
  சிற்றாமணக்கினிலை குறிஞ்சிசேரும் உள்ளி இவையொன்றாய்
  கற்றாவின்பால் நாழிவிட்டுக் காச்சி உழக்காயே வடித்துப்
  பற்றாரிந்துவுடனருந்த பறக்கும் சூரைகுன்மமுமே
  முற்று மாண்பனையின் பாளை முறுகச் சுட்டெடுத்த சாம்பர்
  அத்துடன் தேங்காய்பாலும் அதிற்குளங் கூட்டி ஏழாம்நாள்
  திற்றிடச்சூலை குன்மம் தீர்ந்திடு மூலரோகம்
  சற்று நில்லாது தீரும் சாற்றினார் முனிவர் தானே.

### சிங்காதிக் குடிநீர்

- திரிகடுகுனோடு சிறுதேக்கு இன்னும் தூதுவட்டு வாசை கண்டங்கத்தரி குமிழ் சிறு குறிஞ்சி இவை வேர் நெல்லிக்காய் கடுக்காய் செவ்வியம் இடித்து 8:1 ஆக்கி குடிக்கக் கண்டத்தில் நோய் கசமும் அஸ்தியில் நோய் நெஞ்சுநோ அரிகுரல் சிவாதம் நாக்குத்தடிப்பு இருமல் அல்ல லெல்லாம் நீங்குமறி.

### அசுவாதக் குடிநீர்

- இட்டசேற்பன சுரங்கள் ஈளையாதி... அமுக்கிறாய் வாகை தூதுவளை கண்டங்கத்தரி இவை வேர் திற்பலி திப்பிலி மூலம் மஞ்சள் மரமஞ் சள் திறிபலை சிறுதேக்கு செவ்வியம் 8:1 ஆக்கி கோரோசனை திப் பிலி முலைப்பால் தேன் கற்கண்டு மேற்பொடி கசமிருமல் ஈளைமுதல் வரட்சி போமே.

### இருமல் கசம் தீரக் குடிநீர்

- மதுரம் மல்லி நாகம்பூ சிறுதிப்பிலி மகரப்பூ வால்மிளகு கருஞ்சீரகம் கள 1 கடுக்காய் 4 கள. குன்றிதூது நிலபாவல் இலையும் வேரும். வல்லாரல் பிரமிசமூலம் கற்பூரவள்ளி இயங்கு துளிர் வகை ஒருபிடி 4:1 கசாயம். தேன் திற்பலி கோரோசனை மேற்பொடி இருமல் சேற்பம் கசம் கோழை.

### வரட்சிக் கோழைக் குடிநீர்

- சிற்றமட்டி தூதுவளை சிந்துவாரம் கருஞ்சீர் நற்சீரம் பாவட்டை கற்காயம் கொத்தமல்லி வேற்கொம்பதிமதுரம் ஓமம் மிளகுலுவா ஊற்கண்ணாய் திற் பலியோடுண்.

### இருமல் குடிநீர்

- தோல் சீவிய இஞ்சிக் கிழங்கு, 1 சாண் நீளக் கான்றை வேர்ப்பட்டை, 2 ஆடாதோடை இலை, 6 தூதுவளை இலை பிய்த்து சிற்றரத்தை 1 கள. திற்பலி 2 கள. மதுரம் 3 கள. தாளிசபத்திரி 4 கள குத்துக்காற் சம்மட் டிவேர், சிறுகாஞ்சோன்றிவேர், வட்டுக்கத்திரிவேர் கண்டக்கத்தரி வேர் வகை கள 6 கடைச்சரக்குகளை நறுக்கி வறுத்து இடித்து பச்சைச் சரக்கு

களோடு போட்டு அரை படி நீரில் 4:1 ஆக்கி வடித்து பனங்கல்லாக் காரம் போட்டுக் கரைத்து 1 தேக்கரண்டி தேனும் விட்டு சூட்டுடன் 1 நாள் 3 முறை குடிக்கவும். பழப்புளி, மாங்காய், தயிர், பழவகை, கீரை நீக்கவும். வெந்நீர் பாவிக்கவும். சூட்டுடன் ஆட்டுப்பால், கற்கண்டு, தோடம்பழம் பாவிக்கவும்.

### சலசுத்திக் குடிநீர்

- சிறுநெருஞ்சி நீர்முள்ளி வாளியரிசி, சந்தனம், வில்வை, வைரம், மல்லி வகை கள 1. அவித்துக் குடிக்க சலம் சுத்தியாகும்.

### ஆண்குறி கழவ கசாயம்

- திறிபலை மாயாக்காய் 4:1 ஆக்கி துத்தம் துரிசு மேற்பொடி

### நாவரட்சிக் குடிநீர்

- இஞ்சி, இலாமிச்சு, வேடன்காடு மணல் நெற்பொரி நாவற்றுளிர் செம்ப கப்பூ சீதுளாய் இவை 4:1 ஆக்கிய கசாயம்.

### கல்லடைப்பு மூத்திரக் கிரீச்சரக்கு குடிநீர்

- உள்ளி அரை பலம் செம்முருங்கைக் காம்பு, அறக்கீரை, மூங்கிற்றோல் வகை பிடி மிளகு ஆழாக்கு 8:1 ஆக்கி 3 நேரம் குடிக்க சலம் சிக்காது ஓடும்.
- வெண் கொடுப்பை வேர், சிறு கீரை வேர், பூளைவேர் முறையே 2:1 அரை பலம் மாவிலங்கை வடக்குவேர் தேற்றாவிதை கசாயமாக்கிக் கச க்க முத்தெண்ணெய் விட்டு குடிக்க நீர்ச்சிறுப்பு கல்லடைப்பு தீரும்.
- ஆவாரம்பூ வேர்ப்பட்டை திறிபலை முத்தற்காசு மருதம்பட்டை நாவற் பட்டை கடலழிஞ்சிற்பட்டை கட்டுக்கொடி போஸ்தக்காய் 8:1 ஆக்கி பாலர் 1/2 அவுன்ஸ் பெரியோர் 1 அவுன்ஸ் சிறுநீர் கலங்கல் சிறுப்பு கல் லடைப்பு தீரும்.
- முள்ளிலவு நாவல் பூலா வெட பூலா முத்தற்காசு, நன்னாரி, முல்லை, சீந்தில், செந்தாமரை, சிற்றாமுட்டி செங்கழுநீர் சிறுகீரை விராலி வெட்டிவேர் இலா மிச்சு பொற்காணி வகை பலம் 1. 4 படி இளநீரை அரை படியாக்கி கியாழம்.

- நெருஞ்சிவேர், சுரைத்தண்டு, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், கீழ்க்காய் நெல்லி வேர், பூளை சாறிவேர், சிறுகீரைவேர் 8:1 ஆக்கி பச்சை வெண் ணெய் போட்டருந்த நீரடைப்பு கல்லடைப்பு தீரும்.

## தசையடைப்புக் குடிநீர்

- இயம்பு அதாவது பொரிகாரம் மேற்பொடி சிறுதேக்கு, மிளகு, இயங் கம்வேர், சுக்கு, கரிப்பான் இலை, தோடை வேர், கொமமட்டிவேர் கள 2. 2 படி நீரை உழக்காக்கி ஈய சல அடைப்பு இரத்த அடைப்பு கிரீச்சரம் தீரும். தசை தெறிக்கும். நீர்த்தாரைக்கு சுகமுண்டாம்.

## நீரடைப்பு கியாழங்கள்

- நீரிலிருக்கும் கொடிப்பாசி, கண்டங்கத்தரி இலை, வாழை மரத்தின் அடிக் கிழங்கு வகைக்கு பலம் 2. இதை அரைபடி ஜலத்தில் போட்டு 4:1 ஆக்கி வடித்து கொஞ்சம் பொட்டிலுப்பு போட்டுக் குடிக்கவும். இப் படி 4, 5 வேளை குடிக்க நீர்க்கட்டு உடையும்.

## நீரெரிச்சல் வீக்கம் நீர்த்தாரைப் புண் கசாயம்

- வால்மிளகு ஏலம் மல்லி வகை கள 4. அரை படி இளநீரில் அவித்து கால்படியாக்கி 1 நாள் 3 முறை குடிக்கவும். இந்த அளவுப்படி அன் றாடஞ் செய்து 3 நாள் 9 முறை தேவைப்படின் மேலும் சிலநாள் தொ டர்ந்து குடிக்க நீர்க்கடுப்பு நீரெரிச்சல் வீக்கம் நீர்த் தரைப்புண் தீரும்.

## இரச வீறால் வாய் வெந்தால் கொப்பளிக்க கசாயம்

- வெள்வேல் எருக்கலம் வேர் கருவேல் துளசி இவை கசாயம்.
- பூ நாகத்தை சுத்தித்து கருக வறுத்து 12 பங்கு நீர் விட்டு அரை ஆக்கி எடுத்தல்.
- அவுரி இலை பிரமி இலை வகை பலம் 1 மிளகு அரை தோலா அரிந்தும் பொடித்தும் 1 படி நீரை 8:1 ஆக்கிய கசாயம்.
- கோழி முட்டை வெண்கருவுக்கு அரை படி சலம் விட்டு போத்தலில் நல்லாய் குலுக்கி உறவாடிய பின் பாவிக்கலாம்.

## செந்தூர வீறு தணிய கசாயம்

- அறுகம்வேர் மிளகு வகை 1 பலம் 2 படி நீரில் 8:1 ஆக்கி வடித்து பூ மா துளம்பூ மதுரம் காட்டெருமைப்பால் வகை 1 வராகனெடையை குறித்த கசாயம் விட்டரைத்து கலக்கி அரை தோலா பசு வெண்ணெய் போட்டு 3 பங்காக்கி 1 நாளில் 3 நேரமும் பருகவும்.

## பித்தக் குடிநீர்

- மண்டைப்பித்தம் சுழற்றுதென்று மயங்கி விழுந்து கிடப்போர்க்கு ... திரி பலை, திறிகடுகு, கோட்டம், மதுரம், செண்பகப்பூ, கண்டில் வெண்ணை முந்திரிகை, கராம்பு, ஏலம், கச்சோலம், இந்துப்பு, சீந்தில், விழாலரிசி, ஓலமென்றோடைங்கிய பூடு உற்பலம். ஆம்பல் நெய்தல் கொட்டி அல கையின் வேர், இலாமிச்சு, இருவேலி, வில்வை, முல்லை, ஈசுரமூலி, ஆலம் விழுதினிளந்துளிர், தென்னங்குரும்பை தாளிசபத்திரி சிறுபயறு சிறுதேக்கு பொன்னாங்காணி நரிப்பயறு கையாந்தகரை வகை கள 4 8:1 ஆக்கி நக்கீல் பித்தம் நாடாதே.
- பித்தம் மீறித் தலையைச் சுழற்றிடில் பிரியமான லாமிச்சு இரு வேலியும் சித்த மற்றிடு செண்பகம் சந்தனம் சீதுளாய்த்துளிர் 8:1 ஓடுமே.
- பேய்ப்புடல் முசுமுசுக்கை கண்டங்காலி செங்கத்தாரி மூங்கிலிலை இலந்தை இலை அகில் திரிகடுகு மல்லி வாய் விளங்கம் சிறுமூலம் 8:1 புளி விலக்கு உணவு.
- இருவேலி லாமிச்சு சிறுகீரை சந்தனம் முந்திரிகைப்பழம் செங்கழுநீர்க் கிழங்கு அதிமதுரம் வரட்சுண்டிவேர் 8:1 தேன் சாம்பிராணி மேற்பொடி.
- இலாமிச்சு, வெட்டிவேர், சீந்தில்கொடி, திராட்சை, வில்வவேர் அல்லது வில்வை ஓடு, நன்னாரி வகை பலம் 1/4 கறிவேப்பிலை, ஈர்க்கு, ஏலக் காய்த் தோல் வகை பலம் 1/8 ஆல்பகாரப்பழம் 3. 1/2 படி நீரை 4:1 பித்தம் அழலை எரிவு வாந்தி தீரும். 3 நாள் 3 வேளையில்.
- வில்லை வேர், சிறுபயறு, நெற்பொரி, இருசீர், ஏலம், நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு 2:1 சர்க்கரை கூட்டலாம்.

## அருவருப்பு வாந்திக் குடிநீர்

முத்தமுடன முதவல்லி கண்டங்காலி மேவு சிறு காஞ்சோன்றி பற்படாகம் சித்தமுறு சிறுதேக்கு கோட்டனோடு சாறணை வேர் நிம்பத்தின் காம்பினோடே பத்தியுடனே றொன்று களஞ்சு மூன்றாய் பண்பாக கூட்டியபின் நாலொன்றாக்கி அத்தி சுரமோடு அருவருப்பு வாந்தி அருந்திவரிலகன்று விடுமறைந்திட்டாரே.

- வில்வைவேர் சந்தனம் முத்தற்காசு நெல்லி வற்றல் நெற்பொரி மதுரம் அதிவிடயம் நற்சீரகம் கள 3 முன்போல்.
- பாரிசைந்த நெல்லிமுள்ளி பாரதனிற் கூவிளமும் சீரிசைந்த சீரகமும் சேர்ந்த சுக்கும் வேரிசைந்த சித்தமட்டி நெற்பொரியும் சேர்த்து கியாழ முண்ண பித்தம் விட்டு அகலும் எனப் பேசு.

## பித்த வாயுக் குடிநீர்

- மல்லி, நெல்லி வற்றல், மிளகு, இஞ்சி, சீரகம், பயறு வகை கள 2. எலுமிச்சை இலை, முடக்கொற்றான் இலை வகை 1 பிடி, 1 படி நீரில் அவித்து கால் படிப்பாய் எடுத்து ஒரு நாள் 3 முறை குடிக்க பித்த வாயு வெறிப் பித்தம் பிதற்றல் அகங்காரம் தீரும்.

## கிருமிக்குக் குடிநீர்

- வித்து மாதுளை வேரினிற்பட்டையும், ஒத்த கானக்குறத்தியிலையுடன் மெத்த நீர்விட்டவித்துப் பருகிட சுத்தமாகத் தொலைந்திடும் பூச்சியே.
- நித்தம் எலிச்செவியும் நீள்முருங்கை நல்வேரும் அத்தித்திறிபலை யோடாங் குடிநீர் ரத்தக் கண்ணால் வாய்விளங்கமேற்றூவி மைந்தர் வயிற்றிலுள்ள தாய் விழங்க பூச்சி விழும் தான்.
- பிரண்டைத் தண்டு பேய்ப்பீர்க்குவேர் ஓமம் புரசவிரை 4:1 ஆக.
- கருங்காலி சிவதைவேர் குடசபாலைப்பட்டை வேப்பீர்க்கு திறிபலை திரிகடுகு வசம்பு சமனெடை கோசலத்தில் 8:1 ஆக்கி குடிக்க விழும்.
- எலிச்செவி முத்தற்காசு மாதுளம் வேர்ப்பட்டை மாங்கொட்டைப்

பருப்பு வாய்விளங்கம் முருங்கை ஈர்க்கு கடுக்காய் 8:1 ஆக்கி வாய் விளங்கம் மேற்பொடி தூவிக் கொடுக்கவும்.

- முள்முருக்கம் விதை, எள்ளு, வாய் விளங்கம், வெல்லம் சமனெடை இளநீரில் அவித்து உட்கொள்ள கிருமி நீங்கும்.
- மாதுளம் வேர், ஆடுதின்னாப்பாலைவேர், ஈச்சங்குருத்து, துவரம் பருப்பு, புரசம் விதை, கிருமி சத்துரு வாய் விளங்கம் விழாலரிசி சரக்குகள் சேர்ந்த கசாயத்தில் போட்டு வைத்தால் 24 மணித்தியாலத்தில் கிருமிகள் கரைந்து விடுவதை கண்கூடாய் காணலாம்.

## விஷ கிரந்திக் குடிநீர்

- வல்லாரல் வள்ளி, சிறுகாஞ்சோன்றி, பிரமி, வருமிருசீரகமேலம், திப்பிலி, செவ்வள்ளி, சொல்லாரு நாகை உள்ளி கொத்தமல்லி கடுக்காய் தூய அதிமதுரமிவை 4:1 ஆக்கி.

## விஷவாதக் கரப்பன் குடிநீர்

- கொடிவேலி சாறணை புங்கு வீழி குமிழ் விளாபிராய் மிளகொன்றை பெருமருந்து மூக்கிறைச்சி சத்தி சாறணை குன்றி தூதுவளை பைங்குராய் குறிஞ்சா இருமட்டி பிரண்டை காட்டுமல்லிகை ஆதண்டை நன்னாரி சிற்றவரைக் கிழங்கு சிறுகுறோட்டை வெண்ணெச்சி ஆடாதோடை இயங்கு இன்பூறல் இவை வேர் பூத கரப்பன் ஓமம் கருஞ்சீரகம் திற்பலி சுக்கு வெழுத்தல் கடுக்காய் தான்றிக்காய் களிப்பாக்கு வகை 1 பலம் வெண்காயம் பலம் 10 எல்லாம் இடித்து பதக்கு நீரை 4:1 நீரும் இறங்கும் வீக்கமும் வற்றும்.

## சுரக் கட்டி கசாயம்

- திப்பிலி மூலம், வெட்பாலைப்பட்டை தேவதாரு பால்சாம்பிராணி வாய் விளங்கம் கண்டுபாரங்கி கரிசலாங்கண்ணி கடுக்காய் தோல் சிறுவழுதலை பெருவழுதலை வசம்பு பொன்முசுட்டை திறிகடுகு, கொடிவேலி மருக்காரை கோட்டம் சிற்றரத்தை ஓமம் கருநொச்சி நிலவேம்பு செவ்வியம் வகை ரூபா எடை 1. 24 அவுன்ஸ் நீரை 8:1 ஆக்கி அரை வீதம் நாளைக்கு 3 முறை.

### பால் சுரக்கக் கசாயம்

- தண்ணீர் மீட்டான் கிழங்கு (தோல் நரம்பு நீக்கி) சாறு 1/8 படி பசுப்பால் 1/8 படி சூடு போகாமல் சாற்றுள் பாலைக் கறந்து 3 நாள் காலையில் மட்டும் குடிக்கவும். பத்தியம் 3 நாளும் பாலுஞ்சோறும்.

### புண்கழுவ கசாயம்

- பெரிய கடுக்காய் 15 தூள் செய்து 1 1/2 படி ஜலம் விட்டு 3/4 படியாய் காச்சி வடித்து கற்பூரம் துரிசு வகை 3 வராகனெடையை குறித்த கசாயத்தாளரைத்து கலக்கி வைத்திருக்கவும். ரணத்தில் சிறிது சிறிதாய் 3/4 படியையும் விடவும். கசாயத்தை சேதமாகாமல் எடுத்து மீண்டும் 6 மணித்தியாலத்துக்கு ஒரு முறை விடுக. இப்படி 1 நாள் 3 நேரம் அப்படி 7 நாள் கிருமியுள்ள ரணம் மகா ரணங்கள் கூட எலும்பு பற்றிய ரணங்கள் கூட குணமாகும்.

### உவாந்தி எடுக்க கசாயம்

- 1 அல்லது 1 1/2 பலம் மரக்களானை அரை படி ஜலத்திலிட்டு 1/4 படியாக்கி குடிக்குக. சிறிது நேரஞ் செல்ல நீர் குடிக்க வாந்திக்கும் தண ்ணீர் குடிக்கக் குடிக்கச் சத்திக்கும் திரவரூப மல்லாத அன்னம் புசிக்க. உவாந்தி நிற்கும்.
- கடுகும் உப்பும் அரைத்து நீரில் கலக்கி குடிக்க உவாந்திக்கும்.

### விரேசன் உவாந்தி மீறினால் கசாயம்

- முருங்கை இலையும் கராம்பும் அவித்துக் குடிக்க அல்லது சோற்றில் விட்டுச் சாப்பிடவும்.

### கழிச்சல் குடிநீர்

- கொண்டதொரு அக்கரத்திற் கழிச்சல் மிஞ்சில் குடிநீர் கேள் பீனாறி சிவந்த சந்தம் மண்டிரு சீரகம் பெருஞ்சீர் தேற்றாங் கொட்டை, மாயாக் காய் களிப்பாக்கு கைப்புநெல்லி உண்டி தரு கடுக்காய் நற்சந்திலாமிச்சு உவந்த இருவேலியொடு செண்பகப்பூ கண்டு மொழி எழிலணங்கே ஓமம் முத்தம் காச்சியிலை 8:1 ஆய் குடிநீர் கொள்ளே.

## உவாந்தி கழிச்சல் இயமலும்

- நெல்லிப்பட்டை மாம்பட்டை நிகழும் அரசம்பட்டையுடன் வெல்லும் பருத்தியின் கொட்டை மேவும் பருத்தியின் பிஞ்சும் அல்லும் அத்திப்பட்டையொடு அதன்றன் துளிரும் வகை வகைக்கு சொல்லும் விராக னெடை யொன்று கசாயம் நலமாக

- மரமஞ்சள் கடுக்காய்ப்பூ அதிவிடயம் சிறுநாகம்பூ போஸ் தக்காய் வகை ரூபா எடை 3. மாஞ்சில் ரூபா எடை 3/4 தூள் செய்து 2, 3 மணி நேரம் 12 அவுன்ஸ் தண்ணீரில் ஊறவிட்டு பிசைந்து வடிகட்டி 2, 3 தேக் கரண்டி வீதம்.

- நாவற்பட்டைதுளிர் ஆலம் முகை லாமிச்சு இருமட்டி நன்னாரி வட்டு வேர் தூதுவளை வேர் இலைகாய் ஈர உள்ளி மதுரம் முந்திரிகை பேரீந்து தேவதாரு தேற்றாவிதை அதிவிடயம் குறாசானி ஓமம் இருசீர் சுக்கு திற் பலி கடுகு ரோகணி சமனெடை கசாயம். பாலர் பெரியோர்க்காகும்.

## பாலர் தீராக் கழிச்சல் கசாயம்

- அத்தி மருது இவை பட்டை அக்கரா மாயாக்காய் ஓமம் அதிவிடயம் இவை 6ம் வகை. கள 1. இவற்றை அரை படி நீரில் அவித்து 1/8 படி யாயெடுத்து தேன் சேர்த்து ஈய சிறுபிள்ளை திராக் கழிச்சல் கட்டும்.

## வயிற்றுளைவு கடுப்புக் குடிநீர்

- மலைதாங்கி முத்தற் காசாத்திப்பட்டை மருவிய நீர்ப்பூலாவேர் நாவற் பட்டை இலை தாங்கு மாதுளையின் கொழுந்தும், பிஞ்சும் இருவேலி லாமிச்சு மாம்பூ ஏலம் தலைதாங்குமதிவிடயம் சீரம் ஓமம் தவுறாம லிவையெல்லாம் சமனாய் கூட்டி கலை தாங்க இடித்த தூள் காச்சிக் கொள்ளக் கழிச்சல் திசாரத்திற் கடுப்பும் போமே.

- வகை கள 2 ஐ 4 படி நீரை 8:1 ஆக்கி 12 பங்காய் பிரித்து 1/4 தேன் கூட்டி 6 மணிக்கொருமுறை.

- தென்னம் பாளை மாதுளை வேர் செய்யய கருவாழையின் பூவும் வன்ன முத்தற் காசினுடன் வாகாய் நறுக்கி இருநாழி நீரை 8:1 பண்ணு மிரத்த அதிசாரம் பலவும் மாறிப் போய்விடுமே.

- நாவல் விடத்தல் கருவேல் ஆவரசு ஆல் இலை பட்டையும் துளிரும் அத்திப் பட்டைப்பிஞ்சு இவற்றை இடித்து 4:1 ஆக சுண்டக் காச்சி சாதிக்காய் மாயாக்காய் கராம்பு சீரகம் அதிவிடயம் இவற்றை இளவ றுப்பாய் வறுத்து மேற்பொடி போட்டுக் குடிக்கவும்.

## வயிற்றுளைவு கடுப்புக் குடிநீர்

- வெந்தய நற்சீரக மீருள்ளி ஓமம் விளங்கு கடுக்காய் கடக சிங்கி எல் லாம் மொந்த ஒரு நிறையாக்கி அவித்துக் கொள்ளின் முதி வயிற்றுக் கடுப்புளைவு சீத ரத்தம் வந்த வரட்சிக் கொதிப்பு மாறிப் போகும் மலங் கழியப் பிரமியோடு கடுக்காய் நீரில் தந்திடுமாமணக்கினெண்ணெய் கூட்டிக் கொள்ளச் சார்ந்த மலக்கட்டகலும் கடுப்பும் போமே.
- ஆனைதனிற் கண் ஒரு பிடியும், அசுரர் விரோதி இளம் பிஞ்சு
  கானக்கு திரைமேற் புறணி காசுக் கட்டிகளிப்பாக்கு
  நாணயக் கொன்றான் பூச சாற்றில் தாகம் தணியக் கொள்வீரேல்
  மானைப் பொருதும் விழிமடவீர் வடுகும் தமிழும் குணமாமே.
- ஆனைக்கன்றினிளதோலும் அரசாவரைஓதியதள பிஞ்சும் கானக்குதிரை மேற்றோலும் காசுக்கட்டி களிப்பாக்கும் என்றும் பாடம்.

## சுகபேதிக் கசாயம்

- றோசா மொட்டு பிஞ்சுக் கடுக்காய் வகை 1 தோலா சோம்பு மதுரம் நெல்லி வற்றல் வகை அரை தோலா, சுக்கு வெள்ளரி விதை கால் தோ லா இவற்றை அரை படி நீர் விட்டு அரை ஆழாக்காய் சுண்டக் காச்சி பிசைந்து வடிகட்டி சீமை அல்லது நாட்டு இந்துப்பு தேகதிடனுக்கேற்ப முக்கால் அல்லது ஒரு தோலா சேர்த்துக் கலக்கிக் குடிக்க 5 அல்லது 6 விரேசனமாகும். தேகம் உஷ்ணப்படாது.
- கடுக்காய் கடுகுரோகணி சூரத்தாவரை றோசா மொட்டு நிலவாகை சிவ தை வேர் வகை கள. 1 ஆமணக்கு நெய் ஒரு அவுன்ஸ்.
- இந்துப்பு, களிப்பாக்கு, கடுகுரோகணி, கடுக்காய், நிலவாகை, கருவே லங்கொழுந்து, கற்றாழஞ்சருகு, பிரமி இலை நிர நிறையே வராகனெடை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, சி தைத்து அரை படி நீரில் 4:1 ஆக்கி குடிக்க நல்லாய் விரேசனமாகும்.

### பித்தம் பேதிக் கசாயம்

- பித்தந்தான் மலத்தைக் கட்டிற் பெருங்கடுக்கா யொடிந்துப்பு
  உத்தமம் அகத்தி நெல்லி யார்க்குடன் பிரமி சுக்கும்
  ஒத்திடச் சேர்த்து நீர்நாவொன்றுறக் காய்ச்சி வாங்கிக்
  குத்தியாமணக்கிணெண்ணெய் குடித்திடக் கழியுமன்றே.

### சுரத்தின் மலக்கட்டுக்குப் பேதி

- அரத்தை, ரோகணி, நீர்முள்ளி அருநிலா வாரைவேலிப் பருத்தி வேர் கடுக்காய் திப்பிலி பாகல் விழி எரித்த நீர் குடிக்க விக்கல் இளகிடும் சுரமும் தீரும்.

- சூரத் தாவரை கள.3 கடுக்காய்த் தோல் கள ஒன்றரை றோசா மொட்டு கள. 1 பெருஞ்சீரகம் கள. 1 இவற்றை அரை படி நீர்விட்டு அவித்து கால் படியாய் வற்றிய பின் வடித்து சீனி அல்லது பனங்கட்டியுடன் முழுதுங் குடிக்கவும். 4, 5 முறை பேதியாகும். காரசாரமற்ற பத்தியம் சாப்பிடவும்.

### கணைக்கு கசாயம்

- வில்வை இலை வட்டத்துத்தி இலை வெங்காயம் வெந்தயம் நற்சீரகம் மாங்கொட்டைப்பித்து நிலக்குமிழ்வேர் வகை கள.1 4:1 ஆக்கி கரண்டி வீதம் நாளுக்கு 4 முறை ஈய பொருமல் கழிச்சல் உடல் தேய்வு கணை

### கபால வலி ஒருத்தலை வலிக்குக் கசாயம்

- ஒரு விரேசனம் செய்த பின்பு மல்லி, சுக்கு, கடுக்காய், விளாலரிசி வகை கள 4 திப்பலி, செங்கொரி வகை கள. 1 ஒரு படி நீரை காச்சியுட்கொள்ள கபால வலி ஒருத்தலை வலி நீங்கும்.

- ஆவரைப் பஞ்சாங்கம் வகை ஒன்றரை பலம். சரக்கொன்றை வேர்ப் பட்டை ஆவரச மரத்தின் வேர்ப்பட்டை 2 இலைக்கொழுந்து அடுத்த நாள் விரியக்கூடிய (காம்பு நீக்கிய) மொட்டுப்பூ அல்லது அல்லி மகரந் தத்துடன் கூடிய உடன் விரிந்த பூ 4 மரப்பசின் (பிரமாணப்படி பிஞ்சு என் றாலும் பிசினே விசேடம் கிடையாவிடின் விளாமரப்பிசின் கூட்டலாம்). 5 முற்றிக் காய்ந்து வரும் காயின் விதை.

- நாவற்கொட்டை கடலழிஞ்சில் மரப்பட்டை கோரைக்கிழங்கு வெண் கோஷ்டம் மருதமரப்பட்டை வகை ஒன்றேகால் பலம். முற்றிய சீந் தில் தண்டு. பழுத்த நெல்லிக்கனி வகை 2 பலம். மேற்கூறிய எல்லாம் (கோட்டம் தவிர) பச்சையாக எடுத்து 8, 10 நாள் நிழலில் நன்றாகக் காய்ந்து 1 நாள் கடும் வெயிலும் காய்ந்தவுடன் இடித்து அரித்து எடுத்து மூடி வைக்க வேண்டியது. இதை நோய் வன்மைக்குத் தகுந்தபடி 1, 2 திரிகடி அல்லது வெருகடி (3 விரலிடை 4 விரலிடை)ப் பிரமாணம் கிள்ளி வெந்நீரிலிட்டு மூடி 8:1 ஆக அவித்து சம அளவு காச்சிய ஆடை நீக்காத பசுப்பாலுடன் கலந்து நாளொன்றுக்கு 3 முறை (காலை, மாலை, படுக்கைக்கு போகும் சமயம்) 1 மண்டலமருந்தி இச்சாபத்தியம் இருப் பதுடன் யூகிமுனி வைத்தியசிந்தாமணி 800ல் சொல்லிய "பறிமேகம் 20க்கும் பத்தியந்தான்" என்ற குகைச் செய்யுட்படி பத்தியம் இருந்து வர மேகம் 20ம் எல்லாப் பிற மேகமும் தீரும்.
- நெல்லிக்கனி இதை நிழலில் உலர்த்திக் காய்ந்து வெடித்த பின்பு விதை அகற்றி எடுக்கவும். (குறிப்பு பலம் 8 களஞ்சு மண்டலம் 40 நாள்)

**சலம் 20க்கும் குடிநீர்**

- ஆவிரம் பட்டையதின் வேரும் அரிய கிளுவை பட்டையும் வேர் தாவு மலர் தாங்கியின் வேரும் தகுகடலிறாஞ்சி மருதப்பட்டை மேவும் இவை யோர் பலம் ஆறு. மிக்க கடுக்காய் நூறுடனே தாவிங் நெல்லிமுள்ளி நானி கதித்த தேற்றாவிதை நூறே தேனும் மஞ்சள் பலம் கால் கொள் சேர்த்து இடித்துப் பாண்டமதில் கூறும் குளத்தில் நீர் வார்த்துக் குறுகக் காச்சிமுப்பொழுது ஊறுமசனங் கொண்ட பின்பு உடனேயதின்மேலிது கொள்ளில் பாறவருத்தும் சல நோய்கள் பறந்தே ஓடும் பாரைவிட்டே.

**வேறு சூரணம்**

- ஆவிரை கொன்றை நாவளகிய கொவ்வை அத்தி
  மேவிய மருதங் தோலும் விரைவுடனெக்கக் கொண்டு
  பூவிருங் குழல் நன்மாதே போதுறு தேனிற்கொள்ள
  காவிரி நீரும் வற்றிக் கடல் களும் வற்றுமன்றே.

# அடைசல் குடிமருந்து

## தொண்டை நோ அடைசல்

- பங்கம்பாளை தூதுவளை சிவனார் வேம்பு மூக்கறச்சி இவை வேர் துத்தம் துரிசு கூட்டி தண்ணீர் வார்த்தரைத்து நெல்லிக்காயளவு கொடுப்பிவ டசியிருக்க தொண்டை நோத் தீரும்.

- தான்றிக்காய், திற்பலி, கருஞ்சீரகம், மஞ்சள் வட்டுவேர், தூதுவளை வேர், பன்னை வேர், பெரு மருந்து வேர், பனரைப்பழம், அரப்புக் கட்டி அடப்பம் விதை சமன் கூட்டிக் குப்பைமேனிச் சாற்றலாட்டிக் குளிகை செய்தடசவும். நோய் கடினமானால் வேப்பெண்ணெயில் ஒரு குளிகை உட்புகட்டி அடைசியிருக்கவும்.

- சிற்றரத்தை, கடுக்காய், வட்டுவேர், வரகரிசி, பொடி செய்து பொட்டளி கட்டிக் கொடுப்பிலடைசவும்.

- நற்சீரகம் ஓமம் திற்பலி தூதுவளை வேர் தேன் விட்டடைசவும்.

- சிறியாள் நங்கை வட்டு, தூதுவளை இவை வேர், கடுக்காய், மஞ்சள், எள்ளு, இருசீர் தேற்றாக்கொட்டை, இவை பொடி பண்ணி வேப்பெண்ணெயிலடச தீரும்.

## பாளச்சிலை

- சுத்தி செய்த துத்தம், துரிசு, வறுத்த இந்துப்பு இவை சமநிறை எடுத்து பழைய தேன் எருக்கம் பால் மருக்காரைச்சாறு இவை சம அளவு விட்டு தனித்தனி ஒரு மணித்தியால வீதம் அரைத்து மெல்லிய துணியிற்பூசி உலர்த்தி வைத்திருக்கவும். தேவையான போது வெந்நீரில் நனைத்துக் கொடுப்பில் அடக்கி உமிழ்நீரை விழுங்கி வருமிடத்து நோ சளிக்கட்டு தொண்டை வீக்கம் கரப்பன் கிரந்தி தீரும்.

### தொண்டையுள் கட்டு உடைக்க அடைசல்

- துத்தம், துரிசு பொடி செய்து வேப்பெண்ணெயிற் குழைத்துச் சீலையில் ஊட்டிக் கொடுப்பிலடக்கி உமிழ் நீரிறக்க உடைக்கும்.
- பொன்னாவரை வேர் பொடி செய்து நல்லெண்ணெயிற் குழப்பி அடக்க உடையும்.
- குன்றிப்பருப்பும் அபினும் கூட்டி எருக்கலம் பால் விட்டரைத்துப் புறத் திரட்சியிற் பூச உடைக்கும்.

### கண்டமாலை அடைசல்

- நெய்க் கொட்டான்பழம், இன்பூறல்சமூலம், அடம்புவித்து மஞ்சள் துத்தம் துரிசு சீனக்காரம் நிலக்குமிழ்வேர் கொறுக்காய்ப்புளி சமனிடை ஆடாதோடைச்சாறு விட்டரைத்து சீலையிற்றடவி வேப்பெண்ணெயிற் பொரித்து அடச நன்று.
- மருக்காரம்பழம் 100 பிழிந்து அச்சாற்றில் இந்துப்பு, சீனக்காரம், துரிசு பொடி பண்ணித் தூவிச் சீலையிலூட்டி அடசவும்.
- மாயாக்காய், திற்பலி, நற்சீரகம், மதுரம், சாதிக்காய், செண்பகப்பூ, இவற்றைப் பொடித்து மருக்காரம் பழச்சாற்றில் அரைத்துச் சீலையில் ஊட்டி அடசவும்.

### கண்டமாலை கொடுப்பு பீறி

- கடுக்காய், திற்பலி, கருஞ்சீரகம், உள்ளி, வசம்பு, ஈசுரமூலிவேர், முடிதும்பை வேர் அரைத்துப் பொட்டனி கட்டி அடைசவும்.

### சதை வளர்ந்திருந்தால் அடைசல்

- இந்துப்பு, சீனக்காரம், கொறுக்காய், மிளகு, சுக்கு இவை 5ம் அரைத்து அடைச சதை வளர்ந்திருந்தால் அறுத்துத்துப் துப்பரவாக்கும்.

### பற்பேத்தைக் கட்டு அடைசல்

- அரசந்துளிர், உப்பு, கொறுக்காய் விழுதுபட அரைத்து பொட்டளி கட்டி நல்லெண்ணெயிலூறப் போட்டடைச உடைத்துக் கரைக்கும்.

- புகையிலை அல்லது சிகைக்காய் தனித்தனி சுட்டுக் கரியாக்கி சமனிடை கூட்டி பல்வலி பல்லீறு சுரப்பு முதலிய இடங்களில் வைத்து அழுத்த துர்நீர் வெளிடமாகி வீக்கமும் நோயும் குறையும்.

### பல் பூச்சி கொதி வீக்கத்திற்கு அடைசல்

- பச்சைப் புகையிலை, வேப்பம்பட்டை, நொச்சிப்பட்டை, நாயுருவி சமூலம், கற்பூரம், உள்ளி, மிளகு காயம் இடித்து அடைசவும். ஒரு நாளைக்கு ஒரு முறை மாத்திரம் உடனுக்குடனிடித்து 3 நாள் காலையில் மட்டும்.

### பற்பேத்தைக் கட்டு அடைசல்

- கொறுக்காய்ப்புளி, துரிசு, சீனக்காரம், கறியுப்பு இவை 4ம் சமனெடை. கடைசி மூன்றையும் நன்கு அரைத்து பின் கொறுக்காய்ப்புளியைச் சேர்த்து மெழுகுபதம் அரைத்தெடுக்கவும். சுண்டைக்காய் பிரமாணம் தினமும் நோய் கண்ட இடத்தில் வைத்து வர வீக்கம் கரைந்து விடும். குத்துவலியும் சாந்தமடையும். ரணம் ஏற்பட்டு விட்டால் கடுக்காய் அவித்த நீரில் சீனக்காரப் பொடி போட்டு வாய் கொப்பளிக்க ரணம் ஆறும்.

# குடிமருந்து (அடைசலும்)

**உட்டணத்துக்கு குடிமருந்து**

- இளநீர் 3 படி, தேசிப்புளி 1 படி, சுண்ணநீர்த் தெளிவு அரை படி, குமரிச்சாறு பலம் 6, இவற்றுள் 1 பலம் நற்சீரகம், அரை பலம் ஏலம் பொடித்துப் போடவும். மணலில் ஈரம் செய்து அதன் மேல் மருந்துகள் சேர்த்த சட்டியை வைத்து ஈரச்சீலையால் மூடிப் பகலில் வைத்திருந்து இரவில் பனியில் வைத்தெடுத்து கால் படி காலை, மாலை உட்கொண்டு கூடுமானால் முக்கால் பலம் குமரிச்சாறு பருகிவர நீரெரிவு, இரத்த வெள்ளை, உள்ளெரிவு, கடுப்பு தீரும்.

- தேற்றாவிதை சந்தனம் மான்கொம்பு அரைத்துக் கொடுக்க உஷ்ண எரிவு மாறும்.

- பேதானம் நீரில் ஊறவிட்டு (1 பகல்) வடித்து சந்தன அத்தர் விட்டுக் குடிக்க உட்டண எரிவு குறையும். வெள்ளையும் தீரும்.

- புங்கம்பால், நல்லெண்ணெய் சமனிடை காலையில் 100 பட்டை நீரில் தோய்ந்து விட்டு 3 நாள் குடிக்கவும். பத்தியம் பாலும் சோறும்.

- கற்றாழை மணியும், சந்தனமும், பசுவெண்ணெயிற் குழைத்து தேசிக்காயளவு விழுங்கவும்.

- சீந்திற்றண்டு, நெல்லிமுள்ளி வகை 5 கள 2 நாழி நீரை 8:1 ஆக காச்சி பசுநெய் கலந்து குடிக்கவும்.

- பொன்னாங்கண்ணி வேர், வெள்ளறுகுவேர், முத்தற்காசு, நற்சீர், ஏலம், உலுவா சமனெடை பசுப்பாலில் அரைத்து தேசிக்காயளவு பாலிற் கலக்கிக் குடித்துவர வெள்ளை சாய்தல், எலும்புருக்கி தீரும்.

- படிகாரம், கற்கண்டு, நெல்லி வற்றல், சமனெடை தூள் செய்து 2 களஞ்சு வீதம் மோரில் கலக்கி 2 நேரம் 3 நாள் குடிக்கவும். வெள்ளை நீர்ச்சுருக்கு எரிவு தீரும்.

### இலிங்க எரிவுக் கடுப்புக்கு குடிமருந்து

- சிங்கி பஸ்பம், வங்க பஸ்பம், வெள்ளைக் குந்திருக்கம், கல்மதம் இவற்றை பச்சை வெண்ணெயில் அரைத்துச் சாப்பிட மாறும்.

### பிரமியத்துக்கு குடிமருந்து

- மாம்பட்டை 1 பலம் கற்றாழஞ்சோறு கடுக்காய் 6 பசுப்பால் விட்டரைத்துப் பிழிந்து பசுப்பாலில் கலக்கிக் குடிக்க கடுப்பு இரத்தம் தீரும்.
- சந்தனம், செண்பகப்பூ வகை கள 1, காவிக்கல் பொன்மெழுகு வகை கள 2 முலைப்பாலில் அரைத்து சுண்டைக் காயளவு முலைப்பாலில் கலக்கிக் குடித்துவர இரத்தப் பிரமியம் தீரும். தேற்றாவிதை எண்ணெயில் தின்ன நன்று.
- கற்றாழஞ்சோறு முருங்கைப்பூ பசுவெண்ணெயில் அரைத்து தின்னவும்.
- அத்திப் பிஞ்சைத் தேங்காய்ப்பால் விட்டு இடித்துச் சாறு பிழிந்து குந்திருக்கப் பொடி தூவி 6 நாட் குடித்து உப்பு, புளி விலக்கவும்.
- தேற்றாவிதையும், சந்தனமும், பசுப்பாலில் அரைத்துக் குடிக்க.
- வெள்ளறுகமூலம், புளியமிலை, இயங்கமிலை, ஈரவெண்காயம் இவை சாறு சரி சிறங்கை கோழிமுட்டை வெண்கருவும், எள் நெய் ஒரு சிறங்கையும் விட்டு நுரை கிளம்ப அடித்து முற்சொல்லிய சாறுகளுடன் கலந்து குடிக்க 7 நாட்காலையில் மட்டும் தோய்ந்து விட்டு வந்து குடிக்க வெள்ளை நிற்கும். பத்தியம் பாலும் சோறும்.

### சலத்துடன் இரத்தம்போகும் இரத்தப்பித்த குடிமருந்து

- சிற்றமட்டிவேர், சாத்தாவாரி சமனிடை ஒரு படி நீரில் அவித்து உழக்காக்கி பசுப்பாலுரிவிட்டு பின்னும் காச்சி உழக்காக்கி 6 நாள் இந்த விதம் குடிக்க இரத்தப் பித்தம் நீரிலுற்றால் பறக்குமென்றே.

### நீர்க்கடுப்பு குடிமருந்துகள்

- மணித்தக்காளிச் சாற்றில் மிளகுப் பொடி தூவி 10 நாள் குடிக்கவும்.

- புளியம் விதைக்கயர் நல்லெண்ணெயில் அரைத்து 4 நாள் கடுப்பு எரிவு:

- நிலப்பனைக்கிழங்கு, பேரீச்சம்பழம் பசுப்பாலில் அல்லது சாத்தாவாரிச் சாற்றில் குடிக்கவும்.

- பூனைக்காலி விதையை பசுப்பாலில் அரைத்து குடிக்க கடுப்பு ஏகும்.

- ஈருள்ளிச்சாறு 1/8 படி பொரித்த வெங்கார மேற்பொடி 1 வராகன் 3 நாள்.

- இளநீர் கண் திறந்து சீரகம், சீனிப்பாசிப்பயறு வகை 1 வராகன் இரவில் ஊறப் போட்டிருந்து காலையில் அரைத்துக் கரைத்து 3 நாள் 6 வேளை.

- கீழ்காய் நெல்லி இலை, 1 படி சீரகம், 1 வராகன் எருமைத்தயிரில் 3 நாள்.

- 3 வராகனெடை நீர்முள்ளி விதையை பசுநெய் விட்டு வெதுப்பி பொடித்து 1/8 படி தேங்காய்ப்பாலிற் கலந்து 3 நாள் குடிக்கவும்.

- முத்தற்காசு, ஆவாரை விதை, தேற்றாவிதை, புளியம் விதை மேற்றோல் வகை 1 பலம் பொடித்து 1 படி இளநீரில் இரவு ஊற வைத்து காலையில் குடிக்கவும்.

- சீனக்காரம், பொரிகாரம், இந்துப்பு, கற்பூரம், சாத்திரவேதி இளநீரில் குடிக்கவும்.

## நீரடைப்பு குடிமருந்துகள்

- கற்றாழஞ்சோற்றில் கடுக்காய் பொடித்துப் போட்டு சிறிது நேரத்தின் பின் வடித்தெடுத்த நீர் கால் படி பொரித்த வெங்காரம் 1 வராகனெடை பனைவெல்லம் கால் பலம் விரேசனமாகி நீரிறங்கும்.

- ஈருள்ளிச்சாறு கோடேற்ற காரம் கழஞ்சு, சாரக்குக்குட்த்தினெச்சம் தான்க ழஞ்சு வார்முலையாய் ஒன்றாய் வளாவி உடனருந்தக் கல்லடைப்பும், சென்றோடும் நீரடைப்பும்.

## சலபேதி

- ஷாலப்பறணி கள 1 கதர்லியூத் கள 2 (பேளை இந்துப்பு அல்லது சுத்தித்த இந்துப்பு) இவை இரண்டையும் பொடி பண்ணி கால் படி பசுப்பாலில் முக்கால் படி சலம் விட்டுக்கலக்கி 3 மணித்தியாலத்திற்கு ஒருமுறை பிரயோகம் அல்லது 2 கரண்டி வீதம் மணித்தியால வீதம் பிரயோகம். பிளைசாறிக் கசாயம் வாளிக்கஞ்சி நீரும் பாவிக்கலாம். பொரிகாரம் 4 கள நண்டுக் கல்லும் கூட்டலாம். (2 சரக்கும் இந்திய மருந்துக்கடை களில் கிடைக்கும்.)

## நெஞ்சால் இரத்தமெடுத்தால் குடிமருந்து

- பருத்தி விதை ஊற வைத்துப் பிழிந்த நீருடன் ஆட்டுப் பால் கலந்து கச கசா போட்டுக் குடிக்க நாலைந்து வேளையில் சுகம் வரும்.
- எருமைச்சாணக நீர் அரை கரண்டி, பன்னீர் அரை கரண்டி, (இரண்டும் கலந்து 1 கரண்டி) கடுக்காய், காட்டாத்திப்பூ, விரைத்திராட்சையும், மாயாக்காய் வகை 1 களஞ்சு கால் படி நீரை 3:1 ஆக்கிய கசாயம் 7 கரண்டி. எல்லாம் ஒன்று கலந்து தினம் 3 வேளை 3 நாள் கொடுக்க எத்தகைய கஷ்டசாத்திய இரத்தவாந்தியாயினும், காசத்தினால் ஏற்பட்ட இரத்தவாந்தியாயினும் தீரும். (3 நாளும் புதிதாக செய்க)

## மலேரியாக் குடிமருந்து

- நொச்சித்துளிர், கறிவெங்காயம், தேங்காய்ப்பூ (உடன் பூ) மூன்றும் வகை ஒரு பிடி தண்ணீர் விடாமல் இடித்துச் சாறு பிழிந்து 3 நேரம் காலையில் மட்டும் குடிக்கக் கொடுக்க மலம் பிரவிர்த்தியாகும். சுரம் நிற்கும்.

## விசர்நாய்க் குடிமருந்து

- எருக்கலம் வேர், இலைப்பழுப்பு, புன்னைக்காய்ப்பருப்பு இவை அரைத்து அவலில் பிசறி உண்ண பேய் நாய்க்கடியை மாற்றும்.

### குன்மத்துக்கு குடிமருந்து

- தும்பைக் கொழுந்து, சுக்கு (உப்புக் கவசித்துச் சுட்ட சுக்கு உள்ளி நல்லது) உள்ளி, மிளகு, ஓமம், வசம்பு அரைத்து எருமை மோரில் கலக்கிக் குடிக்கவும். அசீரணம் குன்மம் வயிற்றுவலி தீரும்.

### கெற்பனி சோதனைக் குடிமருந்து

- செங்கழநீர்க்கிழங்கு, கோட்டம், மதுரம், துரிசு, நாகம்பூ ஐந்தும் சமனெடை தேனில் அரைத்து அப்பாவிலிய கெற்பமானால் உவாந்திக்கும். ரோகமானால் பஸ்மீகரமாகும். கடுமையாய் உவாந்தித்தால் பட்டுக் கறுப்பு தேனிலீயவும்.

### கெற்பனி சூதக ஒழுக்குக் குடிமருந்து

- மதுரம், நெய்தல் கிழங்கு, சந்தனம், நன்னாரிவேர், வெள்ளிலோத்திரம் ரூபா எடை 1/8 வகைக்கு பச்சையரிசி கழுவிய தண்ணீரில் அரைத்துக் கலக்கிக் கொடுத்து வரலாம். வகைக்கு விராகனெடை அரை சலம் விட்டரைத்து 3 பங்காக்கி 1 பங்கு வீதம் பச்சையரிசி கழுவிய நீரில் 3 நாள் கொடுக்க கெற்பனி துவாலை தீரும்.
- மாயாக்காய், மதுரம், சந்தனம், பற்படாகம் வகை ரூபா எடை கால் பசுப்பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுத்து வரலாம்.
- மதுரம், மஞ்சிட்டி, செங்கழ நீர்மூலம், காட்டாத்திப்பூ வகை காசெடை அரைத்து பாலில் கலக்கி சக்கரை கலந்து 3 நாள் குடிக்கவும்.
- பற்படாகமும், நெல்லிச்சாறும் அரைத்து பாலிற் கலந்து குடிக்க தீரும்.
- நெய்தல் கிழங்கு மாவை பாலில் போட்டுக் காச்சி சக்கரை கூட்டிக் குடிக்க தீரும்.

### பெற்றவள் வயிறுபழத்தால் (றொட்டி)

- முசுட்டை இலை, சிந்தில் இலை, பாவல் இலை, நெல்லரிசியோடு இடித்து றொட்டி சுட்டு நல்லெண்ணெயிற் தோய்த்துத் தின்னமாறும்.

## களி

- உதிர வேங்கைப் பட்டை, அமுக்கிறாய் வேர், வேலம்பட்டை, இவை தனித்தனி மாவாக்கி துறுவை நெல்லுமாவுடன் கலந்து களிக்கிண்டி நல்லெண்ணெயில் தோய்த்து தின்ன குத்து கொழுவல் வயிற்றுப்புண், கழுநீர் போலி தீட்டுப்படுதல் தீரும்.

## குடிமருந்து

- புளியமிலை, இரா அடுப்பில் ஊற வைத்து காலையில் பிளிந்து திரிகடுகு, மஞ்சள், வெங்காயம் சமனெடை அரைத்துப் பனங்கட்டி கூட்டிக்காச்சி ஆமணக்கெண்ணெயில் உள்ளி அரிந்து தாளித்துச் சேர்த்து உள்ளும் கொடுத்து மேலும் பூசவும்.

## பெற்றவள் சிவாத காசறொட்டி

- கராம்பு, வசுவாசி, சாதிக்காய், மாயாக்காய், ஏலம், இலவங்கம், மதுரம், சுக்கு, மிளகு, இஞ்சி, சிறுதேக்கு, ஓமம் வகைகள. க. உள்ளி பலம்க. உள்ளிச் சாற்றலரைத்து றொட்டி தட்டி எலுமிச்சை இலையில் வைத்துச் சுட்டுத் தின்னப் பெற்றவள் சிவாதம் களிச்சல், நெஞ்செரிவு, வாய்வு தீரும்.

## அழல் வாதக் குடிமருந்து

- சாத்திர வேதிகள 1, சக்கரை கால் பலம், கால் படி பசுப்பாலில் அரைத்து காச்சி 7 நேரம் குடிக்க அனல் வாதம் மாறும் செய்து கைகண்டதெனப் பாடம்.

## உருதுவாகாத பெண்களுக்கு குடிமருந்து

- பருவமாகிய பாவையராயினும் இருது வில்லா இருஷியென்பர் அந்த தெரிவையர்க்குத் திரண்ட உருதுவாய் மருவ நல்லா மருந்தை யும் சொல்லக்கேள் செம்பரத்தம்பூ திகழ்மேதியின் தயிர் அம்பு போல விழியார்க்கருத்திப்பின் கம்பியாகும் கரியவளையலாடின்பமாவிலிப் பனங்கட்டியும் எண்ணெய்க் குத்தித் குழைத் தேழு நாட்களே உண்ண மூப்புப்புடைக்குமுதரத்தில் தண்ணென்றில்லாத்தழல் போலழன்றிடில் உண்ணமுன் போலுரை மேதியின் தயிர்.

### சூதகத்தடைக் குடிமருந்து

- உலுவா, உள்ளி வகை ஒரு பிடி, பெருங்காயம் கொட்டைப்பாக்களவு, முருங்கைப்பூ, தேங்காய்ப்பூ சமனிடை நீற்றுப்பெட்டியில் அவித்துப் பிளிந்த பாலால் அரைத்து குழம்பாய் காச்சி ஒரு பச்சைப் பாக்களவு ஒவ்வொரு நேரமும் தின்னவும்.

- காட்டாமணக்கு கிழங்கை பச்சையாகப் பசுப்பால் விட்டு அரைத்து கொட்டைப்பாக்களவு காலையில் மட்டும் 3 நாள் பசுப்பாலில் கலக்கிக் குடிக்க குணமாகும்.

### இரமாநித சூதகக் குடிமருந்து

- மாவிலங்கம்பட்டை, தென்னம்பாளை, கத்தரிக்காய்ச்சாறு, நல்லெண ணெய் விட்டுக் குடிக்கவும்.

### கெற்பவாயுக் குடிமருந்து

- துத்தி இலை, உள்ளி, மிளகு வகை 1 பலம், வசம்பு வராகனிடை 1, இவை களைசலம்விட்டுஅரைத்து3பங்காக்கிமாதாந்தரருதுகாலநாளில்3நாளும் காலையில் மட்டும் ஒவ்வோர் பாகமாய் கொடுக்க சூதகவலி குணமாகும். பின்னர்குப்பைமேனி,பொற்றலைக்கரிப்பான்,சிறுசெருப்படைநிலவாகை வேர் இவைகளை உலர்த்தி சமனெடை சூறணித்து 20 நாள் திரிகடி தேனில் சாப்பிட சூதகவாயு தீரும்.

### பெருப்பாட்டுக் குடிமருந்து

- அபின், சாதிக்காய், கராம்பு, சுக்கு சமனெடை கையாந்தகரைச் சாறு விட்டரைத்து உருட்டி அல்லது தேனில் குடிக்கவும்.

- ஆவாரம்பட்டைத்தூள் 2, சுக்கு, களிப்பாக்கு வகை பலம் க. இரசம் அரை கள நாவற்பட்டைச்சாற்றில் அரைத்து கிளுவங்காயளவு உருட்டிக் காலை மாலை பசுப்பாலில் கரைத்துக் குடிக்க துவாலை பெரும்பாடு சியல் வெள்ளை புண்பாடு வயிற்று நோ மாறும்.

- வெள்ளைக் குந்திருக்கும் சாதிக்காய் சிலை சுட்ட சாம்பல் வகை பலம் க. அபின் கள 2, பொடி செய்து தேனிற் தின்ன மேறகண்ட ரோகங்கள் தீரும்.

- கஞ்சா (வெள்ளை) அதாவது சாளை மீன் கருவாட்டை நெருப்பில் சுட்டு பொடி பண்ணி கருப்பஞ்சாற்றில் வெருகடிப்பிரமாணம் அரை அல்லது ஒரு மண்டலம் குடித்து வர ஒரு மருந்தாலும் ஆறாத எந்தப் பெரும்பாடும் ஆறும்.

- பருத்தி இலைச்சாறு 2 பங்கு, நல்லெண்ணெய் ஒரு பங்கு வெள்ளைச் சீலை சுட்ட சாம்பல் 1 பாக்களவு கூட்டிக் கொடுக்க நிற்கும் மிஞ்சினால் 3 நேரம் குடிக்க மாறும்.

## பித்தக் குடிமருந்து

- வில்வ மரத்தின் வேருடனே விரும்பு மதன் பூப்பழம் பிஞ்சு
  சொல்லும் பத்திரி காயதுவும் சுகமாந் நெல்லியதின் வேரும்
  நல்ல கறிமுல்லையின் வேரும் நயமாய்ப்பல மொன்றைவை கூட்டி
  நெல்லிக் காயினுடன் பச்சைப் பயறு நெல்லின் பொரிதாலும்
  தானே வகைக் கோர்படி கூட்டித்தரு செவ்விளநீர் விட்டரைத்து
  தேனேபோல நாலுமுறை இடித்துப் பிழிந்து சீரகத்தூள்
  மானே பல மொன்றதிற் கரைத்து மன்னுமெலு மிச்சையிற் புளியும்
  தானே படியொன்றது விட்டுத் தருதேனதுவும் அரை படியே
  படியே கூட்டிக் காய்ச்சியது பாணிப்பதமா யிறக்கி முறைப்
  படியே தின்று வரப்பித்தம் பலமும் சித்தி அருவருப்பும்
  கொடிசேரியடையாய் கிறுகிறுப்பும் கூறும் அழற்சி நடுக்கமதும்
  துடியே நெஞ்சிற் படபடப்பும் தொலைந்து போகும் துணியாமே.

- எருக்கிலைப்பழுப்பு அரை படி சாறு, பூ இலை காய் மூன்றையும் ஒன்றரை சிறங்கை கறிலவணம் போட்டித்து நீராகரத் தண்ணீரிற் கலக்கிப் பிழிந்து வடிகட்டி 3 நாள் காலையில் ஸ்நானம் செய்யாது கொடுக்கவும். மலமும் போகும் உவாந்தியாகும்.

## வயிற்றுளைவு கடுப்பு குடிமருந்து

- துத்தியிலையும் விளாங்காயும் துவைத்து எருமை மோரில் குடிக்கவும்.

- விளாங்காய் தேங்காய்ப்பாலில் அரைத்து கரைத்துக் குடிக்கவும்.

- இலவம்பிசின், விளாம்பிசின், வேலம்பிசின், நீர் விட்டு அவித்து 4:1 ஆக்கி ஓமம், நற்சீரகம் அதிவிடயம் கூட்டி எருமைத்தயிரில் அரைத்து கரைத்து குடிக்கவும்.

- கருவேப்பிலைச்சாறு, வாழைப்பூ, விளாங்காய், மாதுளங்காய், கைப்பு, களிப் பாக்கு, நாவல், புல்லாந்தி, ஆல்அரசு, அத்திவேல் இவை பட்டை இடித்து அவித்து சுக்கு, நற்சீர், ஓமம் விட்டு அவித்து கொடுக்கவும்.

  தவளை நுரையீரலில் இருக்கும் முட்டையையும் சீரகத்தையும் அரைத்து பசு அல்லது ஆட்டுப்பாலில் 3 நாள் குடிக்கவும்.

- சீரகம், மல்லி, மாதுளம்பிஞ்சு, கீழ்க்காய் நெல்லிவேர் வெந்நீரில் அரைத்து காலையிலேயே இரத்தக் கழிச்சம் தயிரும் சோறும்.

- கடுகு, களிப்பாக்கு, சுக்கு கடிய இந்துப்பு நான்கும் 4:3:2:1 ஆகக்கூட்டி கழுநீரில் கொடுக்க இரத்தம், சீதம், கழிந்து உடல் சுத்தியாகும்.

### அக்கரத்துக்கு குடிமருந்து

- திப்பிலி இரு சீரோமம் திகழுதிமதுரம் ஏலம் பொற்புறுநாகை உள்ளிபுகலிலவங் கம்மாயாச்
  சொற்பெறு கராம்புவாசி தூய சாதிக்காய் கோட்டம் சிற்புறுமரத்தை சுக்கு ஈருள்ளி கடுக்காய் இந்துப்பு
  இந்துசெவ்வள்ளி பூதவிருக்க மோடியல் செஞ்சந்தனம் ஒன்றொரு கழஞ்சாய் முதிர்வள்ளிச் சாறரைத்து
  கந்தமாண்பனையின் வெல்லம் கலந்து மேயருந்து வரேல் தொந்தஅக்கரங்க ளெல்லாம் துணிந்துடன கலுந்தானே.

### சக்குவானுக்கு குடிமருந்துகள்

- மான்கொம்பு சீந்தில் சக்கரை திற்பலி கராம்பு அக்கரா கோரோசனை அரைத்துத் தேன் நெய்யில் கொள்ளவும்.

- பிரண்டையை வாட்டிப் பிழிந்து சாற்றைப் பனம் பன்னாடையால் வடித்துத் தேன் சேர்த்துக் குடிக்கவும்.

- கண்டங்கத்தரி வட்டு, ஆடாதோடைவேர், வல்லாரல் இவை பசு நெய்யிற் காச்சிக் கொடுக்கத் தப்பாது மாறும்.
- அகத்தியிலைச் சாறு, நிம்பநெய் இரண்டையும் கொதிப்பித்து இறக்கி இளஞ்சூட்டில் விளைவு கற்பூரம் பொடித்துப் போட்டு 3 நாள் குடிக்கப் பூச்சி விழும்.

## எலிக்கடிக்கு குடிமருந்து

- பச்சை நன்னாரி வேரைப் பசுப்பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கலாம். "அணிஞ்சில்பட்டை அல்லது மரக்காரைப்பட்டை வேர்ப்பட்டையையும் பசுப்பாலில் கொடுக்கவும்."
- உள்ளி 1/8 ரூபா எடை கொடிக்கள்ளிப்பட்டை 3/4 ரூபா எடை ஒன்று சேர்த்து அரைத்து பழஞ் சோற்றுத் தண்ணீரில் 3 நாள் காலையில் மட்டும் இந்தளவில் கொடுக்கலாம்.

## வலி இடையிடை வந்தால் குடிமருந்து

- மொசுமொசுக்கைச் சாற்றில் கள்ளு மண்டி கலந்து சுக்கு வசம்பு பொடி செய்து போட்டு வேப்பெண்ணெய் விட்டு கலந்து 7 நேரம் பத்தியமாய் குடிக்கவும்.

## சாம்பல் மண் தின்றால் குடிமருந்து

- கத்தரிக்காய்ச்சாறு 2 தேக்கரண்டி சுட்ட பெருங்காயம் 1/16 ரூபா எடை ஒன்று சேர்த்துக் கொடுத்து வரலாம்.
- மிளகு 1 ரூபா எடை, கடுக்காய் தோல் 3/4 ரூபா எடை, கீழ்க்காய் நெல்லிவேர் அரை ரூபா எடை சேர்த்துக் கொடுத்து வரலாம்.
- புளித்தமோரில் 2 அவுன்ஸ் உடன் 1/8 எடை மருந்தைக் கரைத்து கொடுக்கவும்.

## குலைப்பனுக்கு குடிமருந்து

- மிளகும் சித்திரைப் பாலாவி 2 மூலமரைத்துக் கொடுக்கலாம்.
- சுக்கும் தோடையிலையுமரைத்துக் கொடுக்கலாம்.

## வாதசூலைக் குடிமருந்து

- 100 சூ சென்ற வேப்பம்பட்டை 100 பலம் கடுக்காய் 100 கோசலம் தூணி இவை ஒரு சாடியிட்டு மூடி மண்சீலை செய்து மாட்டுத் தொழுவத்தில் புதைத்து மண்டலஞ் சென்றெடுத்து வடித்து தினம் உழக்காக புளிப்பு நீக்கி காலையில் மட்டும் மண்டல் குடிக்க வாத சூலை தீரும்.
- குமரிக் கற்றாழைக் கிழங்கு துவைத்துப் பிழிந்த சாற்றில் பசுப்பால் கலந்து 5 நாள் குடிக்க உட்டணவாதம் தீரும்.

## அண்டவாதம், குடல்வாதம் குடிமருந்து

- முருங்கை இலை, உள்ளி, வெந்தயம், கழற்பருப்பு, மிளகு, சுக்கு அரைத்து காச்சி குடிக்கவும். (இலை ஒரு பிடி, சுக்கு, மிளகு வகை 2 விராகளிடை, மற்றவை வகை 1/8 படி என பாடம்)
- கான்றை இலையும், கடுகும் அரைத்துப் பனங்கள்ளில் கலக்கி வெயிலில் வைத்து கொதித்த பின் கொடுக்கவும்.
- சூதம் பொன்னரி தாரம், காயம் சுக்கு கழற்சிவிதை இயங்கம் வேர் இவை அரைத்து தேங்காய்ப்பாலில் கலக்கிக் குடிக்கவும்.
- 1 பிடி கருஞ்சீரகம், 10 உள்ளிப்பூடு, தேனில் அரைத்து இந்தப்படி 6 போது கொள்ளத்தீரும்.
- குறிஞ்சா இலையை பிட்டு அவித்து பிழிந்த சாறு 1/8 படியில் சுக்கு, உள்ளி, மிளகு, நற்சீர், கடுகு, வெந்தயம் வகை 1 வராகனெடை வெதுப்பு பொடித்து தூவி 3 நாள் குடிக்கவும். குடல் வாதம் தீரும்.
- வேளை வேர், கழற்பருப்பு, உள்ளி, முருங்கைப்பட்டை, சுக்கு வகை 3 விராகனெடை இவைகளை சிதைத்து 1 படி நீரில் 8:1 ஆக்கி 3 போது கொடுத்து அப்பால் தழுதாழைச்சாறு 1/8 படி விளக்கெண்ணெய் 1/16 படியில் கலந்து கொடுக்கத் தீரும். (குடல் வாதம்)
- களற்பருப்பு, சாறணை, மிளகு, இந்துப்பு, காயம் உள்ளி, வசம்பு சமனெடை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுக்க அண்டவாதம் தீரும்.

- திருகு கள்ளியை வாட்டிப் பிழிந்த சாறு நல்லெண்ணெய் சமனெடை (ஆள் பெலத்துக்குதக) 3 நாட் கொடுத்து 6 நாள் பத்தியம் காக்க அண்டவாதம் தீரும்.

## மருத்தீட்டுக் குடிமருந்து

- சிற்றகத்தி இலையும் கஞ்சாங்கோரைக் கொட்டையும் பசுப்பாலில் அரைத்துக் குடிக்கவும். பேரகத்தி இலையும் கூட்டலாம்.
- சிற்றகத்தி இலையும், பாசிப்பயறும் தேங்காய்ப் பாலில் குடிக்கவும்.
- 3 எலுமிச்சம்புளியும், அரப்பொடியும் தேங்காய்ப்பாலில் கலந்து வெயிலில் வைத்து எண்ணெய் வடித்து சுக்கு, மிளகு, கழல்மணி 15, வாளம் 5 பொடி செய்து பதத்தில் எண்ணெய் வடித்து காசெடை வெந்நீரில் குடிக்கவும்.
- முருங்கை இலைச்சாறு தேங்காய்ப் பாலில் கலந்து குடிக்கவும்.
- செவ்விளநீர் குரும்பைச்சாறு எடுத்து இந்துப்பு பொடி கலந்து குடிக்கவும்.
- துயி 8ற் வேண்டிய தின்பட்டை ஒரு தேசிக்காயளவு அரைத்து முதல் நாள் கேவர்மாக் குரக்கன் கூழாய் கிண்டி அதை பள்ளமாக்கி 1 படி நீர் விட்டு மூடி வைத்து விடியவும் 1/8 படி நீரில் அதிலிறுத்து அதில் முக்கால் வெல்லக்கட்டியும் மருந்தும் கரைத்து 3 நாட்காலையில் மட்டும் குடிக்கவும். உப்பு, புளி, எண்ணெய் குளிப்பு முழுக்கு விலக்கு. இதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. கஞ்சி அல்லது சாதம் கொடுக்கவும்.
- தேங்காய்ப்பால் 2 படி, வல்லாரைச்சாறு 2 படி இதை அரை படியாய் காச்சி திற்பலி ஏலரிசி வகை 1 வராகனெடை இளவறுப்பாய் பொடித்துப் போட்டுக் குடிக்கவும். மலத்துடன் உருண்டு உருண்டு கட்டி கட்டியாய் விழும்.
- முதல்நாள்ஸ்நானம்செய்து ரசமும் அன்னமும் உண்டு தேங்காய்ப்பாலிற் சர்க்கரை கலந்து குடிக்கக் கொடுத்து கம்பளத்தில் படுக்க வைத்து மறுநாள் முருங்கை இலை வதக்கிச் சாறு படி 1/4ல் பசுப்பால் படி கால் சேர்த்து காலையில் கொடுக்க பேதியில் மருந்து விழும்.

### அபானவாயுக் குடிமருந்து

- செப்பு மிதற்குப் பரிகாரம் சேரும் உள்ளி மோதக மிந்
துப்புமரைத்துப் பொடியாக்கி உற்ற தேனிற் குழைந்துண்ண
ஒப்பாம் கான்றை வேர் சுக்கு உள்ளி யொடுகாக்கணம் வேரும்
அப்பிற் காச்சியிட்டருந்த அபானவாயு அகன்றிடுமே
இடுமே முதலிற் பேதிபண்ணி இயம்பும் மருந்து பிறகுகொடு
துடி சேரிடையாய் காய்ந்தநீர் தொட்டே குடிக்க நன்றாகும்
படிசேருள்ளிதனைப்பாலில் அவித்துக் கடைந்தே ஓமமதில்
பொடி குங்குமப்பூ மேற்றூவிக் கொடுக்க அகலும் பொருவாயு.

### இடி நோவுக்குக் குடிமருந்து

- கத்தரிக்காய்ச்சாறு, குறிஞ்சாச்சாறு, மாம்பட்டைச்சாறு, நல்லெண்ணெய், கோழி முட்டை, தேன், கருப்பட்டி நெத்துத் தேங்காய் குடிக்கவும்.

### வியத்தி (அடிவயிறு விதை) க்கு குடிமருந்து

- மரமஞ்சள் 2 பலம் நீர்நாளி கோநீர்நாளி விட்டு 8:1 ஆக காச்சி குடிக்கவும்.

### ஓங்காளம் சத்திக்கு குடிமருந்து

- வல்லி இளநீரவித் தெடுத்து வாகாய் மதுரம் சந்தனமும்
நெல்லின் பொரியும் மாந்துளிரும் நேராயரைத்து ஒன்றாக்கி
நல்ல இளநீர் தனிற் கொடுக்க நாடேதே கேள்சத்திகளும்
கொல்லு மோங்காளம் முதலாய் குடிபோ மென்றார் பெரியோரே.

### இருமல், கசம், கோழை, உளமாந்தைக் குடிமருந்துகள்

- குன்றி முசுட்டை கொடிவேலி கூறும் வேலிப்பருத்தி இலை
நின்ற நிலத்திற்குமிழ் வேரும் நீதிபயிலும் பூளை இலை
சென்றே பிடுங்கும் சிற்றமட்டி சேர அரைத்தே ஆன்பாலில்
அன்றேகுடிக்கில் உளமாந்தை அகன்றேசியல் புண் ஆறிடுமே.

- உப்பிலியின் வேரு முலர்ந்த விடத்தோலிலையும் ஒப்பாமுசுமுசுக்கையும் மிளகும் இப்படியே கோவின் பால் தன்னிற் குடிக்க விழந்தோடும், மேவுமுளைமாந்தையது விட்டு.

- மதுரம், திற்பலி, இருவேலி லாமிச்சு, நெல்லிக்காய் வகை கள.2, நெற்பொரி கள.4, இளநீர் விட்டு அரைத்துக் காச்சிக் குடிக்க நெஞ்சுப் புண், காங்கை புடைப்பு இருமல் வரட்சி தீரும்.

## ஒடுக்கக்க காரக் குடிமருந்துகள்

- துத்தம் துரிசு சீனக்காரம் சமனிடை பொடித்து பொடிக்குப் பாதி கடுக்காய்த்தூள் கூட்டி வெந்நீர் விட்டரைத்து கொம்புப் பாகலிலைச் சாறு ஒரு சிறங்கையில் கரைத்து குடிக்க கொடுத்து நோகிறபக்கம் கீழே வைத்துப் படுக்க வாயாலெடுக்கும் அன்றி வயிற்றாலே சலம் கழியும்.

- இலுப்பைப்பட்டை, அத்திப்பட்டை, அகத்திப்பட்டை, புங்கம்பட்டை, நாவற்பட்டை, நிலக்குமிழ்வேர், வட்டுவேர், இயங்கம்வேர், ஆலம் பட்டை இவை வெவ்வேறாயரைத்து வகைக்கு தேசிக்காயளவு, உமி தண்ணீரிற் கலக்கி பன்னாடையால் வடித்துக் காச்சி நீரும் திரையுமாய் வரும் போதிறக்கி மறுபடியும் வடித்து துரிசு சீனக்காரம் வெள்ளைக் குந்திருக்கும் வகை கள.1 பொடி செய்து போட்டுக் கலக்கி இராமுழுது மூறவிட்டு காலையில் 1 சிறங்கை கொடுத்துப் படுக்க வைக்கவும். ஒடுச் சவ்வைப்பிச்சு வாயாலெடுக்கும். பின்முந்திய பசுமருந்து (மேற்பொடி நீக்கி) மட்டும் கொடுக்கவும்.

- நீலகண்டா, சீனக்காரம் வகை கள.1 வெண்கரு 10ல் கலக்கி குடிக்கவும்.

## சுகபேதிக் குடிமருந்து

- கடுகுரோகணி, கடுக்காய், ஒரளவாய் தூள் செய்து பிள்ளைக் கற்றாழைச் சதையை வாங்கி கழுவி தூளைப் போட்டு 4 சாமம் வைக்க நீராகும். அத்துடன் ஆமணக்கெண்ணெய் கூட்டிக் குடிக்கவும். கற்கண்டு தூளு மாகும்.

### விசர் நாய்க்கடிக் குடிமருந்து

- கத்தரிப்பிஞ்சு, எள்ளு, வெல்லம் இவை சமனெடை அரைத்து காலை, மாலை தேசிக்காயளவு 3 நாள் கொடுக்க வெறி நாய்க்கடி குணமாகும். உப்பில்லா பத்தியம்.

### திமிருக்கி குடிமருந்து

- சங்கிலைச் சாறும் வெள்ளாட்டுப்பாலும் சமனெடை கலந்து கால் படி வீதம் 3 நாள் குடிக்க மாறும்.

### தாது புஷ்டிக் குடிமருந்து

- ஏர் நிலப்பனையின் கிழங்கோர் பலம் வேர் தண்ணீரை விட்டான் கிழங்கோர் பலம் தேர் நெருஞ்சிவேர் சேர்த் திட்டொருபலம் பாரைத்தாவிநன் பாலுனக் கூட்டிடு கூட்டுமான குழம்பு கொதித்துடன் முட்டு நித்தம் முனைந்து குடித்திடில் காட்டுவீரியம் கைகண்டதிம் முறை மாட்டுலக்கையாமல் குலிற் கண்டிடே.

- சந்தனம் தேற்றாக்கொட்டை அபினுடன் சாதிக்காயும்
முத்திய முருங்கை வேரும் முது நிலப்பனைக் கிழங்கும்
வெந்திடும் பாலிற் கொள்ள விந்துவீழாது திண்ணம்
பந்தெனும் முலையாராவி பறித்திடு முலக்கையாமே.

- பாரப்பா சந்தனமும் தேற்றாவித்தும் பண்பான பூமிசர்க்கரையின் மூலம்
சேரப்பாபூனையென்றகாலிவித்துஞ்செயலானமுருங்கைவேர்ப்பட்டை கூட்டி
கூரப்பா வகைவகை விராகன் ரெண்டு கொற்றாவனே தானரைத்து தேங்காய்ப்பாலில்
தீரப்பா சீனிசர்க்கரையும் போட்டு திறமாகக் குடிப்பீர் ஈரறு நாளமே
ஆமடா குடித்து வரதாது புஷ்டி வீரியம் தேகசாந்தி மதனபோகம் புலிப்பாணிபாடினேறே.

### பெரும்பாட்டு குடிமருந்து (கெற்பனிதுவாலை கட்ட)

- இரத கருவாழைக்கிழங்கு, நாவற்பட்டை, ஆத்திப்பட்டை பிஞ்சு,

தென்னம்பாளை இவை சாறு சரி வடித்து அவ்வளவு தேனும் கூட்டி கைப்பு ஒரு பாக்களவு சுக்கும் கூட்டி அரைத்து காச்சி நகச் சூட்டுடன் குடிக்கமாறும்.

- ஆவின் கொழுந்தும் அதின் விழுதும் ஆனபீளை அதின்வேரும்
கோல ஆவரை வேர்ப்பட்டை குணமாம் பசுப்பால் தனிற் கொடுக்க
ஆலம் புகலும் பெரும்பாடும் அற்றே விழுந்து மாறிவிடும்
காலன் வந்து முடுகானே கருது மருந்தும் இதுவாமே.

## கெற்ப வாயுக் குடிமருந்து

- வட்டத்துத்தி இலை 1 பிடி, உடைத்த உள்ளி மிளகு வகை கள.2, வசம்பு கள கால் இவற்றை பொடி செய்து அரைத்து 3 பங்காக்கி 1 நாள் 3 முறை சாப்பிடவும். இளவெந்நீர் குடிக்கவும். இப்படி மாதவிடாய் வந்த 3 நாளும் குடிக்க நோய் விரைவில் நீங்கும்.
- மாதவிடாய் ஆன அன்றும் அடுத்த நாளும் இவ்விரண்டு அவுன்சு குப்பைமேனிச் சாறு குடிக்கின் சூதகவாயு தீரும். வயிற்றுவலி இருக்கும் பொழுதே குடித்தல் வேண்டும்.
- மாதவிடாய் வந்த பின் 3ம் நாள் முழுகியவுடனேயே 2 அவுன்சு மலைவேம்பின் இலைச்சாறு 1 தேக்கரண்டி பச்சை மஞ்சட்சாறு ஒரு தேக்கரண்டி நிம்பநெய் ஒன்று சேர்த்து குடிக்கவும். கெற்ப வாயுக் குத்து நீங்கும். நீங்காவிடில் அடுத்து 3 மாதவிடாய் காலத்துக்கு இப்படி குடிக்க தீரும்.

## மாறாத கழிச்சலுக்கு மரக்காரைக் கழி

- வெந்தயம், வெங்காயம் 4 விரலிடை இவை இரண்டும் பொன்மேனியாக வறுத்து மரக்காரை இலை நறுக்கிப் போட்டு வதங்கிய பதத்தில் தேங்காய்ப்பால் விட்டு களியாகக் கிண்டி (சிறுவருக்கு) கொடுக்கவும். நிச்சயம் கட்டும் கை கண்டது.

மலம் இறுக்கிக் கட்டி விட்டால் வில்வைப்பழம் நாக்கில் தடவி உமிய சரியாகும்.

# காயம்

## கெற்பசூலைக் காயம்

- கொற்றா னெருக்குவாய் நிலவாகை நிம்பம் கொடிக்கழலிலைக் கள்ளி வான்கொன்றையோடு
  சொற்பாவு நீர்க்குண்டி காற்றோட்டி கான்றை சொலுமுத்த மாகாணியது மாவிலங்கையோடு
  பிற்றாவு பாவட்டை நல்வேரு மின்னும் பெருகு சாறணை வேரு மொருபிடி வகைக்கே
  பிற்பாடு தூளாகவே நாளிகேரப் பெட்புற்றதுருவலிற் பிட்டாயவித்தே
  சாறுபிழிந்து சட்டியிட்டுச் சாற்றும் விடயம் இருசீரம்
  கூறுங் கன்னாரச மோதம் கொடியவாளம் நறுங்காயம்
  தேறும்பலை மூன்றுள்ளி திரிகடுகு மல்லி கடுரோணி
  சீறுஞ்சரக்கை இடித்தளவித்திரளக்காச்சியதற் பின்னை
  கள்ளிப்பாலதனினோடு காட்டிய ஏரண் டெண்ணெய்
  உள்ளுற விட்டு காச்சி உற்ற நற்பதத் தெடுத்துக்
  கொள்ளவே உதரந்தன்னிற் கொண்டிடு கெற்பசூலை
  அள்ளிலை வேலாற் சூரையட்ட வனருனாற் போமே.

## கெற்பவாயுக் காயம்

- திரிகடுகு, கடுக்காய், சாம்பிராணிகாயம் கல்மதம் வெண்காயம் மஞ்சள் குந்திருக்கம் இந்துப்பு சமன் பொடி செய்து திராய், பாகல், ஆடாதோடை வேம்பு இவை இலைச்சாறு சமன் கலந்து காச்சி வற்றிவரும் போது பொடி தூவிக் காயங் காச்சி எண்ணெய் வகைப் பிறப்பத்தியம் முடிய கொடுக்கவும்.

- காயம், ஓமம், நற்சீர், மல்லி, உலுவா வகை கள.2 உள்ளி ஒரு சிறங்கை கழற்சி விதை ஒருள்ளிப் பருப்பு, முகிழ் வகை ஒரு சிறங்கை இவையெல்லாம் பொட்டனிகட்டி கம்பளியால் வேடுகட்டி முருங்கை, முடக்கொற்றாணிலை பரப்பி அதன்மேல் பொட்டனியை வைத்து மழத்தேங்காய்ப் பூவால் மூடிச்செம்மி மேலே சட்டி மூடி அவிக்கவும்.

அவிந்த பின் இலை, பூ வெவ்வேறாய் பிழிந்து கலந்து பொட்டனியிற் சரக்கரைத்து கரைத்து காச்சி எண்ணெய் பிரியும் பதத்திலிறக்கி தான்றிக்காயளவு உட்கொள்ள கெர்ப்பவாயு கிருமி உதரப்புண் வெட்டைப் புண் தீரும்.

- உள்ளி, மிளகு, கடுகு, காயம், கொம்பு (சுக்கு), வெண்பிசின் வசம்பு, மஞ்சள் திராயிலை, வேப்பிலை அவித்து தண்ணீரெடுத்து காயம் காச்சி ஈயவும்.

- வேர் காண்டை, காற்றோட்டி, நொச்சி பெருமருந்து சாறணை, மிளகு, உள்ளிகாயம், மாஞ்சில் மஞ்சள், இந்துப்பு, துரிசு பேரரத்தை, வாலுழவை கற்பூரம், கார்புகா காந்தம், கடுக்காய், கராம்பு வகை கள.1 வாளம் கள.2 சாறணைச்சாற்றில் அரைத்து 2 பாகமாய் காச்சவும். மிளகுசாறு கூட்டி உணவருந்தவும். இது திடனெனப் பாடம்.

## கெற்பவாய்வில் துவாலை கட்டினால் காயம்

- ஆடாதோடைவேர், பாவட்டைவேர், கற்றாழைக்கிழங்கு, கான்றைவேர், உத்தமாகாணி வேர், பூனைக்கழற்சி வேர், கழற்சி விதை, கடற்சில் பருப்பு வகை பலம் அரை, இடித்த வித்துப் பிழிந்த நீரில் திரிகடுகு, இருசீர், உள்ளி, ஓமம், சதகுப்பை அரத்தை செயங்கொட்டை காயம் இந்துப்பு வாளம் வகை கள.2 அரைத்து கரைத்து காயம் காச்சி 3 நேரம் குடிக்கவும். உப்பு புளி விலக்குக.

## வேப்பிலைக் காயம்

- வேப்பிலை முத்தல் துளிர் நீக்கி நல்லதாய் 8 படி 16 படி நீரில் 8:1 ஆக்கி மாவிலங்கை, வட்டுக்கத்தரி, தூதுவளை, நன்னாரி, காற்றோட்டி பெருமருந்து இன்பூறல் நொச்சி இவை வேர் வகை கள. ஒன்றரை திரிகடுகு இருசீர் ஏலம் இலவங்கம், ஓமம், பொரிகாரம், சீனக்காரம் மஞ்சள் உலுவா மல்லி வெழுத்தல் காயம் வகை கள க. அரைத்து கரைத்து பத்தியமாய் 12 நாள் காலை, மாலை தின்னவும். துவாலையுடைக்கும். கெற்பவாயு தீரும்.

- வெள்ளை உள்ளி, பொரிகாரம், வசம்பு, துத்தம், மிகுமதுரம், கொத்தமல்லி, கடுக்காய், நற்சீர், தள்ளரிய திப்பிலி ஆமலகக் கெந்திதக்க கருஞ்சீரகமும் களஞ்சொவ்வொன்று கள்ளவின் வேப்பிலை துவைத்துப் பிளிந்த சாறும் காட்டுப்பிராய்மரப்பட்டையை தனிற்சாறும் உள்ளபடி காக்கொத்து வகைக்கு கூட்டி உற்ற சாறடையின் வேரரைத்து கேண்மிக அரைத்துக் கலக்கி காயங்காச்சி நாற்கழஞ்சு கொள்ள கெற்பவாயுக் கட்டுடைக்கும். மிகுந்துதானால் ஆவரங்காய் தின்னத்தீரும்.

## உதரரோத காயம்

- பிரமியின் சாற்றினோடு பேசுபொற் கொன்றைச்சாறு
  உரமிகுதை வேளைச்சா றொடுசமனாக விட்டு
  மருவுவேர் காயம் உள்ளி மதியுப்பும் திற்கரைத்து
  விரவியே வரண்டெண்ணெய் விட்டுறக் காச்சி உண்ணே
  குன்மம் சூலை குத்து கெற்பரோகம் நாபிவலி அண்டவாயுசூலை.

## பெற்றவள் வீக்கக் காயம்

- இருசீர் திற்பலி, ஓமம், சுக்கு, வசம்பு, மிளகு, ஏலம், மல்லி, உள்ளி, இந்துப்பு, இலவங்கம் உலுவா பனை வெல்லம் வகை கள.க வெள்ளை பாகல் இலை, வேப்பிலை, சிறுகாஞ்சோன்றி இவை சாறு விட்டுக் காயம் காச்சிக் கொடுக்கவும்.

- சாறுகளில் இருசீர் சாதிக்காய், கராம்பு, வசுவாசி, உள்ளி, மிளகு, ஓமம், சதகுப்பை கோட்டம் மதுரம் கடுகுரோணி ஈரரத்தை கற்கடக சிங்கி திறிபலை இந்துப்பு வகை கள.1 காச்சிக் கொடுக்கவும்.

## வேப்பிலைக் காயம்

- வேப்பிலை 3 பங்கு, பாகலிலை, திராயிலை, குறிஞ்சா இலை, இவை ஒரு பங்கு துவைத்து சாறு எடுத்து கடுகு, மிளகு, சுக்கு, உள்ளி, கடுக்காய் சமன் அரைத்து கரைத்து காயம் காச்சி சிற்றாமணக்கெண்ணெயில் உள்ளி நறுக்கித் தாளிதம் செய்து கிண்டிகாலையிற் கொடுக்கவும்.

### முகவாதம் தனுவாதம் தீர காயம்

- வேப்பம் பட்டை இடித்து அவித்த கசாயம் வேப்பிலைச்சாறு, இஞ்சிச்ச ாறு, உள்ளிச்சாறு ஒரளவாய் கூட்டி பாதியாக வற்ற வைத்து ஏலம் சாதிக்காய் கராம்பு தூள் தூவிக் காயம் காச்சி தின்ன முகவாததம் தனுவாதம் தீரும்.

### கருங்கிரந்திக் காயம்

- இருசீர்வான்மிள இந்துப்பு இசையும் குப்பை பெருங்காயம்
வருமஞ்சள் கோட்டம் வாளம் வல்ல அரத்தை திறிபலையும்
தருமோர் மாஞ்சில் உள்ளி இவை சரி சேர் இலைகேள் வேப்பிலை
வருமேகழற்சி குறிஞ்சாவும் வலிசேர் நொச்சி வெள்ப்பாவலிலை
எடுமேனிவற்றின் சாறுகளை எடடா வேர்வகை காற்றோட்டி
அடடா ஆடாதோடை உவாய் அரிய காண்டை வேர் சரியே
வ...ம்.... 2 பங்காய் காச்சி 7 நாள் 14 நேரம் தின்னவும்.
இனிப்பு, புளிப்பு, கைப்பு வகை இன்றே புகையிலை விடுபகலில்
பனிபோற்கரிய கிரந்தியறும் பாலன் கருப்பை தரிப்பானே.

### சிவாத காசக் காயம்

- இருசீர் ஓமம் திறிகடுகு கராம்பு உலுவா சதகுப்பை கறுவா உள்ளி காயம் தூதுவளை இயங்கம் வேர் ஈசுரமூலிவேர் வகை பலம் கால் இடித்து முருங்கைப் பட்டை சாற்றாலரைத்து காயம் காச்சிப் பாக்களவு கொள்ள சிவாத காசம் கழிச்சலும் தீரும்.

# காடி

- கரிசாலை பிரமியுடனியங்குவீழி காட்டுமிவை இலை ஈஞ்சீன் குருகு போந்தை வருகுருகு தேசியினிற்கனியும் சாறு வாங்கியே படி ஒன்று வகைக்கு கூட்டி உரிதான பனங்கள்ளுப்படி இரண்டும் ஒன்றாக்கிக் கிட் டத்தூள் பலமிரண்டு சரியாக அரப்பொடியும் பலமிரண்டு தகு காந்தம் பலமொன்று பொடியதாக்கி ஆக்கியே புதுக்கலயத் திட்டசாற்றில் அளாவியே சிறுகொதியிட்டேழு நாட்கள் வாக்கியே குடித்துவர நாளு நாளும் வகுத்தபடி கொதியிட்டுக்கொள்ளலாகும். தாக்கியேவரு பாண்டு சோகை எய்ப்பு தரு மிளைப்பு காமாலை பித்தபாண்டு போக்கவே தீருமென உரைத்தார் வேதம் புகன்ற முனிவர் உப்பு புளியகற்றே.

### வீக்கக் காடி

- கருநொச்சிச் சாறு 2 படி தேசிப்புளி 5 படி காக்கணங்கொவை 3 படி இஞ்சி 2 படி கராம்பு, சாதிக்காய், வசுவாசி, கச்சோலம் மஞ்சிட்டி ஏலம் அமுக்கிறாய் அதிவிடயம் கறுவா நிலப்பனைக்கிழங்கு அப்புளோகாரம் வெடியுப்பு வகை இறா 1... துரிசு இறா 1/4 கள்ளு 100 போத்தல் கோசலம் 10 படி ஊறவிட்டு காச்சி வடிக்கவும். வீக்கம் மாறும்.

### ஆறுமீல காடி

- பனங்கள்ளு 3 படி தேசிப்புளி குன்று மணிச்சாறு கையாந்தகரைச்சாறு அவுரிச்சாறு வகை படி 1/4 காந்தம் அரபொடி கிட்டம் பளங்காசு வகை 1/4 பலம் இருசீர் 1/4 பலம் ஒன்றாப் போட்டு தண்ணீர்க்கரையில் தாட்டு வைத்து 6 மாதத்தில் எடுத்து காலை மாலை 1 கரண்டி அருந்த காமாலை சோகை பாண்டு வீக்கம் மாறும். இது கிருமிக்கும் பாண்டுக்கும் காடி என்று சிறுயேதத்துடன் (40 நாள்) கிருமி தோஷம்.
- எருமைமோர் தேசிப்புளி கரிப்பான்சாறு ஆன்பனைக்கள்ளு வகை 4 படி கிட்டம் அரபொடி வகை பலம் 4 காந்தம் சுக்கு களா. 1 வெண்காரம் நேர்வாளம் வகை பலம் 1/4 கடுக்காய் 30 ஊறவைத்து குடிக்கவும்.

- பனங்கள்ளு, கையாந்தகரைச்சாறு, பசுமோர், வெள்ளையரிசிக் கஞ்சி, கோசலம் வகை படி அரை கிட்டம் அரபெடி வகை 1 சிறங்கை காயம் கருஞ்சீர் ஓமம் வகை கள.2 இவைகளிடித்துப் போட்டு வெயிலில் 7 நாள் வைத்து எடுத்து காலை மாலை பத்தியமாய் குடிக்கவும். மோர் பத்தியக் கருவாடு கூட்டவும். வெந்நீர் பரிமாறவும். நோய்க்கேற்ற எண்ணெய் தலைக்கு வைக்கவும். காமாலை பாண்டு சோகை மாறும்.

## அயக்காடி

- பனங்கள்ளு தேசிப்புளி வகை 1 படி வெங்காயச்சாறு 1/2 படி அயப்பொடி 8 கள. புதுப்பானையில் விட்டு வாய்மூடி சிலைமண் செய்து 40 நாட்களுக்கு பூமியில் தாட்டு வைக்கவும். பின் எடுத்து காலை மாலை 1 அவுன்ஸ் குடிக்க பாண்டு சோகை காமாலை மகோதரம் நாட்பட்ட சுரம் தீரும்.

## அன்னக்காடி

- இது தயிலங் கட்டும் கூட்டுவது. சில ரோகங்கட்கும் உபயோகிக்கலாம்.

# பூச்சுக்கள்

## வாதப் பூச்சு

- இந்நோய்க்கு மருந்து கேண்மோ ..... இஞ்சி தில்லை
  கார்த்திடு கொன்றை வேலிப் பருத்தியே கழற்சிவேளை
  கூர்த்தமா விலங்கை கஞ்சாங் கோரை காவிளை நீர்முள்ளி
  பார்த்திடுமா மணக்குப் பாவட்டை இவற்றினோடே
  எட்டியிலுற்ற நல்ல இலை வாத மடக்கியெல்லாம்
  தட்டின்றி அவித்த நீரில் குளித்து இந்தத் தண்ணீரோடு
  மட்டதாய்ச் சதுரக் கள்ளி வாட்டியே பிழிந்த நீரும்
  விட்டெட்டிப் பட்டை வேம்பின் பட்டை சாறணையின் வேரே
  கொடிவேலி வேரினோடு கூறிடும் இயங்கம் வேரும்
  நடைமுறையளவாய்க் கொண்டு நண்ணிடுவசம் பேயல்லாற்
  கடுகுள்ளி மிளகு சுக்குக் காயமுமளவாய்க் கொண்டு
  கடின மாயரைத்து நன்றாய்க் கலக்கியே கொதிப்பித்துப்பின்
  வாதப்பிடிப்பு இடமெல்லாம் பூச மாறும்..... செப்பலாமே.

- உவாய் எருக்கு கழற்சி மாவிலங்கை சாறணை குப்பைமேனி கருநொச்சி கொன்றை ஈசுரமூலி கொடிவேலி இவை வேர்ப்பட்டை சுக்கு திரிகடுகு வசம்பு வெழத்தற்பிசின் அரத்தை உள்ளி கருஞ்சீரகம் இவை சமனிடை உத்தமா காணிச் சாற்றாலரைத்துக் கொதிக்க வைத்துப் பூச பக்கவாதம் திமிர் நடுக்கு வாதம் முகவாதம் சகல வாதம் உட்குத்து பிற வீச்சு தீரும்.

- கள்ளிக் கொழுந்தை வாட்டிப் பிழிந்த சாற்றில் பூநீறு சீரகம் வகை ஒரு சிறங்கை போட்டு மறுநாளாந்தத் தண்ணீராற் கடுகையரைத்து கடிக்கிற இடத்திற் பூச வாதக்கடி வாதக்கடுப்பு தீரும்.

## சூலைக்கட்டு வீக்கம் கடுப்பு பிடிப்புக்கு

- கரியபவளம் குங்குலியம் சாம்பிறாணி வெந்தயம் சமனெடை நொச்சி அல்லது சாறணைச் சாற்றில் அரைத்து கொதிப்பித்துப் பூசவும்.

- புற்றுமண் சவுட்டுமண் வளையலுப்பு கஸ்தூரி மஞ்சள் கருஞ்சீரகம் பூண்டு வசம்பு சமனெடை கள்ளி அல்லது வாதமடக்கிச் சாற்றில் அரைத்து கொதிப்பித்து பூசவும்.

- இரசம் வாளம் கந்தகம் அரிதாரம் சாதிலிங்கம் கருஞ்சீரகம் ஏலம் சமனெடை வெற்றிலைச் சாற்றில் அரைத்துப் பூசவும்.

- பறங்கிக் கிழங்கு காயம் சுக்கு கடுகு மஞ்சள் சாளியா வெழத்தற்பிசின் சாராயத்தில் அரைத்து உலர உலரப் பூச வாத வீக்கம் மாறும். குருதைலத்தை வீக்கத்தின் மேற்பூசி அதன்மேல் இந்தப் பூச்சு பூசுவது மிக நல்லது.

- கடற்றில்லையை கடற்தண்ணீரதைப் பூச வாதவீக்கம் படியும்.

- கருக்குக் கற்றாழை வாட்டிப் பிழிந்து புற்றாம் பழம் (புற்றுவாட்டிமண்) கரியபவளம் புளியம் பொருக்குச் சுட்ட சாம்பல் சரிபங்கெடுத்து முற்கூறிய சாற்றால் அரைத்து கொதிப்பித்து பூசவும் வாதவீக்கம் உளைவு குத்து மாறும்.

- இரசசிந்தாமணி மாத்திரையை ஆமணக்ணெய்யில் பூச வீக்கம் மாறும்.

- பூமத்தை நொச்சி இலைச்சாறு சமனாயெடுத்து அமுக்கிறாயும் சீனப்பாவும் அரைத்துக் கரைத்து சொற்ப சாராயம் விட்டுக் காச்சி எண்ணெய் பதம் இறக்கிப் பூசவும்.

- வாதமடக்கி, நொச்சி, உத்தமாகாணி, எருக்கலம்பூ, இவை சாறு சமனிடை அமுக்கிறாய், பறங்கிக்கிழங்கு, கடுகு, உள்ளி, காயம், கரியபவளம், வளையலுப்பு வகை கள.2 இவை சமன் கொண்டரைத்து கலந்து கொதிப்பித்துப் பூச வாதக்குத்து, உளைவு, முடக்கம், வீக்கம் மாறும்.

- இலந்தை இலையைக் காடியிற் கரைத்து மத்தாற் கடைந்து நுரையைப் பூச வாத எரிவு மாறும்.

- வேப்பம்பட்டை, சோமனாதிப் பெருங்காயம், பிரண்டையை வாட்டிப் பிழிந்து அரைத்துப் பூச உளைவு வீக்கம் மாறும்.

- வெங்காரம், பெருங்காயம், தேவதாரம், சதகுப்பை, இந்துப்பு, வசம்பு, கடுக்காய், எருக்கம் பாலால் அரைத்து வலியுள்ள இடங்களில் பூச குணவவதானகவாதம் அதாவது கரு அழியாலேற்படும் வாதம் மாறும்.

- ஓமம், வாய்விளக்கம், மிளகு, காயம், இரத்தப்போளம், சுக்கு வகை தோலா 1/4, கரு ஊமத்தைச் சாற்றில் அரைத்து குளம்புப் பதத்தில் பூசி நெருப்பனலில் காட்ட 2, 3 பூச்சில் எத்தகைய வாதநோயும் குணமாகும்.

- மைலாக்கடி ஆளி விரை சுக்கு, சம அளவெடுத்து ஊறவைத்துப் பழச் சாற்றில் அரைத்து குழம்புப் பதத்தில் கொதிப்பித்துப் பூசிவர 3 நாளில் வாத வீக்கம் வாங்கும்.

- பளிங்குச்சாம்பிராணி, பச்சைகற்பூரம், பெருங்காயம், மூசாம்பரம், கருவளையல், புளியங்கொட்டைத்தோல் சமனெடை எடுத்து நோய் அதிகமானால் எருக்கலம் பாலினாலும், வேதனையில்லாமல் வீக்கம் மட்டுமானால் கோழி முட்டை வெண்கருவாலும் அரைத்துப் பூசி 3 நாள் வரை சுத்தப்படுத்தாது விட்டுவிடுக. இப்படி 3 முறை செய்ய எவ்வித வீக்கமாயினும் வடியும். பூசி நெருப்பனல் காட்டலாம். (மூசாம்பரம் கரியபவளம்) அபின் குக்கிலும் சேர்க்கலாம்.

## நாக்கு வழங்காத வாதப்பூச்சு

- சுக்கு, மிளகு, திற்பலி, கடுகு, பெருங்காயம், ஓமம், இந்துப்பு, உள்ளி, வசம்பு, கருஞ்சீரகம், வெளுத்தற்பிசின், கடுகுரோகணி, சன்னிநாயன் பொடி செய்து நாரத்தம்பழச் சாற்றினாலும் அல்லது தேனில் குழைத்து நாக்கில் தடவ நாக்கு வழங்காத வாதம் மாறும்.

## செவிவாதப் பூச்சு

- ஊறாகிய நிம்ப முறும்பிசினும் உடைவோரும் வசம்புனுள்ளியபின்
கூறாகிய முக்கடுகுக்கிலுவும் குளவிந்தமு மாளரைபூசிடுமே
பசுநெய்யில் அல்லது பசுமணக்கு நெய்யில் அரைத்துப் பூசுக.

### அண்டவாதப் பூச்சு

- கோரோசனை கழற்சிப்பருப்பு, பளிங்குச்சாம்பிராணி, பெருங்காயம் இவை விராகனெடையாக சிற்றண்ட வெண்கருவால் அரைத்து பீஜத்து க்குத் தடவி நெருப்பனலில் காட்டுக. 2:3 பிரயோகத்தில் பீசத் தடிப்பு நோய் முதலிய குணமாகும்.

- வெள்ளீயம் இரசம் வகை பலம் 1, இவை இரண்டையும் சேர்த்துப் பின் எட்டிக்கொட்டை ஆளி விதை சிறு தேக்கு மூசாம்பரம் வகை தோலா 1 குன்றுமணிப் பருப்பு தோலா 2 சூறணித்துக் கூட்டிச் சிற்றண்ட வெண்கருவால் அரைத்து பூசி நெருப்பனல் காட்ட 3 முறையிடல் எத்தகைய கடின வாதமும் குணமுறும்.

### அண்டவாத கழல் வாதப்பூச்சு

- நிம்பங் கொழுந்து கழற்சிவிரை நிகள்வெள்ளுள்ளி கடுகுடனே
  துன்பந் துடைக்கும் பெருங்காயம் சுக்கு, மிளகு மிவை சமனாய்
  முன்பு சொல்ல இலைச்சாற்றில் பூச விரைவாதம் கழல்வாதம் களையும்.

- பொரித்த வெண்காரம் சோற்றுப்பு சமனெடை சதுரக்கள்ளி இடித்துப் பிழிந்த சாறு கொஞ்சம் கொஞ்சமாக விட்டு அரைத்துக் குழம்புப் பதத்தில் பூசி உலரவிட வீக்கம் வலி பிடிப்பு குணமாகும்.

- சதகுப்பை, முத்தாமணக்கம், முத்து, கடுகு, பூடு, எள்ளு, நீர்வற்றல் தேங்காய் வகை கள.2 பூச வாதம் மாறும். உத்தமாகாணிச்சாறுரைப்பு கொதிப்பிக்கலாம் சாராயம் கூட்டலாம்.

### தண்டுவாதப் பூச்சு

- பிரண்டைத்தண்டு, கொவ்வைத்தண்டு, சீந்தில் தண்டு சமனெடை சிதைத்து 1/4 படிச்சாறு பிழிந்து சுக்கு, மிளகு, ஈருள்ளி வகை கள.2 அரைத்துக் கலக்கி இந்தப்படி 3 நாள் உள்ளுக்குக் குடிக்கக் கொடுத்து காத்தோட்டி இலையை அரைத்துத் தண்டிற்பூ சி வர மாறும்.

## வாய்வுப் பூச்சு

- ஒளிசேர் வெள்ளைக் குந்திருக்கும் உள்ளிமிளகு, பெருங்காயம், தெளிவாம் வெழுத்தற்
  பிசின்கடுக்காய்சிறக்கும்சாளியாவசம்புகளிசேர்கைப்பு,வேர்க்கொம்பு, கடுகு
  மிளகு மஞ்சள் கொடும் புளியுங் கூட்டிச் சேர்ப்பதுடன் புகலுமருந்து
  மேலும் கேள் தேக்குவிடயம் செண்பகப்பூ, சிறுநெல்லரிசிக் கொதி நீரில்
  ஆக்கிக் கூட்டி அரைத்து அது கொதித்த போது வெண்சூட்டில்
  தாக்கும் குத்து மிடந் தன்னில் சழிக்க அழுந்திப் பூசிவரில்
  நீக்குமந்தக்குத் தெல்லாம் நில்லா தோடும் நிலைகுலைந்து.
- வெந்தயம், முருங்கைப்பட்டை, சுக்கு, காயம், கடுகு, வேலிப்பருத்திச் சாற்றில் அரைத்துப் பூசவும்.
- திற்பிலி, மிளகு, வேற்கொம்பு, சாளியா, கரியபவளம், குளவிந்தம், மரமஞ்சள், மஞ்சள் காயம், உள்ளி, வசம்பு, பச்சையரிசித் தெளிவில் அல்லது கழுநீரில் அல்லது வேலிப்பருத்திச் சாற்றில் அரைத்துக் கொதிப்பித்துப் பூசவும்.

## உட்குத்துப் பிறவீச்சுப் பூச்சு

- தானே கான்றை கன்முரிசு தருகாற் றோட்டி பனை நொச்சி
  தேனே மஞ்ஞையுடன் முருங்கை செப்புந்தோடை பெருங்காயம்
  கானேய் வசம்பு வெள்ளுள்ளி கடுகு சுக்குச் சமனரைத்து
  மானே பூச உட்குத்தும் பிற வீச்சதுவும் மாறிடுமே.
- எருமை நாக்கியமயிலடிக்குருத்து வேர் எழுந்த தூத்தமக் கொத்தான் முருங்கை வேர் கரிய
  நொச்சி காற்றோட்டி கழற்சிவேர் கான்றை வேருடன் பூமத்தின் வேருமாய் அரியகன் முரிசோடாடா தோடைவேர்
  அருந்து முத்தமாகாணி நாரத்தையும் பொரு தரைத்துக்
  கொதிப்பித்துப் பூசிடப் பொருதுமுட்குத்து போவது திண்ணமே.

- நண்ணிய எருக்கு நொச்சி குப்பைகான்றை மாவிலங்கை உவாய் கொடிக் கழற்சி
  சாறணை இவைசமூலம் வேர் வசம்பு திற்பலி சுக்கு பேரரத்தை வெளு த்தல் ஈருள்ளி
  மிளகு, கடுகு, உள்ளி, கருஞ்சீர் வகை கள.2 உத்தமாகாணிச்சாறு விட்டரைத்து
  கொதிப்பித்துப் பூச உட்குத்துப்பிற வீச்சு தமிர் சன்னிக்கனப்பு தீரும்.

## நோவுக்குப் பூச்சு

- குன்றுமணிச்சாறு 2க்கு குக்குடஅண்ட வெண்கரு பசுமணக்கு நெய் பச்சை மஞ்சள் அரைத்து இள வெயிலில் வைத்து உலர உலரப் பூசவும்.

## கபாலவலிப் பூச்சு

- சவற்காரம் குந்திருக்கும் தேவதாரம் அடைக்கோழி முட்டைக்கோது வெண்கருவால் அரைத்துப் பூசவும்.

- குன்றுமணிப்பருப்பை கண்டங்கத்தரிச்சாறு விட்டரைத்துப் பூச கபாலவலி தலையிடி மாறும்.

- அகில் சந்தனம், கஸ்தூரிமஞ்சள், அபின், சுக்கு, சாம்பிராணி சமனெடை தண்ணீர் விட்டரைத்துக் கொதிப்பித்துப் பூச கர்ப்பவதிகள் தலையிடியாலும்.

- அகில் சந்தனம் நீக்கி

- காயம் உழுந்து கூட்டி முலைப்பாலரைப்பு எந்தத் தலைவலியும் பாரமும் அனல் காட்டலாம்.

- மிளகு 1, சாம்பிராணி அரை, கடுகு, புழுங்கலரிசி, கஸ்தூரிமஞ்சள், மஞ்சள் வகை 1/4 முலைப்பாலரைத்துப் பூசி நெருப்பனல் காட்ட உடனே தீரும். நீரேற்றமும் மாறும்.

### தலைவலி, காதுவலிப் பூச்சு

- உழுந்து, கொள்ளு, சிவனார்வேம்பு, கற்பூரம், மதுரம், நெற்பொரி, சந்தனம், வசம்பு, கோட்டம், முத்தற்காசு, இலவங்கப்பட்டை சமனெடை பச்சரிசிக் கழுநீரில் அரைத்து கொதிக்க வைத்து பூசி அனல் காட்டலாம்.

### நாசிகாபீடசதை கரையப் பூச்சு

- கஸ்தூரி, சுகந்தம் (அல்லது சுகந்த மூக்குத்தூள்) சமனெடை பொடியாய் போட்டு வாழைப்பழத்தோல் வாழைச்சருகு சுரைக்குடுகு மூன்றும் தனித்தனி சுட்ட சாம்பல் சமனெடை கொஞ்சம் காய்ந்த சுண்ணாம்பும் கலந்து பச்சைத் தண்ணீரில் குழைத்து வளர்ந்த சதையில் பூசி வரக்கரையும்.

### கண்சிவப்பு மாறப்பூச்சு

- அபின், குங்குமப்பூ இரண்டும் குக்குடாண்ட மஞ்சட் கருவிற் குழைத்துக் கண்ணிற் தடவத்தீரும்.
- நல்ல மதத்தகுமரியின் தொடையை கீறி எடுத்த சதையை துணியுள் முடிந்து ஒற்றிப் பூச மாறும்.

### காது வீக்கம் செவியிற் பருவுக்குப் பூச்சு

- கொவ்வை பயிலி முசுட்டை பூமத்து நெற்பொரி எட்பொரி நீர்ப்பூலா, சித்திரப்பாலாவி சீந்தில் நெல்லிமுள்ளி, நீர்வள்ளிவராகி, திருநாமத்தாளி, சிவத்தபசளி, சிற்றாமணக்கு முத்து புளியங் கொட்டைத்தோல் பசுப்பால் கருங்கல்லு அரைத்து ஆவெண்ணெயிற் குழைத்து பூசி வரவும்.
- கற்றழைப்புறத்தோல், கானாங்கள்ளி இலை, வெற்றிலை, வேலிப்பருத்தி, விளாத்தி, அகத்தி, ஆமணக்கு நெய்யில் வறுத்தக் கசிய அரைத்துப் பூசவும்.

### காதுவளரப் பூச்சு

- நிலப்பனை அமுக்கிறா செங்கழுநீர் இவை கிழங்கு ஆனைத்திற்பலி சமனெடை எருமை வெண்ணெயில் அரைத்து காதிற் பூசி வர நன்றாய் காது வளரும்.

### மிடற்று நோவுக்குப் பூச்சு

- நத்தையோடு கொந்தாளங்காய் குள அடம்பன் கொட்டை மூன்றும் தேசிப்புளியில் அரைத்துக் கொதிப்பித்துப் பூசவும்.

### உண்ணுக்குக் கரைக்கப் பூச்சுகள்

- நேர் வாளம் பொன்னரி தாரம் துரிசு சூறணமாக்கி பூசவும்.
- ஆலம்முகை கொடிவேலி வேர்ப்பட்டை தொய்யில்வேர் நாயுருவிவேர், ஆமணக்கம் முத்தின் ஓடு சமனெடை பொடித்து ஆழ்த்திப் பூசவும்.
- தொண்டை அரித்தால் மதுரம், செங்கழநீர், கோட்டம், முந்திரி, கைப்பழம், இலுப்பைப்பூ, பால், நெய், முசுமுசுக்கைச் சாறு அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து காசிடை நக்கி வரவும்.
- வேப்பங்கொழுந்து ஒரு பிடி, உப்பு அரைப்பிடி, உள்ளிப்பருப்பு 6 அரைத்து 3 நாள் அந்தி சந்தி தின்ன மாறும். தொண்டை அரிப்பு தீரும்.
- எவாச்சாரம் கற்சுண்ணம் இரண்டும் பழச்சாற்றால் அரைத்து தடவவும்.
- உள்ளிச்சாறு கால் அவுன்சில் மூன்றரை குன்றி நவச் சாரத்தைப் பொடி செய்து போட்டுக் கரைத்து ஒரு குச்சியில் சிறிது பஞ்சைச் சுற்றி மருந்தில் நனைத்து காலை, மாலை சாப்பாட்டின் முன் 3 நாள் பூசி வர உண் ணாக்கு கரையும். நவச்சாரம் அல்லது எவச்சாரம் இரண்டும் இன்றேல் கறியுப்பும் கூட்டலாம்.

### வாய்ரோகப் பூச்சு (வெந்தால்)

- அரிதாரம், மஞ்சள், இந்துப்பு, அக்கரா, திரிபலை பொடி செய்து தேனில் அல்லது நெயில் குழைத்துப் பூசவும்.
- வேப்பிலையும், வேரும், குமிழ்வேரும், வெள்ளாட்டுக் கோமயத்தில் அரைத்துப் பூசவும்.
- விளாம்பிசின் சிவந்தக் குங்குலியம் வெள்ளை வெண்காயம் சமனெடுத்து பனிச்சங் காய்ச்சாற்றில் பாணியில் அரைத்துப் பூசவும் வாயவியல் வீக்கம் தீரும்.

- அமுக்கிறாய் கறுவா எருக்கலம்வேர், நிறுவிஷம், இடித்து அவித்து ஒரு நாள் ஊறவைத்துப் பிளிந்து பாலைப்பாணிப்பருவம் எடுத்துப் பூசவும் வாயினவியல் வீக்கம் குணப்படும்.

**கூவைக் கட்டுக்கு பூச்சு**

- செஞ்சந்தனம், சீதேவியார்வேர், முத்தாமணக்கு, அமுக்கிறாய் தேசிப்புளியில் அரைத்து பூசவும்.
- செஞ்சந்தனம் நத்தையோடு அமுக்கிறாய் அரைத்து பூசவும்.

**கட்கு பிளவைக்கு பூச்சு அரையாப்பு பவுத்திரம் கண்டமாலை**

- (பொதுவில் முலைப்பால் வெண்ணெய் தயிர் ஆமணக்குநெய் கூட்டலாம்)
- கொவ்வை, பசளி, பளம்பாசி, பூலாக்கிழங்கு, நீர்வள்ளிக்கிழங்கும், இலையும் அரைத்து பசுவெண்ணெயிற் குழைத்து வட்டிலில் வைத்து சங்கால் தேய்த்து வழித்துப் பூசிவர பிளவையில் வீக்கம் வற்றி ஆறும்.
- பூலாக்கிழங்கு, நெல்லிமுளி, ஆவரைப்பூ, அல்லி, திருநாமத்தாளி, வள்ளிக்கிழங்கு எல்லாம் கண்ட எடை பச்சை வெண்ணெய் கூட்டி அரைத்துப் பூச பிளவையில் வலி காந்தல் மாறும். (தயிரும் கூட்டலாம்)
- சிற்றாமணக்கெண்ணெய், முலைப்பால், பசுவெண்ணெய் ஓரளவு கலந்து சற்றே நீர்வள்ளிக்கிழங்கும் அரைத்துக் கூட்டி இலவம்பஞ்சூட்டிப் பூச பிளவை மாறும்.
- சிற்றாமணக்கம் வித்து, புளியம் விதைத் தோல் வறுத்து பசுவெண் ணெயில் அரைத்துப் பூச பிளவை மாறும்.
- வசம்பு, அமுக்கிறாய், நன்னாரிவேர் வகை பாக்களவு பசுப்பாலில் அரைத்து அப்ப பிளவை நீங்கும்.
- குமரிமடலிற் சோறுதள்ளிக் குறுக நறுக்கிப் பிழிந்தெடுத்து ஆமணக்கெண் ணெயில் வறுத்து அப்ப 3 நாளில் அமைக்கும்.

- உத்தமதானி, ஊமத்து, மாதுளை இலை, பசளி இலை இவை சமனெடை ஆமணக்கெண்ணெயில் அரைத்து உவநாயம் செய்ய குத்து, சூடு, வலி, காந்தல் குறைந்து அமைக்கும்.

- தலைமயிர் புளியம் பொருக்கு அரவின் தோல் மாட்டுப்பல் ஆமைக்கூடு, கருங்கல்லு ஆமணக்கு இலையும் வித்தும் எல்லாம் சுட்டு ஆமணக்கெண்ணெயில் அரைத்துப் பூச இளகி உடையும்.

- நெல்லிமுளி, நிலப்பனைக்கிழங்கு, நெற்பொரி, பொன்னாவரைவேர் அரைத்து பசுவெண்ணெய் கூட்டி வீக்கத்தின் மேற்பூச பிளவையில் காச்சல் குத்து சிப்பாய்தல் முலைப்பாலும் கூட்டினால் வீக்கம் அனல்வலி தீரும்.

- ஆவரை விதையை தீய்க்கக்கருக்கி தூளாக்கி ஆத்திவேர் கூட்டி அரைத்து நெய்பூசி தூள் தூவில் பிளவைப்புண் சிவந்து உலர்ந்து சுகமாகும்.

- துரிசு பாஷாணம் சமனெடை வெண்ணெயால் அரைத்துக் களிம்பு செய்து வீக்கத்தில் பூச பிளவை கட்டு உடையும். பின் துணியிலூட்டிப் புண்ணிற் போடவும். இது காரமாகும். 3 நாள் தயிரும் சோறும் வைத்துக் கட்ட காரத்தின் வெப்பு ஆற்றும். பின் வேம்பாடல் சேர்ந்த எண்ணெய் பூசி ஆவரங்கொழுந்தை வதக்கி வைத்துக் கட்டி வரமாறும்.

- கடுக்காய், சுக்கு, கரியபவளம், நாவிக்கிழங்கு, அபின், கொடிவேலி, நேர்வாளம், எருக்கலம்வேர் இவைகளை எருக்கலம் பாலிலாவது அல்லது பழப்புச்சாற்றிலாவது அரைத்துப் பூசி வரத்தீரும்.

## இறை பிளவைப் பூச்சு

- கிலுகிலுப்பைப்பருப்பைக் குன்றுமணிச் சாற்றில் அரைத்துப் பூச இறை பிளவை தீரும்.

## முலைக்கட்டுப் பூச்சு

- கொன்றைப்பட்டைத் துளிர், அழிஞ்சல்பட்டைத்துளிர், நண்டுக்கிடங்கு மண் இவற்றை அரைத்துப் பூசவும்.

- கீழ்க்காய் நெல்லிசமூலம், உள்ளி, வசம்பு, நல்லெண்ணெய் விட்டு அரைத்துப் பூசவும்.

- நவச்சாரம் 1/8 அவுன்ஸ், பன்னீர் 1 பைந்து இவை இரண்டும் சேர்த்து துணியை நனைத்து கட்டியின் மேல் போட்டு வரக் குணமாகும்.

**மூலப்பவுந்திரமமைப் பூச்சு**

- குன்றி, மருதோன்றி, எட்டி, உள்ளி, வசம்பு, காயம், பூதவிருக்கம் அவுரி கார்த்திகைக் கிழங்கு, சடைக்கஞ்சா இவை வெந்நீரால் அரைத்து பூச பவுந்திரக்கட்டி அமைக்கும். எட்டி மருதோன்றி பூதவிருக்கம் நீக்கி பெருமருந்து கூட்டிப் போட உடையும்.
- எருக்கலம்பாலில் மஞ்சளை உரைத்துக் கட்டியின் மத்தியில் பொட்டு மாதிரிக் காலை மாலை வைத்து வந்தால் கட்டி அமைக்கும்.
- வெங்காயத்தை சுட்டு பனங்கட்டி அல்லது தேன் கூட்டியரைத்து கனமாய் தடவி வந்தால் பழுத்து உடைக்கும்.
- சாம்பிராணி ஒன்றேகால், கற்பூரம் 1, படிகாரம் 6, பச்சரிசிமாக் களியில் அல்லது றொட்டி உள்சதையில் பிசைந்து வைத்துக் கட்டி வந்தால் பழுத்து உடையும்.

**காரம்**

- வெண்பாஷாணம், துரிசு, பசுவெண்ணெய்
- வெண்பாஷாணம், துரிசு, சீனக்காரம்....
- வெண்பாஷாணம், துரிசு, துத்தம், வெண்காரம், சீனக்காரம், வாளம் நெய்யில் அல்லது பசுவெண்ணெய் (இது கடுங்காரம்)

**துடைவாழை வீக்கப் பூச்சு**

- சிகாயம், துரிசு, துத்தம், குந்திருக்கம், மனோசிலை, வெழுத்தல்ப்பிசின், காரீயம், சூதம், அபின் லிங்கம், அரிதாரம், உள்ளி, சாளியா, ஆமணக்கு விதை, சுத்தமான மணல் சமனெடை எருக்கலம்பால் வாரணாண்ட வெண்கருவில் பூசவும் அமைக்கும்.
- கடுகு கடுகுடனே உள்ளி, சுக்கு, சாளியாவும் காரபினும்வெண்பிசினும் மிளகுமின்னும் அடைவு பெறும் வசம்பு பெருங்காயமல்லால் அவர்ந்த

நெல்லின் பொரியுமாமணக்கின் முத்தும் திடமுடைய வாரணத்தின் முட்டையுற்ற சிறந்த வெள்ளைக் கருவிட்டே அரைத்துப் பூசத் துடைவாழை முதலெழுந்த வீக்கமெல்லாம் சேர்ந்து வடிந்திடுமெனவே செப்பினாரே கட்டு அமைக்கும்.

- எட்டி விதை குன்றிப்பருப்பு கழற்சி விதை எருக்கலம்வேர் பெருமருந்துவேர் வெந்தோன்றிக்கிழங்கு கஞ்சா இலை தூளாக்கி கோழியவரைச்சாற்றில் அரைத்துப் பூச வற்றி அமைக்கும். வற்றிடா தெழும்புமானால் ஆட்டுப்புழுக்கையை வறுத்து தூளாக்கிய கரியை ஆமணக்கெண்ணெயிற் குழைத்துப் போட பழுத்து உடைக்கும். வெண்பாஷாணம், துரிசு, சீனக்காரம் பொடித்து வெண்ணெயிற் குழைத்துப் போட (காரம்) சியல் போய் ஆணி போக்கும். தயிரும் சோறும் பின் கட்டி காரவெப்பு ஆற்றவும்.

**கைக்குழித்தாமரை வீக்கப் பூச்சு**

- மாவிலங்கை, நுணாவிலை, துவைத்து சுண்ணாம்புங் கலந்து பனங் கட்டியும் சேர்த்து அரைத்துப் பூசி மிளகும் நெய்யும் பாவலிலைச்சாறும் குடித்து (காலையில்) உள்ளி பசுப்பால் கதிக்கச் சேர்த்த கஞ்சி மற்ற 2 நேரமும் குடித்து வர மாறும்.
- காயம், உள்ளி, மஞ்சள், அபின், வெழுத்தல் மிளகு, பெருங்கடுகு, சுண்ணாம்பு, வெள்ளாட்டுப்புழுக்கை, மஞ்சுனாத்தி பூமத்தை, அமுக்கிறாய்வேர், வெள்ளாட்டுச்சலம் விட்டு அரைத்துப் பூசில் கைக்குழித்தாமரை பிளவை வீக்கம் மாறும்.
- விளாம்பிசின், செங்குங்குலியம், உள்ளி சமனெடை, பனிச்சங்காய் சாற்றில் பாணியில் அரைத்துப் பூசவும் வீக்கம் படியும்.
- அமுக்கிறாய், கறுவா, எருக்கலம்வேர், நிறுவிஷம் வகை பலம் எடுத்து இடித்து ஒரு நாள் ஊறவைத்து பாலைப் பாணிப் பருவம் (காச்சி) பூச பிளவை வீக்கம் மாறும்.

## திரட்சி வீக்கப் பூச்சு

- பளிங்குச்சாம்பிராணி, கற்பூரம் (பச்சை), காயம், மூசாம்பரம் கருவளை யல், புளியங்கொட்டைத் தோல் சமனெடை நோயதிகமானால் எருக் கலம்பாலால் (வீக்கம் மட்டுமானால்) கோழி முட்டை வெண்கருவால் அரைத்துப் பூசி சுத்தப்படுத்தாமல் 3 நாள் 3 முறை செய் பிளவை வீக்கம் முதல் எந்த வீக்கமும் படியும். (மூசாம்பரம், கரியபவளம்) (அபின், குக்கில் இவையும் கூட்டலாம் தனி வீக்கமானால்)

- பழம்பாசியும், வெங்காயமும் தேசிப்புளியில் அரைத்து பூச கட்டுக் கொதி ஆறும்.

- கொடிவேலிவேர், பட்டாணிக்கடலை வறுத்து பச்சைத் தண்ணீரில் அரைத்துச் சுண்ணாம்பு பூசக் கட்டு உடைக்கும்.

- வெள்ளைச்சங்கு சுட்ட சாம்பல், கற்கண்டு, குக்குடாண்டவெண்கரு, பூமத்தம் வேர், உமிச்சாம்பலில் புதைத்துப் பிழிந்து அரைத்து சீலையில் தடவிப் போடவும் வற்றும்.

- கருஞ்சீரகம், துரிசு, மிளகு, ஈரவெண்காயம், புனரைக்காய், வெற்றிலைக் காம்பு, சீந்தில் வேர் இவை அரைத்துக் கொதிப்பித்துப் பூசச் சகல கட்டும் மாறும்.

## அரையாப்பு கட்டு வற்ற

- வசம்பு, வாளம், வெண்காரம், குன்றிப்பருப்பு, கொடிவேலிவேர் வகை கள.2 நெக்க அரைத்து நெயிற் கலக்கி கொதிக்க வைத்து கடுகு முறிகிற பதம் குப்பைமேனிச்சாறு கொஞ்சம் வாய் பேசாமல் விட்டு மெழுகுபதம் காச்சிப் பூசக் கட்டு வற்றும்.

## மொழி வீக்கம்

- பிரண்டையை இடித்து எருக்கஞ்சாறு விட்டு வதக்கி வீக்கத்தில் பூசி வைத்து கட்டி விட மொழி வீக்கம் வற்றும்.

### கட்டு கன்னக்கட்டு கன்னச்சூலை (வற்ற) ப்பூச்சு

- தேற்றாவிதை, புற்றாம்பழம், வடமஞ்சள், ஊர்மஞ்சள், கோழிமுட்டை (வெண்கரு) சமனெடை தேற்றாவிதையை அவித்து எடுத்து புற்றாம் பழம், மஞ்சள்மா இரண்டும் இவற்றை முட்டை வெண்கருவில் அரைத்துத் திரட்டி எடுக்கவும். பின் சுத்த நீரில் பசுச்சாணத்தைக் கரைத்து வடிகட்டி அந்த நீரில் திரட்டி எடுத்த மருந்தை கரைத்துக் கொதிப்பித்துப் பூசவும். கன்னவீக்கம், காதடிவீக்கம், கன்னச்சூலை கட்டுகள் எல்லாம் மாறும்.

### முலைப்புற்று முலைவாதை முலைவீக்கப் பூச்சு (பால் சுரக்க)

- கொண்டிடமுலையிற் புற்று குணம் வரும் சுரக்கும்பாலும்
  மிண்டுமாவரை நன்னாரி வேர் பாலிலரைத்துப் பூசு
  கண்டகுந்தம் வேர் (குருந்து) சுக்குக் காய்ந்த நீர்வார்த்தரைத்து
  மண்டு வீக்கத்திற்பூச வளர்முலை வாதை போமே.

### முலைக்காம்பு ரணம் ஆற மருந்து

- வெங்காரம் 1/4, சாராயம் 1/2, சலம் 3 3/4 அவு கலந்து துணியை நனைத்து ரணத்தின் மேல் போட 2, 3 நாளில் ஆறும்.

### புண் புற்றுக்களில் வேதினை தீரப் பூச்சு

- எருக்கு, பெருமருந்து, மலைதாங்கி, அமுக்கிறாய் இவை வேர் வகை பாக்களவு இரசம் இரண்டு மஞ்சாடி எடை வேலிப்பருத்திச் சாறு விட்டரைத்து கொதிப்பித்துப் புறத்திற் பூச ஒரு நாளைக்கு 3 முறை 15 நாள் பூச புற்றுரோகத்தில் புண்குத்து எரிப்பு விறாண்டுதல் கிரந்திக்கடி மாறும்.

### அண்டவாய்வில் மலசலமடைத்தால் பூச்சு

- குறட்டைக்கிழங்கும், பச்சைமஞ்சளும், சுடுசாம்பலில் புழுங்க விட்டு அரைத்து ஏரண்டெண்ணெயிற் குழைத்து அடிவயிறு தொப்புழில் பூச மலம் சலம் இறங்கும்.

## பாலுண்ணி கரையப் பூச்சு

- சதுரக்கள்ளிப்பாலை தொட்டு பாலுண்ணி என்னும் மறுவின் மேல் வைத்து வரக் கரையும்.

## முகப்பருவுக்குப் பூச்சு

- நல்ல சுத்தமான சவ்வாது (ஜவ்வாது) முகப்பருவின் மேல் தடவி வர 2, 3 வேளைகளில் கரைந்துவிடும்.

## சிரங்குக்குப் பூச்சு

- சுட்ட இலுப்பை அரப்புத் தேய்த்துக் கழுவியபின் நீர்வெட்டி முத்தும் சந்தனமும் சமனெடை 1 நாளுக்கு இருமுறை பூசவும்.
- கெந்தகம், குங்குலியம், துரிசு, ஆமணக்கெண்ணெயில் மை போல் அரைத்துப் பூசவும்.
- கருஞ்சீர், கல்லுப்பு, மரமஞ்சள், மிளகு ரூபா எடை 1, தேங்காய்ப்பால் 48 அவு இல் காச்சிய எண்ணெய் பூசி இலுப்பையரப்பால் கழுவவும்.
- பச்சைக்கற்பூரம், மிருதார்சிங்கி, இரசகற்பூரம், குங்குலியம், பூங்காவி கற்பூரம், பசுவெண்ணெய் முறையே 1/8, 1, 1, 1, 1, 1 1/2, 15 ரூபா எடை அரைத்து 7 தரம் குளிர்ந்த நீர் விட்டுக் கழுவி எடுத்துப் பூசி அரப்பால் கழற்றவும். 1 நாளைக்கு 2 முறை
- கார்கோலரிசி, கெந்தகம், நீரடிமுத்து, கசகசா, கொப்பரைத் தேங்காய் ஒன்று சேர்த்து புளித்த மோரில் அரைத்துக் கலக்கி உடலெல்லாம் பூசி இலுப்பையரப்பால் கழற்றவும்.
- கெந்தகம், இரசம், நீரடிமுத்து கள 1/2, ஊமத்தங்காய் கீறி உள்வைத்து 6 வறட்டியிற் பிடமிட்டெடுத்து காயுடன் எருமை வெண்ணெய் வைத்து அரைத்து காலையிற் பழைய துண்டு உடலெங்கும் பூசி சாயந்தரம் அரப்பால் கழற்றி விட ஒரு நாளையில் தீரும்.
- பீச்சு விளாத்திச் சாறு, மதுமத்தமிலைச்சாறு, ஆமணக்கெண்ணெய் ஒட் டறை சுண்ணாம்பு கூட்டி அரைத்துப் பூச சிரங்கு கரப்பன் தீரும்.

## படை (படர்தாமரை) கட்குப் பூச்சு

- பொன்னாவரம் வேர்ப்பட்டைப்பலம் 2, கெந்தகம், மிருதார்சிங்கி, மனோசிலை, இரசகற்பூரம் கற்பூரம் வராகனெடை கால், கல்வத்தில் பழச் சாறு விட்டு 4 சாமமரைத்து சிறுவில்லைகளாக்கி நிழலில் உலர்த்துக. வேண்டும் போது ஒரு வில்லையை தண்ணீரில் குழைத்துப் பூச இரண்டொரு வேளையில் எவ்விதப் படைகளும் குணமாகும்.

- மனோசிலை 12, மஞ்சள் 8, சுண்ணாம்பு 4 தண்ணீரில் அரைத்துப் பூச படர்தாமரை மாறும்.

- கந்தகம் பலம் அரை, மத்தாப்பூச்சிட்டம்பலம் அரை, வெங்காரம் அரை பலம், சீனக்கற்கண்டு அரை பலம், துரிசு 1/16 பலம், பழச்சாற்றால் நெகிழ அரைத்து வைத்துக் கொண்டு ஊறவெடுக்கும் படைகளுக்கு தினவு அடங்கு மட்டும் சொறிந்து சீகைக்காய் (சீயக்காய்)அல்லது சோப் தேய்த்து அலம்பி இம்மருந்தை இலேசாகப் பூச 2, 3 வேளைகளில் இருப்பிடம் தெரியாமல் மறையும்.

- நிலபாவலிலை வேர், பச்சை மஞ்சள் கிருமி பகை பொன்னரிதாரம் தேசிப்புளியில் அரைத்துப் பூசவும்.

## உரோமக் கிருமி வெட்டுக்குப் பூச்சு

- கேசம் உதிர்ந்த தழம்பதனிற் கேளீர் சங்குமுட்கொண்டு
  கூசச்சிலுப்பிக் குருதிவரக் கூறுங் கெவுரி மஞ்சாடி
  பேசுங்கையான் சாறரைத்துப் பிதிரத்தேய்த்துப் பின்னுங்கேள்
  தூசை சுட்டகரி கையான் சாற்றிற்கூடன் கலந்திடுமே.

- ஆலம் பாலிலரிதாரம் அரைக்காலளவு பொடியிட்டு
  மேலும் வெய்யில் தனில் வைத்து விரைந்து பூசாய் நாள் 10
  சால உதிர்ந்த ரோமமுண்டாம் தக்க கிருமி சீ ஓடுவும்
  ஏலக் குழலாய் தீருமென இறையோன்ருளிச் செய்ததுவே.

- ஆனைத்தந்தத்தை சுட்டுப் பொடித்து தேனில் மத்தித்து 8 நாள் வரை பூசி வந்தால் புழுவெட்டு நீங்கி மயிர் முளைக்கும்.

### விஷத்துக்குப் பூச்சு

- புங்கு, மாவிலங்கை, இலை பட்டை, நொச்சி இலை, குப்பைமேனி, வேலிப்பருத்தி, பூமத்தை, தயிர்வளை, முருங்கை இலை, எருக்கலை இலை, தாழம்வேர், ஏலம், இருவேலி, முலைப்பால், பசுப்பால் விட்டரைத்துப் பூசவும்.

- அவுரி, வேலிப்பருத்தி இலை வெந்நீரில் அரைத்துப் பூசலாம்.

### குளவி குத்துக்குப் பூச்சு

- தேற்றா கொட்டையை முருங்கை இலைச்சாற்றில் அரைத்துப் பூசவும் அல்லது பழப்புளியும் சுண்ணாம்பும் குழைத்து அல்லது நாயுருவி இலை அரைத்துப் பூசவும்.

- பலவனிலையை சிறுநீர் அல்லது தேசிப்புளியில் அரைத்துப் பூசவும்.

### மூலம் உள்ளே போக ஆளி பூச்சு

- இரசித்தை உருக்கி உருக்கு முகத்தில் (குடுவையில்) குடக்காரமும் போட்டுருக்கி எடுத்து ஆளி செய்து போட்டிருந்து பூசுப்படக் கால் கழுவ மூலம் உள்ளே போகும்.

### மூலரோகப் பூச்சுகள்

- எருக்கலம்பால், சதுரக்கள்ளித்தண்டு, கடுகுரோகணி, சுரைத்தளிர், புங்கம்விதை இவற்றை ஆட்டு மூத்திரத்தில் அரைத்துப் பூச மூலமுளை நீக்கப்படும்.

- மஞ்சள், பீர்க்கு, கல்லுப்பு, சதுரக்கள்ளிப்பால் இவைகளைக் கோசலத்தில் அரைத்துப் பூச முளைகள் நீங்கும்.

- வாகை விதை, திற்பலி, எருக்கலம்பால், தேவதாரு, கல்லுப்பு, மஞ்சள், கரடிமலம், குன்றுமணி, மிளகு பசு மூத்திரத்தில் அரைத்துப் பூச முளைகள் நீங்கும்.

- தேவதாரு விதை, கல்லுப்பு இவைகளை காடியில் அரைத்து மூலமுளைகளின் மேற்பூசினால் அவை விழுந்து விடும்.
- வட்டத்துத்தி இலையையும், வெங்காயத்தையும் அரிந்து ஆமணக்கு நெயில் வதக்கி மூலமுளைகளின் மேல் வைத்துக் கட்ட வேதனை நீங்கும்.

## ஆண்குறி கெட்டிப்பட பூச்சு

- அபின், அக்கறா, மருதோன்றி விதை, சமன் தேனில் அரைத்து பற்றுப் போடுவது போல் தடவி வர 15 நாளில் ஆண்குறி பருத்து நீண்டு கெட்டிப்படும்.
- ஊசிகாந்தம், திற்பலி, அக்கறா, லிங்கம், வெண்காரம், மிளகு, கல்மதம், கணிதவேதி சமன் புன்னை வேர்க்க சாயத்தில் ஊறவைத்துப் பூசவும்.
- நாபி, புனுகு, சவர்க்காரம், படிகாரம், வெண்காரம், மதுரம், அகிற் கட்டை, திற்பலி, நன்னாரிவேர், காமப்பூ சமனெடை இடித்தரித்து செங்கன் பழரசத்தாலரைத்து டப்பியில் வைத்திருந்து லிங்கத்தின் மேல் தடவி வரவும். இப்படி 4, 5 நாள் தடவி வரவும். கழுவ வேண்டாம். வேண்டாத போது வெந்நீரால் அலம்பி விடவும்.
- எட்டிக்கொட்டை, அமுக்கிறாய் கிழங்கு, வசம்பு சமனெடை பசு வெண்ணெயால் மெழுகு போல் அரைத்து லிங்க நரம்பு மீது 1 வாரம் தேய்த்து வர கெட்டிப்படும்.

## இந்திரியபுஷ்டிக்கு

- ஒரு முட்டை வெண்கரு, தேன், இஞ்சி, நெய், உள்ளி, இவ்வைந்தும் சமனெடை கூட்டி மத்தித்து சன்னலங்கப்பட்டை (கறுவா) அரை வராகனிடை கூட்டி புசிக்கவும். இப்படி 7 நாள் சாப்பிடவும். இப்படி புசிக்கும் காலத்தில் ஒரு பலம் நல்லெண்ணெயில் கால் தோலா குங்குமப்பூ கூட்டியிழைத்து லிங்கத்துக்கு மேலே தடவி (லேப் செய்தல்) வரவும். இந்திரியம் அதிகரிக்கும். லிங்கம் வலிவு தரும்.

### சன்னிக்கண்டூஷ (நாமுஸ்தீர) பூச்சு

- உருத்திராக்கங்கலங்கொம் போது மக்ரா காரமுடன்
  பருத்த அரத்தை திற்பலியும் பவளம் முத்து முலைப்பாலில்
  அரைத்துக்கர்ப்பூரங் கூட்டி அரம்போன்றிருக்கு நாவினில் தேய்
  உரத்த சிரத்திற் சன்னியெல்லா மோடி ஒழிக்கும் கண்டீரே.

### நீர் மாந்தப் பூச்சு

- வேலிப்பருத்தி இலை, கஞ்சா இலை, குன்றி இலை, வசம்பு, ஒரு உள்ளிப்பூடு, கருஞ்சீரகம், வெழுத்தறப்பிசின், சுக்கு, வெண்காரம் அரைத்து கொதிக்க வைத்து உச்சி வயிறு, உள்ளங்கால், உள்ளங்கை இவ்விடங்களில் பூச மாறும்.

### வியத்திக்குப் பூச்சு

- ஆமணக்கெண்ணெயில் இந்துப்பு பொடி செய்து குழைத்துப் பூசவும்.
- உள்ளியை அரைத்து நல்லெண்ணெயிற் குழைத்து நக்கி மேலும் பூசவும்.

### பேன் மடியப் பூச்சு

- காட்டுச்சீரகத்தைப் பழச்சாற்றால் அரைத்து தலையின் கூந்தலுக்குள் படும் படியாகப் பூசி வைக்கப் பேன் மடியும்.

### அசாத்திய தலைவலிக்குப் பூச்சு (பற்று)

- குங்குமப்பூ, அபின், விளாம்பிசின், பனை வெல்லம் கூட்டி அரைத்து இரண்டு வட்டமான தாளில் தடவி கன்னப் பொறிகளில் ஒட்டி வைக்க எவ்வித அசாத்தியமான தலைவலியும் நீங்கும்.

### வெண்குட்டப்பூச்சு

- நான்கு பங்கு காட்டுச்சீரகத்துடன் ஒரு பங்கு அரிதாரம் கூட்டிப் பசு வின் கோமயம் விட்டுக் குழம்பு பதமாக அரைத்து, வேண்டும் போது வெண்குட்டத்தால் வெழுத்துள்ள பாகங்களில் தடவி வர பழைய நிறம் மாறிச் சுபாவ நிறத்திற்குக் கொண்டுவரும்.

- சித்தர மூலப்பட்டையை அம்மிக்கல்லில் வைத்துக் குன்றி இலைச் சாறு விட்டரைத்து வெண்குட்டப் படையுள்ள இடத்தில் இலேசாகத் தடவி வரவும். அப்போ எரிவு கண்டால் சுத்த சலம் விட்டு சுத்தமாக அலம்பி விடவேண்டும். இப்படிச் சில தினம் செய்து வர வெண்குட்டத்தின் நிறம் மாறும். சிலவேளை வியர்க்கூர் போல் கொப்பளித்து விடும். அப்போது தேங்காய் எண்ணெய் தடவி வர ஆறுவதுடன் நிறமும் மாறும்.

## நரைமயிர் கறுக்கப் பூச்சு (லேபம்)

- கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், மாதாளம்பட்டை, இரும்புத்தூள், தாமரைக்கிழங்கு, புல்லாந்திப்பட்டை வகை பலம் 5 இவற்றில் அயப்பொடியைக் கையாந்தகரைச் சாற்றால் அரைத்தும் மற்றவையை இடித்து வடிகட்டியும் கலந்து ஒரு இரும்புப் பாத்திரத்திலிட்டு 8 படி கையாந்தகரைச் சாறு விட்டுக் கலந்து மேல்மூடி சிலை மண் செய்து ஒரு மாத காலம் பூமியிற் புதைத்து வைத்து எடுக்கவும். தேவையான போது1, 2 களஞ்சு அல்லது தேவையான அளவு எடுத்து ஆட்டுப்பாலிற் குழைத்துத் தலையிற் பூசி, முத்தாமணக்கு இலைகளால் தலையை மூடிக்கட்டி நித்திரை செய்து காலையில் தலை முழுகவும். இப்படி அடுத்து 3 தினம் செய்ய நரைமயிர் கறுத்து விடும்.

## கழலைக்குப் பூச்சு

- கடற்சில் குப்பைமேனி சமனிடை தேனில் அரைத்துப் பூசவும்.
- சங்கு சுட்ட சாம்பல் தயிர்வளைச் சாற்றில் அரைத்துப் பூசவும்.

# தப்பல்

**பித்தத்துக்கு தப்பல்**

- பசுப்பால், முசுமுசுக்கை, கீழ்க்காய் நெல்லி இவை சாறு, சிற்றகத்தி இலைச்சாறு, தேசிப்பழச்சாறு, செவ்விளநீர் இவை சமனெடை கலந்து சந்தனம், வில்வைவேர் அரைத்துக் கரைத்து 4:1 ஆக காச்சி சிரசில் தப்பி முழுக வார்க்கவும். பித்தம் பைத்தியம் தீரும்.

- குமரியின் வயிற்றினுள்ளே குறுஞ்சிறுபயறிட்டுப்பின் ஒரு நாள் வைத்து பயறை எடுத்துத் தின்ன நெஞ்சில் பித்தம் அரைத்து தப்பி முழுக சுழறலைப் பித்தம் தீரும்.

- பெருமரத்துப் பட்டையை தேசிப்புளியில் அரைத்து தப்பியிருந்து தலை முழுக பைத்தியம் மாறும்.

- பித்தம் மீறித் தலையை சுழற்றிடில் பிரியமான இலாமிச்சிருவேலியும், சித்தமற்றிடு செண்பகம், சந்தனம், சீரகம், சீதுளாய்த்துளிர் பசுப்பாலில் தப்பித் தோயவும். சக்தி கெட்டுப் பெலன் கெட்டுப் பைத்தியம் தப்பி ஓடித் தனிவழி போகுமே.

- கோட்டம், கார்புகா, அரிசி, நற்சீரகம், பாசிப்பயறு, பசுப்பாலில் அரைத்துக் கரைத்துக் காச்சி இறக்கிக் தப்பியடுத்து தோயவும். பித்தம் தலை அம்மல் நீர்க்கோவைகளை பரிகரிக்கும்.

- பேய்ப்புடலும், மிளகும், தேசிப்புளியில் அரைத்து 6 மணிக்கு தப்பி 10 மணிக்கு தோயவார்க்க.

- பசுவெண்ணெய் புதுப்பானையிலொட்டி நீர் போக்கி வெண்ணெயுடன் காஞ்சூரம் பழத்தைக் கசக்கி சிரசிற்றப்பி தோய வார்க்கவும்.

- நெல்லிக் கனியதன்றோலொடு நிகரில் சிறுபயறு வெல்லக் கொளுமா வெண்ணெயு மேவும் அதிமதுரம் வல்லிக் கொடி இடையாய் நன்மலக்காயிவை 5ம் சொல்லிற்பனி நீராவரை சிரமர்த்தனே சொல்வாம் .

- ஆவெண்ணெய் கொண்முன் பெய்யதி மதுரங்கொழுமப்பால்
  காவுந்திய சந்தக் கொளும் பின்னாமலகனியே
  தாவும் சிறுபயறும் அதன் பின்னாமெனச் சாற்றும்
  மேவும் சீரகராதமும் தேய்த்தேமுழுகாயே.

## பீனிச வில்லைத் தப்பல்

- கடுக்காய், நெல்லிக்காய், மிளகு, கஸ்தூரி மஞ்சள், வேப்பம் விதை வகை பலம் க. கரிப்பான் சாற்றால் 4 சாமமரைத்து 10 வில்லைகளாகத் தட்டி வெயிலிற் காய வைத்து வேண்டும் போது ஒரு வில்லையைப் பசுப்பால் விட்டு அரைத்து நன்றாய் தேய்த்து 4 நாளைக்கு ஒருதரம் முழுக பீனிசம் நீங்கி விடும்.

## மயிர் உதிர்ந்தால் தப்பல்

- மா, எலுமிச்சை, நாரத்தை, கொழுஞ்சி, மாதுளை, விளா இவைகளின் வித்துப் பருப்புகளை சமனெடை பசுப்பாலில் அரைத்து கொதிக்க வைத்து ஒரு மண்டலம் வரை காலையில் தப்பி இருந்து மாலையில் ஸ்நானம் செய்து வர தலைமயிர் கழிதல் மாறும்.

## காது மந்தத்துக்குத் தப்பல்

- கையாந்தகரை, நாயுருவி, சங்கு, தூதுவளை, வேலிப்பருத்தி இவைகளின் இலையும் எருக்கலம் பூவும் ஓர் நிறையாய் தட்டி அரைத்து 10 நாள் காலையில் தப்பியிருந்து மாலையில் ஸ்நானம் செய்யத் தீரும்.

# கட்டு மருந்து புட்கை பற்று

### நோவுக்குப் புக்கை

- பாலைப்பட்டை, புல்லாந்திப்பட்டை, ஓதியம்பட்டை மூன்றையும் இடித்துப் பனிச்சாமிப் புக்கையில் சேர்த்து வைத்துக் கட்டமாறும்.
- ஓதியம்பட்டை, நாவல்பட்டை, புல்லாந்திப்பட்டை, பச்சைமஞ்சள், நீர்வற்றல் தேங்காய் இவற்றில் முதல் தேங்காயை இடித்துப் பின் பட்டைகளைப் பொருக்கு நீக்கி சேர்த்து இடித்துக் கறுத்தச்சாமியரிசிப் புக்கையைச் சேர்த்து இடித்துக் கட்ட மாறும்.
- பருத்தி, குன்றுமணி, உத்தமாகாணி இவை சாறு அரிசி, மஞ்சள், உழுந்து இவை மூன்றும் மா புக்கை கிண்டிக் கட்டவும்.

### நோ பற்று

- சாளியா, கரியபவளம், காயம் சமனெடை கோழிமுட்டை வெண்கரு விட்டு அரைத்து பற்றிடவும்.
- மருதம்சருகு, சுட்ட சாம்பல், மஞ்சள், கரியபவளம், சாளியா, நல்லெண்ணெய் விட்டு அரைத்து பின் முந்திரிகை அரக்கு விட்டு அரைத்து பின் வெண்கரு விட்டு அரைத்து சீலையிலூட்டிக் கட்டவும்.
- ஊரி, பச்சை மஞ்சள், சுண்ணாம்பு, வெண்கரு விட்டரைத்து பற்றிடவும். (ஊரி நீக்கியும் செய்யலாம்)

### முறிவுக்குப் புக்கை

- நறுவிலி, மாவிலங்கை, முருங்கை இவை பட்டை நத்தைச்சூரிவேர் நாலும் சமனெடை இடித்து நன்றாய்க் கொதிக்கிற வெந்நீரில் ஊறப் போட்டு அரைத்து கொதிக்க வைத்து முந்தின தூளுடன் கிளறிப் பிசைந்து முறிந்த இடத்தில் அணைத்து மூங்கில் சீவிக் கட்டவும். கட்டும் போது அரிசி உலையிலிட்டு கமலாக்கினி எரிப்பில் அரிசி பொங்கும் போது அவிழ்த்து விடவும். முறிந்த எலும்பு பொருந்தும் பொருந்திய பின் எண்ணெய் போடவும்.

## நோ பற்று

- **ஒற்று:** ஆமணக்கு இலை அரிந்து பானையில் போட்டு நீர் விட்டு வேடுகட்டி வேட்டின் மேல் பச்சை மஞ்சளும் பருத்தின் கொட்டையும் இடித்து 2 பொட்டனி கட்டி அவித்து 3 நேரம் ஒற்றி நொச்சி இலையும் பழத் தேங்காய்ப் பூவும் முன்போல் அவித்து 3 நேரம் ஒற்றி 3 நாள் சென்ற பின்.

- **பற்று:** பாலை, ஓதி, வேம்பு, நாவல் பட்டை இடித்து 4:1 ஆக்கிய நீரில் வேம்பு, விளா, ஓதி 3ம் பிசின் கூட்டி அவித்து உள்ளி, உலுவா, கடுகு, சாளியா, கொடும்புளி, வெழுத்தல் சுக்கு, கருங்கறையான் மண் கள 2, மஞ்சள்மா, குரக்கன்மா வகை படி கால், நீர் விட்டு அரைத்து கலக்கி காச்சி குழம்புப் பருவத்தில் அம்மியிலிட்டு கோழி வெண்கருவாலாட்டி பசைப்பருவத்தில் சீலையிலூட்டிப் பற்றிட தீராத நோ, பழைய நோ, சகல நோவும் தீரும்.

## மூலக்கொதி கடுப்பு உளைவுக்குப் புக்கை

- கற்றாழஞ்சோற்றை 2 அல்லது 3 நீரில் கழுவி அத்துடன் ஈரஉள்ளி சிறிதாயரிந்து கலந்து ஓட்டில் வறுத்து வேப்பெண்ணெய் விட்டுக் கடையவும் குக்குடாண்ட வாலக்கருவும் ஒன்று விட்டு மசித்துப் புக்கையாக்கிக் கட்ட மாறும்.

- வட்டத்துத்தி இலையையும், வெங்காயத்தையும் அரிந்து ஆமணக்கு நெயில் வதக்கி மூலமுளைகளின் மேல் வைத்து கட்டினால் வேதனை நீங்கும்.

## கடற்தேங்காய்ப்பற்று

- எட்டிக்கொட்டைச் சூரணம் அரை பங்கு, மான்கொம்புத்தூள் 1 பங்கு, கடற்தேங்காய் 2 பங்கு (அரை கள. 1 கள. 2 கள.) இவற்றை ஒன்றுகூட்டிக் கல்வத்திலிட்டு சுத்தசலம் விட்டு அரைத்துக் கட்டி அரையாப்பு கண்டமாலை மண்ணீரல் வீக்கங்களின் மேல் பற்றுப் போட்டு வர சிறிது நாளில் குணமாகும்.

- கடற்தேங்காய், சுக்கு, அபின், காயம் சமனெடை வெங்காயச்சாறு விட்டு அரைத்து முற்கூறப்பட்டது போல் பற்றிட முற்றி கூறிய நோய்கள் குணமாகும்.

## எருத்துக்குக் கட்டு மருந்துகள்

- இலைக்கள்ளி இலைபறித்தே இதுகழு நீரில் வெந்து
குழைத்திடப் பிசைந் தெடுத்துக் கொண்டதிற் கட்டிப் பின்பு
கழற்கொடி இலையும் உப்பும் கருதுபுங்கிலையும் இன்னும்
நிலக்குமிழ் இலையும் கூட்டி நெகிழவே கட்டிடாயே
தோற்று பொற் கொன்றைப்பன்னம் தொகுத்திடித்ததிலே கட்டி
ஊற்றின் மேற் கொற்றான்றன்னை இடித்து வாயுலரக்கட்டி
ஏற்றிடும் உள்ளி மஞ்சள் இண்டிலையதுவுங் கூட்டி
மேற்படக் கட்டிலன்றே விட்டெகுத் தோடிப் போகும்
சாற்றிடுமிவையே யன்றித்தகுமுறை இன்னுங்கேளே.

## குடல் அண்ட கழவேறு வாதக் கட்டு மருந்து

- புங்குசங்குப்பி நிம்பமும் கொற்றான் புனலிகளுடன் கிலுகிலுப்பை அங்கையிற் பிறங்கை தன்னிலு நாறிஇலை அடம்புள்ளி மால்வசம்பு இங்கிவையேல்லாம் இடித்தபின் ஈரம்அறவறுத்தொற்றியே கட்டிற் பொங்கிய கழலில் வலிகளும் விட்டுப் பொருமலும் போமெனப் புகன்றார்.

- சிற்றாமணக்கிலையில் சிற்றாமணக்கெண்ணெயைத் தடவி வதக்கி பீஜத்தின் மேல் வைத்துக் கட்டிவரலாம்.

- தைவேளை, மணித்தக்காளி, இவை சமனெடை ஒன்று சேர்த்து வதக்கி பீஜத்தின் மேல் வைத்துக் கட்டி வரலாம்.

## திருக்கை முள்ளுக்கு கட்டு மருந்து

- சுக்கு, மிளகு, முருங்கைப்பட்டை, முருக்கம்பூ, பொன்னாவரசம்பூ, தேங்காய்பூ வறுத்துத்தெள்ளி வெண்ணெய் விட்டுக் கட்டவும்.

## அம்பு, முள் கக்கக் கட்டு மருந்து

- எலியின் தலை வால் நீக்கி வயிற்றைப் பிளந்து குடல் நீக்கி, சிதைத்து அம்பு முள் தைத்த இடத்தில் வைத்து கட்ட வெளியாக்கும்.

## முள்ளு வெளிப்படக் கட்டு மருந்து

- எள்ளு அல்லது எள்ளு இலை அரைத்து முள்ளுத் தைத்த இடத்தில் வைத்துக் கட்ட முள்ளை வெளிப்படுத்தும்.

## கட்டுப் பழுக்க கட்டும் மருந்து

- கழற்சி, மாதுளை, சீந்தில், காட்டாமணக்கு, எருக்கலம்பூ, குன்றுமணி, பனிச்சை, குறிஞ்சா, குருவிச்சை, ஓதி, பொன்னாவரை இவை இலை கற்றாழை நீரில் அவித்து கட்ட பழுக்கும். வீக்கம்மாறும்.

## கட்டு உடைக்க கட்டும் மருந்து

- மைலாலக்கடி 1 பலம், கடல்நுரை 1 பலம், கிராம்பு 1 பலம், நீர்முள்ளிவிதை 3/4 பலம், தனித்தனி சூறணித்து சிறிது நீர் விட்டுப் பிசைந்து கல்வத்தில் புரட்டிக் கொடுத்திடிக்க மெழுகுபோலாகும். சிறிதெடுத்து நூல் கனமாக தட்டி புதுத் துணியால் வரிந்து கட்டி தண்ணீர் விட்டுக் கொண்டு வருக. அதாவது எப்பொழுதும் அவ்விடம் ஈரமாக இருக்க வேண்டும். இங்ஙனம் இரண்டு நாளைக்கொரு முறை புதிதாகக் கட்டிக் கொண்டுவர இரண்டொரு தினத்தில் உடைக்கும்.

## அரையாப்புக் கட்டு கட்டும் மருந்து

- கற்பூரம், சாம்பிறாணி, மூசாம்பரம், காயம் முதலில் சாம்பிறாணியை கல்வத்திலிட்டு நன்றாயரைத்து வஸ்திரகாயம் செய்து அதனுடன் கற்பூரம் சேர்த்து கை ஓயாமல் அரைக்கும் போது இளகும். அக்கால் மிகுதிச் சரக்குகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கூட்டி அரைத்து இளகிய பதத்திலேயே ஒரு புதுத்துணியில் தடவி வைத்துக் கொண்டு வேண்டும் போது நெருப்பனலில் காட்டிக் கட்டியின் மீது போட்டு அதன் மேல் ஈயத்தகட்டையேனும் மண்ணேட்டையேனும் வைத்து கச்சையால்

வரிந்து கட்டி 3ம் நாள் அவிழ்க்கக்கட்டி கரைந்திருக்கும். ஒருகால் தவறின் மீண்டுமொரு முறை (3நாள்) கட்டத் திண்ணமாய் கரையும். கட்டி சீழ்பிடித்து துன்பஞ் செய்யின் சரக்குகளை அரைக்கும் போது 1/2 அல்லது 1 மிளகுப் பிரமாணம் சங்குப் பாஷாணம் சேர்த்தரைத்து சீலையில் தடவி கட்டிக்குப் போட 3ம் நாள் உடைக்கும்.

## நகச்சுற்று சிலந்திக்கு கட்டு மருந்து

- நகச் சுற்றுக்கும், நரம்பிற் சிலந்திக்கும் புகலு மஞ்சள் புகையிலை வெற்றிலை இகலு நிம்பத்திலெண்ணெய் பெருமருந்தகல நன்றாய் வறுத்துக் கட்டாறுமே.

## கட்டு சீ இழக்க புக்கை

- குருவிச்சை, கொவ்வை, மாதுளை, காட்டாமணக்கு, இவை துளிர் தேங்காய்ப்பாலில் கடைந்து கட்டவும். சீ இழக்கும்.
- எருக்கலம்பாலில் மஞ்சளை உரைத்து கடதாசியிற் பூசி ஒட்டிவிட ஆணிக்கூட்டை (அரித்து கரைத்து) இழப்பதோடு சீயும் இழக்கும்.

# ஒற்றடங்கள்

## சிநேக பொட்டனி

- திரிகடுகு, கடுகோமம், திரிபலை, கருஞ்சீரம், வெறியுறு மாசாளி விதை யொடுகார் கோலும் செறியுறு சனிநாயன் சிறுபுனை விளைவீசம் நறைகமழ் அகிலேலம் நாகணமுலுவாவே மதுகமொடழி செட்டி மகிழோடுமா வெட்டி பொதியவிள் சிறு சென்னை புங்குடனேரண்டம் கதுவிய வீரச்சவ் கொம்மடி காற்பாசம் முதிரையொடே மாடம் முருங்கையுமிவை வித்தே முள்வளைமுயிறண்டம் மூரிகொள் பேய்ப்பீர்க்கு எள்ளதினொடுகுன்றி இன்புறுவரசன் வாழை வள்வகிர் வளர்தேங்காய் வசவொடுவசுவாசி வெள்பிசினுப் பைந்தும் விளங்கம குக்கில் இவை சமனிடி நன்றாய் இதையொருகிளியாக நவையறு நவதூசு நடுவொடு குமுலூணி தகையுறு மஞ்செண்ணெய்த் தயிலமதால் விரவிக் கலவை ஊற வெயில் வைத்துக் கட்டுவை பினை நீயே நீயொரு சட்டி சுட வைத்திநிம்ப நெய்யில் தோய்சிர நெற்றி பிடர் தோள் செவி சுற்றினிலும் நேயமொடொற்றிடவே நேரிழை மாமயில்கேள் போயிடும் வெப்புறுநோய் வாதமும் புகல்வேனே பிடர் வளை தனுவாதம் பிறவலி திமிர் வாதம் இடருறு விறை வாதம் எரியெழுசனி வாதம் சடமுறு மெரிவாதம் தளர்வு கொள் வெகு மோகக் கொடுமைசெய் கடுவேகக் குதிரையின் வலி போமே.

- மாவிலங்கை, எருக்கவுரி முருங்கை கான்றை மருவுபெருமருந்து நொச்சி குதிரைவாலி தேவிலங்கு கொடிவேலி வாதங்கொல்லிசிவதை புங்கு தூதுவளை சன்னி நாயன் கோவிலங்கு கள்ளி தில்லை குருந்து மூன்றும் குலவு முத்தமாகாணி தோடைமிச்சை காவிலங்கு கிலுகிலுப்பை ஆடாதோடை கன்முரிசு பேரமட்டி அமுக்கிறாவேர் இருப்பை முருக்குடனழிஞ்சில் முருங்கை சில்லும் இயல்வேம்பு கள்ளி, சணல் குருந்து புங்கு பருப்பு மகிழ் கழறசி எள்ளு மாவிலங்கை பகிர்ந்திடு சிற்றாமணக்கு விதைகளோடு நெருப்பிரசம் துரிசு துத்தம் சன்னிநாயன்னிகழ் வெழத்தல் கடுகு குக்கில் வசம்பரத்தை திருப்புமஞ் சள் மரமஞ்சள் கெந்திகாயம் தேவர்தருச்சதகுப்பை சுக்கு கோட்டம்

சரக்குடன் வேர் விதை சமனாயிடித் தொன்றாக்கி சாற்று நிம்ப எண்ணெய் தனில் வறுத்துக் கொண்டு பெருக்க நவசீலை தனிற் கட்டிக் கொண்டு பெரு நெருப்பு சட்டியின் மேற்சட்டி வைத்தே தருக்கு காச்சி சிரத்து மெங்கும் தப்பாமலொற்றி ஒற்றி வருவீராகில் திருக்குவலி பதினாலும் வாதம் சன்னி தீர்ந்து விடும். சிநேக பொட்டனியிற்றானே.

- பருத்தி விதை அல்லது ஆமணக்கு விதையும் தேங்காய்ப்பூவும் துவைத்துப் பொட்டனி கட்டிப் பிடிக்கவும் கோழை தீரும்.

- அழிஞ்சில் விதை, காரெள்ளு, கொள்ளு, கடுகு, முத்தற் தேங்காய், முருங்கை விதை, கழற்சி விதை, ஆமணக்கு வித்து, உழுந்து, புங்கங் கொட்டை, சதகுப்பை, உள்ளி, வாலுழுவை, கருஞ்சீரகம், வேப்பம் விதை, வசம்பு, சுக்கு இவை மாவாக்கி தேங்காய்ப்பூவிற் சேர்த்து தேசிப் புளி விட்டுப் பிசறி வேப்பெண்ணெய் விட்டுப் பொட்டனி கட்டிக் காச்சி வேப்பெண்ணெய் தெளித்துப் பிடிக்கவும். திமிர் விறைப்பு சன்னி பலவும் தீரும்.

## வாத ஒற்றடம்

- சதுரக்கள்ளியை அவித்துப் பிழிந்து நாலொன்றாய் வற்றக்காய்ச்சி அந்த நீரை ஒரு பானையில் விட்டு வண்டு கட்டி வண்டின் மேற் பச்சரிசி மாவைப் பொட்டனியாகக் கட்டி வைத்து மூடி அவித்து எடுத்து ஒத்தணம் செய்ய நன்று.

- வீழியிலை, பிண்ணாக்கு, பூண்டு, ஆவாரை இலை, திரிபலை இவைகள் சமனெடை இடித்து பொட்டளி கட்டி விளக்கெண்ணெயில் வெதுப்பி ஒத்தணம் செய்து கொள்ளத் தீரும்.

## குதிவாத ஒற்று

- திருகு, கள்ளி, காய்ந்த கொம்பு, வெதுப்பி ஒற்றேன்.

- செங்கல்லை நெருப்பில் காய்ச்சி 7 எருக்கலை இலை அடுக்கி சூடு பொறுக்க ஒற்று. (அபினும் இந்துப்பும் இலைக் கள்ளிச் சாற்றில் பூசலாம்)

## வாதம் 80க்கும் பொதுவான ஒற்றடம்

- புங்கு, ஆமணக்கு, வேம்பு, எருக்கலை, ஆடாதோடை, வாதமடக்கி, நொச்சி இலை 7ம் இலை வகை ஒரு பிடி, குறுணலாயரிந்து முருங்கப் பட்டை 1துண்டு, சுக்கு 1 துண்டு, கடுகு ஒரு மேசைக்கரண்டி, ஒரு சிறங்கை தேங்காய் கயர், இவை நான்கையும் நன்கு அரைத்தெடுத்து முந்திய இலைகளோடு பிசைந்து 3 பொட்டனியாய் கட்டி 1/4 படி வேப்பெண்ணெயை கொதிக்க வைத்து அதில் அப்பொட்டனிகளைப் போட்டு 15 நிமிடம் வேகும்படி விடவும். அப்பொட்டளங்களில் ஒவ் வொன்றாக எடுத்து குத்துள்ள பாகங்களில் நன்றாக ஒற்றடம் கொடுத் தல் வேண்டும்.

## சன்னிவாத ஒற்றடம்

- கொப்பரைத் தேங்காய் ஒன்று, உள்ளி இரண்டு பலம், வேப்பம் முத்து அரைப்படி ஒன்றாய் இடித்து பொட்டளம் கட்டி வேப்பெண்ணெயை கொதிக்க வைத்து அதில் அந்தப் பொட்டளத்தை வெப்பத்துடன் உடலாதியந்தமும் ஒற்றடமிட தீரும்.
- சாணம், இலுப்பைப் பிண்ணாக்கு, மஞ்சள், எருக்கலம்பூ இவைகளை ஓர் நிறையாய் வறுத்து துணியில் முடிந்து சூட்டுடன் ஒற்றடம் செய்து வரத் தீரும்.

## வாதக்கரப்பன் ஒற்றடம்

- ஓரி தட்டாமரை, முதியார் கூந்தல், கள்ளியிலை, எருக்கலம் பழுத்தல், உவாயிலை வாதமடக்கியிலை சமன் கொண்டு பாதியை இடித்துப் பொட்டனிகட்டி மற்றப் பாதியைப் பானையிலிட்டு 2 படி தண்ணீர் விட்டு வேடுகட்டி வேட்டின் மேல் பொட்டனியை வைத்தவித்து நோகுமிடத்தில் ஆமணக்கெண்ணெய் வெச்செனப் பூசி ஒற்றிட வாத கரப்பன் மாறும்.

## வியத்திற்கு ஒற்றடம்

- ஆமணக்கிலையும் எருக்கலம் பழுத்தலும் துவைத்துப் பொட்டளி கட்டி அவித்து ஒற்றவும்.

## உட்குத்து வீச்சு வாயு ஒற்றனம் சன்னி

- மாவிலங்கை கான்றை நொச்சி வாதங்கொல்லி
  வலி எருக்குப் பெருமருந்து சமூலங் கூட்டித்
  தாவிலொன்றாயிடித்தவித்துப் பிடிக்கிலொன்றுங்
  தவறில்லை வாங்கல் குத்து வீச்சுச் சன்னி
  நாவிறைப்புப் பற்கிட்டு வளைப்பு வாங்கல்
  நடுக்கமுடன் குத்துவலி வேர்வை தொய்வு
  தேவிலங்கு கதிரவன் முன் பனியே போலத்
  தீர்ந்துவீடு மென முனிவர் செப்பினாரே.

- மயிலடிக்குருந்தே உத்தமாகாணி மாவிலங்கை
  பயிலெருக்குடன் காற்றோட்டி பருவசம்புள்ளி ஒக்க
  அயிலுறக் கிளியாய் கட்டி அவித்துநல்லொற்றுப் போட
  இயலு முட்குத்தினோடு பிற வீச்சம் ஏகுமன்றே.

- வாதமடக்கி, எருக்கு, மாவிலங்கை, மயிலடிக்குருந்து, நொச்சி, ஆடாதோடை, கறணைப்பாவட்டை, குப்பிளாய், பருத்தி, உத்தமாகாணி எல்லாம் இடித்து பொட்டனி கட்டி ஒற்ற உட்குத்து பிறவீச்சு வாதம் ச ன்னி விறைப்பு திமிர் குத்து உளைவு எல்லாம் தீரும்.

- பூனைக்கழற்சிப்பருப்பு, சுக்கு, தேங்காய், பருத்தி இலை, ஒற்றிட உட் குத்து வீச்சுத் தீரும்.

# புகை வேது

## வாயு வலி சன்னிப் புகை

- சந்தனத்தூள், மரமஞ்சள், நற்சீரகம், சுக்கு, மிளகு, உள்ளி, மஞ்சள், இலுப்பைப் புண்ணாக்கு சமனெடை அரைத்தேனும் இடித்தேனும் தூளாக்கி சீலையில் பரப்பி திரியாக்கி கொளுத்தி நாசியில் புகை பிடிக்க வலி, இழுப்பு, பற்கிட்டல், மூர்ச்சை நீங்கும்.

- காயம், சுக்கு, சாம்பிறாணி, மிளகு, ஓமம், வெங்காரம், சிற்றரத்தை, கழற்பருப்பு, சீரகம், லிங்கம் சமனெடை எருக்கம் பாலால் அரைத்து சீலையிற் தடவி திரியாக்கி காய வைத்து பத்திரப்படுத்துக. வேண்டும் போது கொளுத்திப் புகைவிட நாசியில் தலைவலி சன்னி முதலிய தோஷங்கள் தீரும்.

- அரிதாரம், குங்குலியம், லிங்கம், நவச்சாரம், மிளகு, கருஞ்சீரகம், கார்க்கோலரிசி, சாம்பிறாணி வகை வராகனேடை, 1 குப்பைமேனி சாற்றில் அரைத்து சீலையில் தடவி திரியாக்கி வேப்பெண்ணெயில் தேய்த்து கொளுத்தி நாசியிற் புகைவிட சன்னி தீரும்.

- தைவேளை வேர், ஊமத்தை வேர், முருங்கைவேர், சீந்தில் வேர், உள்ளி, வசம்பு, மயிலிறகு, அரைகுறையாய் பொடித்து கம்பளியில் திரியாக்கி வேப்பெண்ணெய் தோய்த்து புகை பிடிக்க சுவாசிக்கச் செய்ய தாந்திரீக சன்னி சன்னி பாலர் சன்னி தீரும்.

- செம்மறியாட்டுக் கொம்பு, குதிரைக்குளம்பு, மயிலிறகு, மிளகு, வசம்பு, சுக்கு, கடுகு, பேயத்திவேர், அழிஞ்சில் வேர் வகை ரூபா எடை 1/4 ஒன்றாக்கி தூள் செய்து கம்பளியில் திரியாக்கி வேப்பெண்ணெய் தோய்த்துப் புகைவிட சுவாசிக்க வலி தீரும்.

- மிளகு, வசம்பு, சுக்கு, வெழுத்தற் பிசின், கெந்தகம், நிலவேர், பொடித்துப் புகை காட்ட சன்னி மயக்கம் தீரும்.

### நிதம்ப சூலைக்கு புகை

- பாம்புக் கண்டம், குந்திருக்கம், பருக்கையின்றிப் பொடி செய்து
  சாம்பல் போக்கித் தழலெடுத்துச் சட்டி தனிலிட்டுரலுள்ளே
  ஓம்பு மாணிதனைப் போக்கி உரல்மேல் ஆனை உற இருத்தி
  ஆம்பின் பொடியைத் தழல் தூவிப் புகைக்க வலிக்கள கன்றிடுமே.

- தக்க ஓமம் வெள்ளுள்ளிச் சருகு சர்ப்பக் கண்டமுடன்
  சுக்கு மிளகு திற்பலியும் சோமன் வசம்பு குந்திருக்கம்
  மிக்க வெளுத்தலவை நுணுக்கி மேவு முடம்பிலெண்ணெயிட்டே
  ஒக்க இருத்திப் புகையூட்ட யோனிச்சூலை அகன்றிடுமே.

### நீர்ச்சூலைக்குப் புகை

- ஈயங்கால்தனை உருக்கி இரசம் ஒன்றரையும் விட்டு
  நேயமாய் வட்டதாக்கி நெல்லிக் கெந்தகமும் தாரம்
  தூயெலிமருந்து துத்தம் துரிசு கார் கோலும் தூபம்
  ஆயதோரிலுப்பைக் கட்டியரு மஞ்சள் கழஞ் சொவ்வொன்றே
  ஏலவே நுணுக்கிக் கொண்டே இரதமு மதனுட் சேர்த்து
  சாலவே கிளியாய் கட்டித் தழலிடைப்பு கைத்திடாய் பின்
  கோல ஆமணக்கிணெண்ணெய் முழுகிடக் கூறுஞ்சூலை
  மேலும் நீர் கிரந்தி குட்டம் வெடித்திடும் பறங்கி போமே.

### சிரசூலைக்குப் புகை

- மானே முதிர்ந்தவரளுக்கு மருவும் இரதம் இருகளஞ்சு
  தேனே தாளகமரைக் களஞ்சு சேருந்துரிசு காற்களஞ்சு
  தானே வெள்ளைப் பாஷாணம் தறுகா தரைக் காற்களஞ்சு கொண்டு
  கானா ருமத்திலையுடனே கருதி அரைத்துக் குளிகை செய்யே
  செய்யும் குளிகை புகை ஏழும் சிறக்கப் பிடித்தே ஆறவிட்டு
  உய்ய நல்லாமணக்கெண்ணெய் ஒன்றை இடை விட்டே ஒரு நாள்
  மெய்யே குளிர்ந்த தண்ணீரில் முழுகப் பறங்கி சிரசூலை
  கையுங் கிரந்தி வெடிசூலை நாடா தோடும் கண்டீரே
  கண்டீருறைப்பு புளி உப்புக் கலவாதரை மண்டலம் கொள்க

விண்டே வயற்றிற் குரு திவிழின் மிகவே கஞ்சி வெண்ணெயுடன்
கொண்டால் வயிற்றினுளைவகலும் குளிரும் உடம்பு நோவும் போம்
பண்டை மாலினுருவாகும் பகாந்தாராயுண் மறையாந்தே.

### நாசி காபீடப் புகை

- இந்துப்பு, மிளகு, சாறணை, சீனி, நெய், முலைப்பால் விட்டரைத்துச் சீலையிற் தடவித் திரியாக்கி புகை விட மாறும்.
- வெள்ளைச் சீலையில் முலைப்பால் தோய்த்துக் காயவைத்து செயங்கொட்டைப் பாலுமுட்டிக் காய்ந்த பின் தேற்றாவிதை 4 சீவி அந்தச் சீலையிற் பரப்பி திரிப் புகை வேப்பெண்ணெயிற் தேய்த்திட மாறும்.
- சேங்கொட்டைப்பாலைத் தேற்றாவிற் பூசியே ஓங்கு வேப்பெண்ணெ யோடுறத் தேய்த்ததை ஏங்க ஊசியிலேற்றி எரிபுகை வாங்க நாசிகா பீடமும் மாறுமே.

### பற்புழுவுக்குப் புகை

- கற்கருமத்தை, கண்டங்காரீவிரை, வற்குமுள்ளி, மனோசிலை வாய் விளங்கற்கஞ்சேர் புகையாரக் குடிக்கவே பற்களிற் புழுப்பற்றற மாறுமே.
- பாகலிலைச்சாறும், சிறுவழதலைச்சாறும், நல்லெண்ணெயும் கலந்து வாயில் விட்டு அலசிக் கொப்பளிக்கப் பற்புழு விழும்.
- காற்றோட்டி வேர், உள்ளி, மிளகு, சுக்கு இவை சமன் பனங்கட்டி கூட்டியரைத்து சீலையிற் கட்டிப் பல்லிலடசப்புழு விழும்.
- பசுச்சாணியில் முளைத்த காளானை நசுக்கிப் பிழிந்த சாறும் நல்லெண்ணெயும் கலந்து செவியில் விட்டு உள்ளங் கையிலேந்தி யிருக்கப் பற்புழு விழும்.
- சாதிலிங்கம், சுக்கு, வசம்பு, சாம்பிறாணி, சந்தனம், மிளகு, சாறணைக் கிழங்கு, எருக்கலம் வேர்ப்பட்டை இடித்து மண்சுங்கானிலாயினும்

ஆவரைக் கட்டையினாற் செய்த சுங்கானிலாயினும் வைத்து ஆவரை விறகு நெருப்பிட்டு புகைகுடிக்கமிகுந்து நொந்தால் வேப்பெண்ணெயில் தேய்த்துக் குடிக்க பல்வலி பற்பேத்தை பற்புழு உவாதி தீரும்.

- வட்டுக் கத்தரி விதையை வேப்பெண்ணெயிற் புகைவிட பற்புழு விழும். (கண்டங்கத்தரியும் ஆகும்) 1 ரூபா எடை விதையை 1 கரண்டி எண்ணெயில் கலந்து வைத்திருக்கவும். இரும்புத்தகட்டை காச்சி அதைக் கொட்டி கண்சிரட்டையால் மூடி கண் துவார மூலம் வரும் புகையை சூழல் மூலம் இழுக்கவும். வாயினின்றும் நீர் வடியும். புழுக்களும் விழும்.

  (பானையில் தூவாரமிட்டு நீர் விட்டு புகை கட்டினால் புழுக்களை காணலாம்)

### குடல் வாதம் கழல் வலிக்கு புகை

- வியனுறு கழல் சுருங்கி மெத்தவே வலிக்குமாகில்
  நயமுறு மெண்ணெய் நெய்யால் நாடியே ஒழுக்கி ஒற்று
  மயமுறும் உள்ளி மஞ்சள் மகிழ் விதை நிம்ப வித்து
  துயரறப் பொடியதாக்கித் தூவியே புகைப்பதென்னே
  இதமுறுகு நீதிருக்கும் இயல்புடன் கூட்டிக்கொண்டு
  மதமுறப் புகைகள் காட்டி மருவிய கிரியை சொல்வன்
  விதமுறு கொற்றானுள்ளி வியன்கழலிலையும் கூட்டி
  கதமற இடித்தே ஒற்றிக் கட்டிடில மாறுமன்றே.

### கரப்பன் சொறி கிரந்தி வாதம் இவைக்குப் புகை

- சேங்கொட்டை இருபானியம் சேருமீ ரெண்கழஞ்சு
  வாங்குபாஷாணம் சூதம் மால்தாரம் வகையொவ்வொன்று
  பாங்குற அறுகழஞ்சுபகர் கெந்தி துரிசு துத்தம்
  ஓங்குசாதிலிங்க மெல்லாம் ஓரொன்று கழஞ்சு மூன்றே
  இடித் தெலாந் தூளாதாக்கி இடைசரி சீனச்சட்டி
  பொடித்திடு தூளுங் கூட்டிப் புகல் குப்பை மேனிகையான்
  அடுத்திடு சாறுதம் மாலரை துண்டை தூதின் காய் போல்
  எடுத்திடு புளியிலுற்ற புறணியிலெரி யிட்டுப்பின்

நேரமொருண்டை தூளாய் நெறிமுறை புகையை யூட்டி
பாருறு முப்பினோடு பாகற்காய் உணவு கொண்டே
காருறு மிளகு மற்றைக் கடுத்திடு புளியந் தள்ளச்
சேருறு கரப்பன் வாதம் திமிர் சொறி இவைகள் போமே.

### பவுந்திரம் கண்டமாலை கிரந்திக்குப் புகை

- ரசம், பாஷாணம், துரிசு, துத்தம், கெந்தகம் வகை விராகனெடை அரை, கொடிவேலி வேர்ப்பட்டை பலம் 1, கரிப்பான் சாற்றால் ஒரு சாமமாட்டி துணியிற்றட வித்திரியாக்கி உலர்த்தி தீக்கொளுத்தி ஆற்றிப் புணிகளிற் புகை காட்ட ஆறும்.

### பிளவைப் புண்ணில் புழு விழப் புகை

- ஆமிதுபிளவைப் புண்ணில் அடுத்திடும் புழுக்கள் விழக்
  காமுறு நெல்லிக் கெந்தம் கதித்த பொன்னரி தாரந்தான்
  நாமுறு வெண்பாஷாணம் நலமுறத் தூளாயாட்டி
  வேமுறு புளிப் பொருக்கிற் புகைத்திட புழுக்கள் வீழும்.

### வாய் வியாதி கிரந்தி கரப்பன் புகை

- கொந்தாளங்காய், சாதிக்காய், பவளப்பற்று, அக்கறாலிங்கம் சமனெடை தூள் செய்து மண்ணினாலேனும் பூவரசந்தடியினாலேனும் செய்த சுங்கானில் அடியிற் பூவரசம் பூ வைத்து மேலே தூள் போட்டு பூவரச ங்கரி நெருப்பு வைத்து புகை குடிக்கவும். உப்பு புளி விலக்கவும்.

### ஆறாத புண், புற்றுப் புண்களுக்கு புகை

- இரசம், நாவி, துரிசு, பச்சை காரீயம், வெள்ளைப் பாஷாணம், கெந்தகம், வெள்ளைக் குங்குலியம், வெண்காரம், லிங்கம், அரிதாரம் இவை 11ம் சமனெடை எடுத்து தூள் பண்ணி நெருப்புத்தணலில் போட்டு (சாம்பிறாணிப்புகை போடுவது போல) புகைப் பிடிக்க புற்றுப்புண், கிருமிப்புண், ஆறாத புண் முதலியன தீரும்.

## சித்தாதிப் புகை

- சொற்பாவுங் கண்டத்திற் கிரந்தி தீரத் துரிசு, துத்தம், அரிதாரம், சாதிலிங்கம், கற்பாவு மனோசிலை, நல்வசம்பு, சூதம், கராம்பு, குலக்காயேலம், கடுகு மூன்று பொற்பாகக் கழஞ்சிடை கொள் சம்பீரத்தின் புகல் கனிச் சாற்றாலரைத்து வீரவாளியிற்பாவும் பட்டினில பூசி வெய்யிலின் முகத்திலுலர்த்தி இனி இசைக்கக் கேண்யே கேளு மெழத் தேறாதகாகிதத்திற் இளரவைத்துச் சுருட்டி வெள்ளை நூலாற்க ட்டி நாளுமதை அந்தி சந்தி புகைக் குடித்து நலம் பெற ஊண் பத்திய மாயுண்டு வந்தால் நீள இனி நில்லாது கண்டந் தன்னில் நிகழ் கிரந்தி விற் புருதி கரப்பன்மாலை ஆழமிகும் வாய் ரோகம் கபாலந்தன்னிற் சொறி கரப்பன் பீநிசமும் தொலைந்து போமே.

- திரிகடுகு, வசம்பேலம், இருசீர் துத்தம், சிற்றரத்தை, சிறு நாகம்பூ, குலக்காய் மருவுடைய வெண்கோட்டம் கராம்பீருள்ளி வளர் வெள்ளைக் குந்திருக்கம் சமனாய்க் கொண்டு திருவுடைய சம்பீரப்பழத்தின் சாற்றால் தேர்ந்தரைத்து முசுமுசுக்கைச் சாற்றில் தோய்த்து உருவு பெற உலர்த்திய சீலையினிற் பூசி உலர்த்தி முன் போற் புகை குடிக்க ஓடும் தானே.

## தொண்டைப்புண் புகை

- அரிதாரம், இந்துப்பு, திற்பலி, அரப்பு சமனெடை, வேப்பெண்ணெயில் அரைத்து கடுதாசியிற் பூசி சுருட்டி வேப்பெண்ணெயிற் தோய்த்து புகை குடித்து விழுங்கி மூக்கால் விட தொண்டைப்புற்றுப் புண் இவை களாறும்.

## மிடற்று நோவுக்கு (குடிக்க) புகை

- கொட்டை நீக்கிய கடுக்காய் கார்புகா அரிசி வகை கள.1 இடித்துப் பருக்கனாகப் பொடி செய்து ஒரு சுங்கானில் வைத்து தணல் வைத்துப் புகை குடித்து விழுங்கி வெளியிட (1 நாளுக்கு 3 அல்லது 4 முறை) தொண்டை நோ அதிசயிக்கும்படி தீரும். புகை பரிமளமாயிருக்கும். சூட்டிலானால் 1 நாளில் கிரந்தி, சளி காரணமானால் 3 தினத்திலும் திடனாய் தீரும்.

### கல்லாடத் திரிப் புகை

- பண்ணிப் பார் மாமரத்தின் படிகம் கேளு
  பலமொன்றாம் கடிதடத்தினிறைவனீர் கால்
  கண்ணிழந்த பகவானும் புயண்டத் தோசை
  கத்தி வெட்டிக் காரமதிற் கிடை விராகன்
  எண்ணிப் பார் பசுப்பாலுக்கு 3ம் தம்பி
  எடுத்துக் கொள்பல மொன்றாய்ச் சேர்த்தரைத்து
  புண்ணிற் பார் திரிகொளுத்தித் தீபம் பார்க்கில்
  போகாத நோயெல்லாம் போகுந்தானே.

- பார்த்த பின்பு தீருகின்ற ரோகம் கேளு பரவுகின்ற ரணம் கிரந்தி பாண்டு சோகை
  சீர்த்தியுள்ள கால் தடிப்பு வற்றிப் போகும் திறமான சூலை எல்லாம் காணாதோடும்
  நேர்த்தியுடன் பிளவை கண்டமாலை நீங்கும் நீங்காத சொறி சிரங்கு நிலை கெட்டோடும்
  ஆர்த்தியுடன் கூற்றுவன் போல் வந்த ரோகம் அகன்றோடும் பண்டிதற்கு எழிலிதாமே.

### பாஷாணப் புகை

- கெவுரி வெள்ளை சாதிலிங்கம் கேளீரரசம் துரிசு துத்தம்
  கதியா தோ ரொன்றரைக் கழஞ்சு கள்ளிப் பாலாலரைத்துப் பின்
  இவை தான் சீலை தனி லூட்டி இசை பாக்கள வாயுண்டை செய்து
  தவிரா தொரு நாளொன்றாகத் தானே 7 புகை கட்டே
  கட்டாய் நீரிலுட் கிடத்திக் கருதுமெண்ணெய் முழுகிவர
  விட்டே ஓடும் வாதங்கள் மேவுஞ்சுரோணி நீர்வாயு
  கட்டுச் சூலை முடக்கம் போம் கைகாலு ழைதலிவைகலும்
  மட்டாயிதனைச் செய்துவரின் மாறச் சூலை மாறிடுமே.

**வங்கப் புகை**

- வங்க முரு குமுகந் தன்னில் வராயிரண்டு கழஞ்சுரசம்
பொங்குந் துரிசும் எலிமருந்தும் பொருந்தும் கார்கோல் கருஞ்சீரும்
அங்குஞ் சொன்னோ மரிதாரம் அரிய மஞ்சளரிதெகியும்
குங்குலிய முமிவையொன்று கூட்டும் சமனாய்க் குறிக் கொள்ளே
கொள்ளும் இரச வங்க வெட்டை குறையாதேழு பங்கிட்டுக்
கொள்ளும் பொடியும் ஏழு பங்காய் கூறுங் துணியிலுற முடிந்து
கொள்ளும் புளியம் பொருக்கதனைக் கொளுத்தித் தழலாயான பின்பு
கொள்ளும் கிழியை யதிலிட்டுப் புகையை யூட்டவல்லீரே
வல்ல புகைகள் தானேழம் புகைக்க வயிற்றில் மலத்தோடே
புல்லுங் குருதி கழிவதெனில் பொருந்தா வெண்ணெய் கஞ்சியினில்
மெல்ல நுகர்ந்து வெந்நீரும் விட்டே எண்ணெய் முழுகி வரச்
சொல்லும் வாத சுரோணிதமும் சூலை தானும் விரைந்தோடும்.

**ஆரோக்கியப் புகை**

- சொன்ன ஆரோக்கியந்தின் புகை தொடர் சூதமீயம்
பன்னுசாதிலிங்கம் வெள்ளைப் பாஷாணம் துரிசு, துத்தம்
மின்னரிதாரம் வெண்குந்திருக்கங் கெந்தகம் வெண்காரம்
நன்மனோசிலை வகைக்கு நவில் கழஞ் சொன்று தானே
தானொருக் கிருந்தை தானுங் கழஞ்சுபன் னொன்றினோடே
ஈனமில் சரக்குங் கூட்டி இடித் தெருக்கலம் பாலூட்டும்
மானமாங்கலையிற் பன்னான் குண்டையாய் குத்துக்கட்டி
ஆனைதோர் தழலி வேள் நாள் அடரவே புகைத்திடாயே
புகைத்தபின் குளிர்ந்த நீரிற் பொருந்தவே தோய்ந்து பால் நெய்
திகைத்திடா தருந்தி உப்புச் செழும் புளி கழித்துண்பீரேல்
பகைத்த புண் சூலைக்கட்டுப் பகர்வாத கரப்பன் சூலை
மிகுந்த சீழ் பாரமான வியாதிகள் பலவும் போமே.

**வத்திராஞ்சனப் புகை**

- ஈயமொன்று தழலினிலுருக்கி சூதம் இரு கழஞ்சு கூட்டி துரிசு, துத்தம், கெந்தகம், மனோசிலை, அரிதாரம், வெண்குந்திருக்கம் வகை களஂ.1

கடுகுரோகணி இரு கழஞ்சிலிங்கம் மூன்று பொடியாக்கி எருக்கலம் பாலூட்டிய சீலையில் 13 ஆக்கி திரி செய்து புகை குடித்து மூக்கால் உறிஞ்சி விட்டால் நாசிகாபீடம், நாசி கெந்தகம், சூலை, நாக்கொட்டி நாச்சிலந்தி உண்ணாக்கு கபாலசூலை மண்டைநோய் தண்டுப்பிளவை கிரந்தி பிளவை மூலவகைகள் பவுந்திரம் இவையெல்லாம் தீருமன்றே.

## வாதம் வாதகரப்பன் வேது

- பருத்தி, நிம்பம், ஆமணக்கு, நொச்சியோடு பகர்கான்றை, மாவிலங்கை, காலடக்கி எருக்குடனே தயிர்வேளை, ஆடாதோடை, எலுமிச்சை, தில்லை, புங்கு, தோடை வேளை அருத்தியுறும் பயறியுடனுத்தமாணி அத்த இலை எலாமவித்து வேது வார்க்க வருத்தமுறும் பிரமியத்தில் வாதமோடு வரு வாத கரப்பானது மாறிப் போமே.

## உட்குத்து பிறவீச்சு சன்னி வாதம் வேது

- மேவு திரிபுர மெரித்தான் மிளகுபாண்டன் மிகுதவிடு கற்றாழை மடல், பிண்ணாக்கும்
  ஆவுறு பால், சீனி இவை சேரக் கூட்டி அப்புவிட்டே அவித்ததனை வேது விட்டால்
  தாவுறுமுட்டுத்துடனே சன்னி, வாதம் தவிர்தலுண்மை பிறவீச்சுத் தானும் தீரும்
  பாவுறு நற்கலையுணர்ந்தோருறுதியாகப் பகர்ந்தனராமிது தெரிந்து பாருளோர்க்கே.

## வாதத்துக்கு வேது

- வேப்பிலையும், இஞ்சியும் அவித்து மூடி வேது விட வாதம் மாறும்.

## பித்த வெறிக்கு வேது

- இரண்டு தேங்காய்ப் பிரமாணம் மருதம் பட்டையை அரைத்து குறுணி வெள்ளாட்டு நீரிற் கரைத்து வேக வைத்து முக்காடு போட்டு வேது பிடித்து அப்பால் 3 செங்கல் பழுக்கக் காச்சிப் போட்டு ஆவி பிடிக்கவும்.

## பைத்திய பித்த வெறிக்குப் புகை

- வசம்பு புள்ளிச் சருகுடனே கடுகுதானும் மயிருடனே கபாலோடு ஆவின் கொம்பு
விசந்தணியும் நிம்ப விரை தேவதாரம் மீறாமற் சமபாகம் புகையிற் போடு
பசந்தவெறி 10 உடனே வாயிளைத்த சீ பயித்தியமாய் கல்லெறிதல் பித்தமார
முசந்து குதித் தோடுற்று முன் மத்தந்தானு மொழிந்து போம்.

## சீனப் புகை

- சீனப் புகைக்கு வகை கேளாய் சிறந்த சாதிலிங்கம் கடுகு
மூனமில்லாக் கெந்தகமும் ஒவ்வோரிடையாய் சமன் கூட்டி
ஆன பச்சைப் புகையிலைச் சாறதனில் நன்றாயரைத்த பின்பு
ஈனமில்லாதே கடலைப் பிரமாணமாயுலர்த்திடமே
உலர்ந்த மருந்தை எடுத்து வைத்து ஓட்டில் புளியஞ் சிராய்த் தணலில்
மலர்ந்தே புகைக்கப்புண் மட்டு மட்டாய்க் கவிர மூடியபின்
செலங் குமிழிக்குந் திரைவாங்கிச் சேர்த்து வைத்த பின்னந்தி
உலர்ந்த போதும் புகை யெடுத்துப் போக்காய் 7 பொழுதுனுக்கே.

## இலிங்கப் புகை

- கடுகு, சாதிலிங்கம், மனோசிலை, காசுகட்டி, கெந்தகம், துத்தம், அரிதாரம் சமனெடை பச்சைப் புகையிலைச் சாற்றில் அரைத்து உலர்த்தி வைத்திருக்கவும். புகை சிதறாமல் புளியஞ்சிராய்த் தணலில் விடவும். 7 நாள் பின் குளிர் நீரிடுத்தல் விளக்கெண்ணெய் தப்பல் முதலிடம் ஆற்றும் சிகிச்சைகள் கூறுகிறார். கரப்பன் புண், புற்று, கிரந்தி வியாதிகள் இவைகள் நல்லது.

# நையம்

## உக்கிராக்கிராணம்

- பெருமருந்த ரப்பு மஞ்சள் பிரண்டை வெண்ணொச்சி யோடே
  திரிகடு மாவிலங்கை செறிகராம் பாடா தோடை
  வருமொரு கழஞ் செடுத்தே வறுத்தரை வஸ்திரகாயம்
  பிரியமாய் செய்து பேணி வைத்திடிற் பிதற்றும் சன்னி
  பத்தொடு மூன்றினுக்கும் பகர்தோஷம் நீரின் கோவை
  மத்தமார் சிரத்திரைப்பு வாயுதான்றலையிற் கொள்ளல்
  ஒத்திடு மூக்கிலூத உரைத்த நோய் பலவுமோடும்
  மெத்து சித்திரத்தின் மூலி விளம்பு சாதிலிங்கம் கெந்தி
  இரதமுங் கூட்டி முன்னர் இயற்றிய வகையாய் செய்தே
  பெருநாக விடமேயாதி பெருவிட மடக்க சன்னி
  தருவலி எல்லாம் நீங்கும் சார்ந்திடு மூக்கிலூத
  உரைபேய்கள் சன்னி ஓட்டும் உக்கிரக் கிராணமாமே.

## பைத்தியத்துக்கு நசியம்

- பயத்தியமாக இந்தப் பார்தனிற் திரியும் பேர்க்கு
  வயித்தியம் செய்ய வேண்டில் மதுகத்தின் பருப்பினோடு
  சயித்தியஞ் சாரகத்திப் பருப்புடன் மகிழங் கொட்டை
  செயிர்த்திடு மிளகுங் கூட்டிச் செவ்வையாயரைத்துப் பின்பு
  எலுமிச்சம் பழச்சாற்றாலே இதை அரைத்துடனே மூக்கில்
  வலுவாய் நசியம் செய்து

## வங்கேஸ்வர நசியம்

- இரசம், மனோசிலை, கெந்தகம், சுக்கு, திற்பலி, அக்கறா, வெண்நாவி, கருநாவி, வெங்காரம் வகை 1 வராகன் மிளகு 9 வராகன் அரைத்து நசியமிட சன்னி தோஷம் மண்டைச் சிலேத்மம் இன்னும் பல ரோகம் குணமாகும்.

### சர்வே சுரநையம்

- இரதம், கெந்தகம், நாவிமனோசிலை, வெங்காரம், சுக்கு, மிளகு, திற்பலி இவைகளின் சமனெடை 4 சாமம் அரைத்து நையமிட சன்னி மயக்கம் மண்டைக்கபம் முதற்பல ரோகங்கள் சாந்தியாகும்.

### சன்னிக்கு நையம்

- சன்னிநாயன், காயம், சுக்கு, உள்ளி, கராம்பு, கார்புகா வசம்பு, வெழுத்தல் நிலவேர், திற்பலி அரைத்து சீலையிற் பூசி திரித்து நிம்ப நெய்யில் சுடர்த்தையம் இறக்கி நசியமிட்டு கண்ணில் அஞ்சனமிட்டுத் தீட்டி உட்புகட்ட சன்னி எல்லாமேகும்.
- சுக்கு, மிளகு, பச்சை மஞ்சள், வற்சநாவி, வாளம், திருநீறு பொடி செய்து எருக்கலம் பாலிற் குழைத்து உலர்த்தி நையமிட சன்னி வகை தீரும்.
- வங்காளத்தாறு மலையாளத்தானுடனே கீழ்க்கரை 6 வடமேற்கு தேசத்து 6 உள்ளூரின் 6 தனிக சரக்கு காரமுள்ள 2 ஆக 32ம் எருக்கலம் பாலால் அரைத்து குன்றி மாத்திரையாக்கி வைத்திருந்து நையமிட சன்னி தோஷம் தீரும்.

### கபால வலிக்கு நசியம்

- பூவம்பழமும் அரப்பும் புதியமிள கோடிந்துப்பும்
  யாவுமடங்க அத்திப்பாலது வோடெக்கப் பொடி கொண்டு
  தாவுமுலைப் பால் தனிற் கலக்கித் தப்பா திரண்டு நாசிவிடப்
  பாவும் கபாலவலி தானும் பசாசும் கணமும் பறந்திடுமே.

### கபால வரட்சிக்கு நசியம்

- நறுநெய் தனிலேகற்பூரம் நாங்கூழ் முந்திரி பேரீந்து
  மறுசெண்பகப்பூ துரிசு துத்தம் மானே ஒன்று கழஞ்சு கொண்டே
  உறுநற்பதத்தில் வடிநாசி யூடே நாலு துளி ஒழுக்கில்
  தறுகாதோடும் சிரவரட்சி என்றே பெரியோர் சான்றினரே.

- ஏலம், கோரோசனை, சீனி, இனிய முந்திரி, பேரீந்து
  கோலப் பச்சிலை, கற்பூரம், கோவின் நெய்யிலே வடித்து
  ஞாலத் தடைவே நாசிதனில் நாலு துளியை ஒழுக்கி வரக்
  கோலச் சிரத்தில் வரட்சியது குலைந்தே போகுமென உரைத்தார்.

**கபாலக் கிருமிக்கு நசியம்**

- வேலிப்பருத்தி, ஈருள்ளி, மேனி இவை மூன்றுடன் கொண்டு
  சாலத் தண்ணீர் விடுக கசக்கித் தப்பாதிரண்டு நாசிவிட
  மேலும் கிருமி கூட்டோட விழுந்தே போகும் உட்புண்ணும்
  சீலும் நீரும் இடி ஒடுவும் தினவும் தீரும் திண்ணமிதே.
- பாகலிலைச் சாற்றில் கிருமிசத்துருவை வறுத்து பொடித்து அலசி வாயிலிட்டு நாசியிலும் விட கிருமி சீ இரத்தம் தீரும்.
- ஆதளைக்கிழங்கினோடே ஆடுதீண்டாத மூலி
  கோதையே சிறுதக்காளிச் சாறெலாங் கூடவிட்டே
  ஓதிய சூடன்றன்னை மேற்பொடியுடனே கூட்டி
  தீதிலா நாசியூடே விடுவே நீ கிருமி தீரும்.

**வலிக்கு நசியம்**

- திரிகடு குள்ளி காயம் சேருமிந்துப் பரத்தை
  மருவுறு கராம்பினோடு வசம்பு வெண்கார மின்னம்
  வரு மதூகத்தின் கட்டியுடன் வசுவாசி சீனத்
  துரைபெறுகாரம் நல்ல பனரையின் பழமிதெல்லாம் அரைத்து முலைப்பால்
  கூட்டி நசியமிட குதிரை வலி சன்னி பேய் மூர்ச்சை வலி தீரும்.
- பூகம் பழமும் பழ அரப்பும் புதியமிள கோடிந்துப்பும் (பழப்பாக்குக் கதம்பை) அகத்திப் பாலோடு பொடி செய்து நசியமிட குதிரை வலி கபாவலிபேய்...
- வாங்கெருக்கன் நற்செடியில் வாழும் வெட்டுக்கிளியின்
  தேங்கு மிறகுக் கால் தெறித்துலர்த்தி ஏங்காது
  வேக வருந் தணலில் வேண்டி மிளகிட்டரைத்து (வறுத்து)
  காகவலிக் கோர் நசியம் காண்
  தினம் 4, 5 முறை நரம்புக் கூட்டிலுள்ள சீதளவாயு மயக்கம், மூர்ச்சை வலி தீரும்.

## அலகுப்பூட்டுக்கு நையம்

- முருங்கைப்பட்டை வசம்பு உள்ளி காயம் இவைகளைத் தைவேளைச் சாறு விட்டு சிதைத்து துணியில் முடிந்து நாசியில் நசியமிடத் தீரும்.

## முகவாத சன்னிக்கு நையம்

- கான்றை நொச்சிகள் கன்முரிசு நிலத்தின் வேம்பு காற்றோட்டி வட்டு மருக்காரை எல்லாம் ஆன்றவேர் வெள்ளுள்ளி வசம்பு மஞ்சள் அரியதிரிகடுகுலுவா வெழுத்தல் யாவும் ஏன்றபடி சமனிடித்துத் தூளதாக்கி எள்ளெண்ணெய் வேப்பெண்ணெய் 2ம் கூட்டி தான்றழலிற் கொதிப்பித்து நசியம் பண்ணச் சாருமுக வாத சன்னி தவிருமன்றே.

## வீபூதி நசியம்

- சுக்கு, வீபூதி, துரிசு மிளகுடன் மிக்க திற்பலி வேம்பின் பிண்ணாக்குமாம் வைக்கும் கெந்தி வகை அளவாகவே தக்க தும்பையின் சாற்றாலரைத்திடே
  நிழலுலர்த்தி நிதானமாய் மாந்தர்க்கு வளருமூக்கில் வகை பெற ஊதிட ஊறுஞ்சன்னி ஒதுங்கு முத்தோஷம் சளசளப்பொடு சார்ந்திடு வாயுவும் காது மந்தம் கண்ணோயும் விலகிடும் பேதம் பண்ணிப் பெலத்திடு நீர்க்கோவை
  சீதம் செய்யும் சிரத்திற்கனப்பும் போம் வாதம் செய்யும் வலிகாச மேகுமே.

## நையம்

- திரிகடுகு, சவுரிப்பழம், இந்துப்பு, பொரித்த வெண்காரம், கண்டங்கத் தரிப்பழம், நரம்பு நீக்கிய புகையிலை வகைக்கு பலம் கால், சமுத்திராப் பழம் பலம் 1, இவைகளை சிறிது காய்ந்த சட்டியில் வெதுப்பி அரைத்துப் பொடியாக்கி எருக்கலம் பால் விட்டு கால் மணி நேரம் அரைத்து மாத்திரையாகத் திரட்டி உலர்த்த வேண்டும் போது பொடித்த அல்லது கல்வத் தோடே காய வைத்தரைத்துப் பொடியாக்கி வைத்திருந்து நையமிட (ஒரு சிட்டிகை) தலைவலி சன்னி வலி, மூர்ச்சை பற்கிட்டல் குணமாகும்.

# ஏனாதிகள்

## கிரந்திக்கு ஏனாதி

- நன்னாரிவேர், கற்பூரவள்ளி இலை, கஞ்சாங்கோரை, குன்றுமணி இலை, இயங்கத்துளிர் இவை சாறு கொண்டு இருசீர் உள்ளி, திற்பலி, கோரோச னை பொடித்துத் தூவி கருப்புக் கட்டி கூட்டி குழம்பாகக் காச்சி நாக்கில் தடவி உண்ணச் செய்ய சிறு பீ கிரந்தி தீரும்.

- ஈருள்ளி, கற்பூரவள்ளி இலை, குன்றி இலை இவை சாறு பிழிந்து கடு க்காய், திற்பலி, கோரோசனை பொடித்துக் கூட்டிக் குழம்பாக்கி ஏனாதி தீத்தவும் கிரந்தி மாறும். மலங்கழியாவிடில் கடுகுரோகணி கருஞ்சீர் கூட்டுக.

## நாக்கிரந்திக்கு ஏனாதி

- செங்கத்தரிவேர், நன்னாரி வேர், கருஞ்சீரகம், இயங்கம் பழச் சாற்றிலூறவிட்டு அரைத்து நாக்கிற் தடவவும்.

## கிரந்தித் தொய்வுக்கு ஏனாதி

- புங்கம் வேர், துருவிப் பிழிந்த பால், கஞ்சாங் கோரைச்சாறு, விட்டுணு கிராந்திச்சாறு முலைப்பால் வகைக்கு மாகாணி க. திரிகடுகு, கோரோச னை, கற்பூரம், கற்கண்டு, நெய், தேன் வகை கள.3 ஏனாதி காச்சிப் புகட்ட கிரந்தித் தொய்வு ஈழை இருமல் தீரும். முலைப்பால் கூட்டியும் அளவில் கூடவும் சேர்க்கலாம்.

## இருமலுக்கு ஏனாதி

- நன்னாரி தூதுவளைவட்டு நல்லமிளகு திற்பலியும்
சொன்னார் கடுக்காய் இந்துப்புத் தூய நற்சீர் கற்கண்டு
பொன்னர் பதமாய் வறுத்திடித்துப் பொருந்துநறு நெய்தனிற்காச்சி
மின்னாரிஞ்சிச் சாறு விட்டு வெதுப்பியருந்த இருமல் விடும்.

### மூச்சு ஏனாதி

- அக்கறா 16, திற்பலி 12, சூடன் க. கல்லக்காரம் 32 ஏனாதியாயரைத்து நாக்குற்றடவி உண்ண மூச்சு உடனே நிற்கும்.

### சிலேற்பன (நெஞ்சில்) அடைப்பு ஏனாதி

- இருசீர்,உள்ளி,வசம்பு,மிளகு,துரிசு,புனரைப்பழம்,வேப்பெண்ணெயில் அரைத்துக் கொடுக்கவும். சளி வெட்டும் (உவாந்திக்கும்) கையாட்சி.

- இருசீர், மிளகு, சிறு திற்பலி, மதுரம், கடுக்காய், மாயாக்காய் இவற்றை வறுத்துப் பனங்கட்டி அல்லது நெய் கூட்டிக் கொடுக்கவும். தின்றபின் வெந்நீர் பருகவும். சிலேட்டும் இழுப்பு மாறும்.

### அக்கரம் சன்னிக்கு ஏனாதி

- நன்னாரி,தூதுவளை,ஆடாதோடை,நல்லவட்டுக்கத்தரிவேர்,நிலத்தினாகம், சொன்னார் சுக்கதி மதுரம், கடுக்காய், நற்சீர், தூயமல்லி மிள இந்துப் பேலம், கோட்டம், மின்னாருந் திற்பலி நல்ல சமதாகம் மிக்கதொரு நாகை உள்ளி மிகாமற் கூட்டி பொன்னாக வறுத்தாடா தோடைச் சாற்றில் பொருந்து நெய்யில் கொதிக்க வைத்துப் பொறுத்துண்பீரே பொறுக்குமிந்த ஏனாதி உள்ளே கொண்டு பொருந்து நிலவேர் சுக்குமரிசியுடன் பொரித்து நறுக்கி வெள்ளைச் சீலைதனிற் பொட்டாகக் கட்டி நாடோறு மருந்திவர தீர்கின்ற வியாதி இறுக்கு சிலேற்பான சன்னி சுரமுதலதாக ஏகிவிடு மக்கரத்தில் சுரசன்னியீறாய்ச் சறுக்கியகன்றோடுமென ஆயுண்மறை முன்னம் சாற்றியது தவறாமற் செய நன்று கானே.

### சன்னிக்கு ஏனாதி

- தூதுவளை நன்னாரி வட்டுக்களப்பன்னை துய்யபனரைப்பழச்சா
றோது நில வேருடன் கோழியின் காரமிசை யுற்ற திற்பலி வசம்பு
தீதில் கருமிளகுடன் கரிய நற்சீரகம் திடமுடனரைத்ததுண்டை
மிதுடனருந்தவே சன்னி 18ம் விரைந்தே பறந்தகலுமே.

### விக்கல் சத்திக்கு ஏனாதி

- ஏலம், பசு நெய்யில் அரைத்து கொடுக்க விக்கல் மாறும்.
- முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், நெற்பொரி, கராம்பு, ஏலம், திற்பலி, சாதிக்காய், தேனில் அரைத்து நாவிற்றடவ விக்கல் சத்தி மாறும்.

### காண்டாவுடத ஏனாதி

- உருத்திராட்சம், பவளம், முத்து, பொன், வெள்ளி, திற்பலி வகை க. நெற்பொரி, சக்கரை, மயிலிறகு சுட்ட சாம்பல், தேன், முலைப்பால் விட்டரைத்து நாவிற்றடவ சேடம் அரோசிகம் மாறும்.

# அஞ்சனம்

## கபாலவலிக்கு அஞ்சனம்

- உள்ளி, கடுகு, திற்பலி, மரீசமுடனேலம்
  தள்ளரிய சுக்கினோடு தானிவை கழஞ்சாய்
  விள்ளரிய வெற்றிலையின் நீர் விட்டரைத்தே
  எள்ளளவு கண்ணிலிடுவாய் சிரவலிக்கே

- உண்டை செய்து வைத்திருந்து வேண்டும் போது பொடி பண்ணிக் கண்ணில் அஞ்சனமிடவும்.

- தோல் சீவிய சுக்கை வேலிப்பருத்திச்சாறு விட்டு 2, 3 நாள் வெயிலில் வைத்துப் பின் உலர்த்தி பொடி செய்து முலைப்பால் நீர்க்கக்க கரைத்து வெள்ளைச் சீலையிலூட்டி உலர்த்துக. உலர்ந்தபின் திரித்து பசுநெய்யில் தோய்த்து எரித்து விழும் தைலத்தைச் சிமிழில் அடைத்திருந்து கண்ணீற்றீட்ட கபாவலி தீரும்.

## வலிக்கு அஞ்சனம்

- திற்பலி, மிளகு, நாகவல்லியின் சிறந்தகாம்பு
  பொற்புற அரைத்துக் கண்ணில் அஞ்சனம் போடுவீரேல்
  முற்படு வலிகளோடு பூதங்கள் மூர்ச்சையாதி
  சொற்பெறு சன்னி மற்றும் தொலைந்திடுமென்றார் முன்னோர்.

## சன்னிக்கு அஞ்சனம்

- பொட்டு நீக்கிய கராம்பு, சுக்கு, மிளகு, திற்பலி வகை அரை வராகனெடை பழச்சாற்றாலும் உமைத்தமிலைச்சாற்றாலும் 4 சாமமரைத்து பயறளவுண் டையாக்கி காய வைத்திருந்து சன்னி தோஷ சம்பந்தத்தால் சுபாவ நிலை மறந்து ஆடல் பாடல் ஓடல் பற்கிட்டல் மூர்ச்சை கண்டால் முலைப்பாலில் குழைத்து கண்ணில் இடத்தீரும்.

- வாகை விதை, சுக்கு, கடுகு, இந்துப்பு சமனெடை பழச்சாற்றாலரைத்து பயறளவுண்டை நிழலுலர்த்துக. ஒன்று முலைப்பாலில் கண்ணில் தீட்ட சன்னி தீரும்.

### கராம்பு மிளகுப் பேதி

- கன்னி மரத்தில் இரண்டு, மூன்று விரல் துளையும் படியான துவாரமிட்டு கெட்டி மிளகையாவது அல்லது மொட்டு நீக்கிய கராம்பையாவது போட்டு அதிலிருந்து எடுத்த சக்கையைக் கொண்டே சந்தில்லாமல் அடைத்துச் சாணம்பூசி 21 நாள் சென்ற பின் உள்ளிருக்கும் சரக்கை வெயிலில் காயவைத்து பத்திரம் பண்ணவும். காலையில் 2, 3 (மிளகை அல்லது கராம்பை) வெற்றிலையில் வைத்து மென்று தின்னும்படி கொடுக்க சுகமாக 3 அல்லது 4 முறை பேதியாகும் மறுநாள் பேதிக்கேற்ப கூட்டிக் குறைத்துக் கொடுக்கவும்.

### கற்கண்டு செயநீர்

- ஒரு புதிய கோழி முட்டையின் வெண்கருவை ஒரு தட்டையான கோப்பையில் விட்டுக் கரி நெருப்பனலின் மீது வைத்து ஈரம் சுண்டி அப்பம் போல் வேகும் படியாகவும் தீயாமலும் இருக்கும்படி புரட்டி புரட்டிக் கொடுத்து எடுத்து ஆறவிட்டு உழுந்தளவாக அரிந்து அதனுடன் ஒரு தோலா கற்கண்டு சூறணம் கூட்டிப் பிசரி பனியில் வைக்க ஜெயநீர் தேன் போலாகும். வடித்துப் புரட்டியில் பத்திரம் செய்க. கண்ணில் ஒரு துளி விட்டுக் கொண்டு வர கண் வியாதி பல போகும். ஒளியுண்டாகும்.

### எந்தப் பாகத்தையும் புண்ணாக்க மருந்துகள்

- ஏதும் கடித்த கடிவாயில் அதாவது இரத்தக் கசிவான இடத்தில் வெள்ளெருக்கம் பாலைத் தடவி விடப் புண்ணாக்கும்.

- தேகத்தின் எந்தப் பாகத்தையாவது புண்ணாக்கி நீரை வெளிப்படுத்த வேண்டுமானால் நாய்வேளைக் கீரையை அரைத்து வைத்து கட்டி வி தோல் சிவந்து புண்ணாக்கும்.

- முதலாவது போல் கடிவாயில் அல்லது இரத்தக் கசிவான இடத்தில் காடிக்காரத்தைத் தேய்க்கப் புண்ணாக்கும்.

# சர்பத் வகைகள்

## நன்னாரி சர்பத்

- 376 ரூபா எடை நன்னாரி வேர், துவைத்து ஒன்றரை படி நீரில் 6 மணித்தியாலம் ஊறவைத்து முக்கால் படியாய் வற்ற வைத்து வடித்து 37 1/2 ரூபா எடை சீனி கலந்து காச்சி பிசின் பருவம்.

  2 ரூபா எடை சர்பத் 4 ரூபா எடை நீர் ஆடுதாகம் காந்தல்.

- 25 பலம் நன்னாரி வேரை இடித்து இரண்டரை படி சலத்தில் போட்டு ஒரு இரவு ஊற வைத்து மறுநாள் 1 படியாக சுண்டக்காச்சி பிசையாமல் வடித்து 25 பலம் சீனாக் கற்கண்டு கூட்டி தேன் பதமாகக் காச்சி இறக்கவும். சிறு சூட்டுடன் போத்தலுள் விட வேண்டும்.

## சந்தன சர்பத்

- 2 பலம் சந்தனத் தூள் 10 பலம் நீரில் ஊற வைத்து மறுநாள் காச்சி 4 பலம் நீர் வற்றிய பின் வடித்து ஒன்றரை பங்கு கற்கண்டு 2 பலம் பனிநீர் சேர்த்துக் காச்சிப் பின் பதம் 2 ரூபா எடை சர்பத் உண்ண. மூலச்சூடு பிரமேகம்

- 10 பலம் செஞ்சந்தனம் இடித்து இரண்டரை படி சலத்தில் போட்டு ஒரு இரவு ஊற வைத்து அரை படியால் காச்சி வடித்து 10 பலம் பன்னீருடன் கலந்து 1 வீசை சர்க்கரை கூட்டி தேன் பதமாக காச்சி எடுக்கவும்.

## திராட்சைப் பழ சர்பத்

- பழரசச்சாறுக்கு சரி சீனி அல்லது கற்கண்டு இரண்டரை பலம் பன்னீர் விட்டுக் காச்சி பிசின் பருவம் 3 ரூபா எடை சர்பத் 6 ரூபா எடை நீர் பித்தம் சூடு கைகால் எரிவி தீரும்.

## மாதுளம் பழ சர்பத்

பழரசத்துக்கு ஒன்றரை பங்கு சீனி பாகு செய்து நீர் கலந்திருந்த பித்தம் சூடு.

## இஞ்சி சர்பத்

- ஆறேகால் ரூபா எடை இஞ்சியை துண்டாயரிந்து கால் படி வெந்நீரில் போட்டு 1 முகூர்த்தம் வரை தீயிலிட்டு வேக வைத்து இறக்கிப் பிசைந்து வடி கட்டியரசத்தில் 75 ரூபா எடை சீனி கலந்து அடுப்பேற்றி காச்சி பதமாய் இறக்கவும்.

  1 ரூபா எடை சர்பத் 2 ரூபா எடை நீர் கலந்து குடிக்கவும்.

## எலுமிச்சம்பழ சர்பத்

- எலுமிச்சம்பழ ரசம் அரை வீசைக்கு வெள்ளைச் சர்க்கரை 1 வீசை பதமாய் காச்சி இறக்கும் போது 1 பலம் பன்னீர் விட்டுக் கலக்கி இறக்கி 1 பங்கு சர்பத்துக்கு 2 பங்கு சலம் சேர்த்து குடிக்கவும். பித்தம், வாயுறல், பித்தக் கோளாறுகள் சாந்தமாகும்.

# கால அளவை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | நாழிகை | = | 24 நிமிடம் | | | |
| 2.5 | நாழிகை | = | 60 நிமிடம் | = | 1 | மணி |
| 1 | முகூர்த்தம் | = | 90 நிமிடம் | = | 1.30 | மணி |
| 1 | சாமம் | = | | = | 3 | மணி |
| 8 | சாமம் | = | 1 நாள் | | | |
| 1 | பட்சம் | = | 15 நாட்கள் | | | |
| 1 | மண்டலம் | = | 45 நாட்கள் | | | |
| 1 | பருவகாலம் (ருது) | = | 2 மாதங்கள் | | | |
| 1 | அயனம் | = | 6 மாதங்கள் | | | |
| 2 | அயனம் | = | 1 வருடம் | | | |

**குறிப்பு :** மண்டலம் என்பது 40, 45, 48 ஆகிய நாட்கள் என உலக வழக்கில் உள்ளது. எனினும், இந்தியாவில் பொதுவாக மண்டலம் என்பது 45 நாட்கள் எனவும், ஈழத்தில் 40 நாட்கள் எனவும் வழக்கத்தில் கொண்டுள்ளனர். இந்திய நாட்டின் வழக்கத்தை இங்குள்ளோர் முற்றாக மறுப்பதில்லை.

## சிறு பொழுது

| | |
|---|---|
| வைகறை | எற்பாடு |
| விடியல் | மாலை |
| நண்பகல் | யாமம் |

**நீட்டலளவை**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | விரல் கடை | = | ¼ அங்குலம் | = | 1.95 செ.மீ. |
| 1 | சாண் | = | 9 அங்குலம் | = | 22.86 செ.மீ. |
| 1 | முழம் | = | 18 அங்குலம் | = | 45.72 செ.மீ. |
| 1 | பாகம் | = | 72 அங்குலம் | = | 182.88 செ.மீ. |

| | | | | |
|---|---|---|---|---|
| * அரிசி எடை | | | = | 25 மி.கிராம் |
| பாசிப்பயறுப் பிரமாணம் | = | ½ கிறெயின் | = | 32.5 மி.கிராம் |
| மிளகு / உளுந்துப் பிரமாணம் | = | 01 கிறெயின் | = | 65 மி.கிராம் |
| குன்றிப் பிரமாணம் | = | 02 கிறெயின் | = | 130 மி.கிராம் |
| மஞ்சாடிப் பிரமாணம் | = | 04 கிறெயின் | = | 260 மி.கிராம் |
| தூதுவளைப் பழப் பிரமாணம் | = | | = | 100 மி.கிராம் |
| வெருகடி (பூனை) (ஐந்து விரல்) | = | 10 கிறெயின் | = | 650 மி.கிராம் |
| திரி கடி (மூன்று விரல்) | = | 15 கிறெயின் | = | 975 மி.கிராம் |
| கொட்டைப்பாக்களவு | = | | = | 5 கிராம் |

* மேற்கூறப்பட்ட அளவுகள் திட்டவட்டமாகச் சரியானதெனக் கருத முடியாது. ஏனெனில் மருந்துகளுக்கு மருந்துகள் வேறுபாடடையலாம். இதற்குக் காரணம் மருந்துகளிற் சேரும் சரக்குகளைப் பொறுத்து எடை வேறுபாடு அடையும். தாதுவர்க்கச் சரக்குகள் சேரும்போது அதனுடைய எடை கூடுதலாக இருக்கும். ஆகையால் ஒவ்வொரு மருந்துகளின் அளவுகளும் அவ்வவற்றுக்கேற்பக் கொடுக்கப்பட்டுள்ளதைக் கவனித்துக் கொள்ளவும்.

# மருத்துவ அளவைகள்

## நிறுத்தலளவை

| | | |
|---|---|---|
| 1 உளுந்து | 1 கிறெயின் (அண்ணளவு ஏறக்குறைய) | 65 மி.கிராம் |
| 4 யவம் | 1 குன்றி (2 கிறெயின்) | 130 மி.கிராம் |
| 1 மஞ்சாடி | 4 கிறெயின் (அண்ணளவு) | 260 மி.கிராம் |
| 6 குன்றி | 1 மாஷம் | 780 மி.கிராம் |
| 3.75 குன்றி | 1 பண எடை | 488 மி.கிராம் |
| 32 குன்றி | 1 வராகனெடை (1 டிராம்) | 4.15 கிராம் |
| 40 குன்றி | 1 களஞ்சு | 5.2 கிராம் |
| 10 வராகனெடை | 1 பலம் (பெரிய) | 41.6 கிராம் |
| 0.25 பலம் | 1 கஃசு அல்லது 1 கைசா | 10.4 கிராம் |
| 1 தோலா | 180 கிறெயின் | 11.7 கிராம் |
| 3 தோலா | 1 பலம் (சின்ன) | 35 கிராம் |
| 8 பலம் (சின்ன) | 1 சேர் | 280 கிராம் |
| 40 பலம் (சின்ன) | 1 வீசை (3 இறா, 2 அவு) | 1.4 கி.கிராம் |
| 50 பலம் (சின்ன) | 1 தூக்கு | 1.75 கி.கிராம் |
| 2 தூக்கு | 1 துலாம் | 3.5 கி.கிராம் |

## முகத்தலளவை

| | | |
|---|---|---|
| 360 நெல் | 1 சோடு | 33.6 மி.லீற்றர் |
| 5 சோடு | 1 ஆழாக்கு | 168 மி.லீற்றர் |
| 2 ஆழாக்கு | 1 உழக்கு | 336 மி.லீற்றர் |
| 2 உழக்கு | 1 உரி | 672 மி.லீற்றர் |
| 8 உரி | 1 நாழி (படி) | 1.344 லீற்றர் |

| | | |
|---|---|---|
| 4 நாழி | 1 குறுணி (மரக்கால்) | 5.376 லீற்றர் |
| 2 குறுணி | 1 பதக்கு | 10.75 லீற்றர் |
| 3 குறுணி | 1 முக்குறுணி | 16.1 லீற்றர் |
| 2 பதக்கு | 1 தூணி | 21.5 லீற்றர் |
| 3 தூணி | 1 கலம் | 64.512 லீற்றர் |
| 1 ஆழாக்கு | 8 பலம் 2 ½ அவு | 78.125 மி.லீற்றர் |
| 1 உழக்கு | 4 பலம் 5 அவு | 155.25 மி.லீற்றர் |
| 1 உரி | 8 பலம் 10 அவு | 312.50 மி.லீற்றர் |
| 1 நாழி | 16 பலம் 20 அவு | 625 மி.லீற்றர் |
| 1 போத்தல் | 19.2 பலம் 24 அவு | 750 மி.லீற்றர் |
| 1 படி | 32 பலம் 40 அவு | 1250 மி.லீற்றர் |

| | | |
|---|---|---|
| 1 தேக்கரண்டி (Tea spoonful) | = 4 மி.லீற்றர் | = 1 டிராம் |
| * 1 மேசைக்கரண்டி (Table spoonful) | =15 மி.லீ. | = ½ அவு |
| 2 மேசைக்கரண்டி | = 1 திரவ அவுன்ஸ் | |
| யானை மார்க் சோடா | = 375 மி.லீற்றர் | |
| பன்ரா (Fanta) போத்தல் | = 300 மி.லீற்றர் | |
| சாராயப் போத்தல் | = 750 மி.லீற்றர் | |
| பால்புட்டி | = 200 மி.லீற்றர் | |

| டிராம் (dr) | அவுன்ஸ் (oz) | துளி (min) |
|---|---|---|
| 1 " | - " | 60 " |
| 2 " | ¼ " | 120 " |
| 4 " | ½ " | 240 " |
| 6 " | - " | 360 " |
| 8 " | 1 " | 480 " |

| டிராம் (dr) | அவுன்ஸ் (oz) | மி.லீற்றர் (ml) | லீற்றர் (Litre) |
|---|---|---|---|
| 8 " | 1 " | - " | - " |
| 16 " | 2 " | - " | 1/16 " |
| 32 " | 4 " | 125 " | ⅓ " |
| 48 " | 6 " | - " | - " |
| 64 " | 8 " | 250 " | ¼ " |

* 1 மேசைக்கரண்டியையும் உச்சிக்கரண்டியையும் சமனாகக் கருதலாம்.